விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 16 செவ்வாய்க்கிழமை (01.08.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 225

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## யாழில் வன்முறைகள் பெருகிவிட்டதால்
# விசேட அதிரடிப்படை மூலம்
# தேடுதல், கைதுகள் தொடரும்
### பொலிஸ்மா அதிபர் பூஜித் திடீர் அறிவிப்பு

"வாள்வெட்டை நிகழ்த்தியது முன்னாள் போராளியே!" - பொலிஸ்மா அதிபர்



(யாழ்ப்பாணம்) யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் சட்டவிரோத சம்பவங்கள், வன்முறைகள் கையைமீறி போய்விட்டது. ஆகவே இவற்றை விரைந்து கட்டுப்படுத்த விசேட அதிரடிப்படையினர், படையினர், கடற்படையினர் உட்பட அனைத்து பாதுகாப்புத் தரப்பினரையும் களமிறக்கி விசேட தேடுதல் (ஒப்பிரேசன்) மற்றும் கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்தானந்தவுக்கு வெளிநாடு செல்ல நீதிமன்று அனுமதி

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே ஆகஸ்ட் 8 ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை வெளிநாடு செல்ல கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி நேற்று அனுமதி வழங்கி உத்தரவிட்டுள்ளார்.

இதனடிப்படையில், நீதிமன்றத்தின் பொறுப் 24

## அரச வங்கிகளிடம் அரச நிறுவனங்கள் ரூ. 88,913 கோடி கடன்

(கொழும்பு)

அரசுக்கு சொந்தமான 42 வணிக நிறுவனங்கள் அரச வங்கிகளிடம் இருந்து பெற்ற 88 ஆயிரத்து 913 ஆயிரம் கோடி ரூபாய் கடனை செலுத்த வேண்டியுள்ளதாக நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சு; வருடத்தின் நடுப்பகுதியின் அரச நிதி நிலைமை குறித்து 23

## மக்களின் சம்மதத்துடன் புதிய அரசியல் சாசனம்
### இரா.சம்பந்தன் நம்பிக்கை



(கொழும்பு)

மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் நிரந்தரமாகத் தீர்க்கப்பட்டால்மட்டுமே நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித்தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார். 02

## மணல் தட்டுப்பாடு நிவர்த்தி
### முதலமைச்சர் தலைமையில் முக்கிய மூன்று தீர்மானங்கள்



23

## வெலிக்கடை துப்பாக்கிச் சூடு
### இறப்புச்சான்றிதழ் இன்றி அவதிப்படும் உறவினர்கள்

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் 2012ஆம் ஆண்டு அரச பாதுகாப்பு படைகளின் துப்பாக்கிச்சூடு காரணமாக உயிரிழந்த கைதிகளின் உறவினர்களுக்கு இதுவரை இறப்பு சான்றிதழ்கள் வழங்கப்படாததால் அவர்கள் பெரும் சட்ட சிக்கல்களுக்கு ஆளாவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த கைதிகளின் உரிமைகளுக்காக போராடும் அமைப்பின் தலைவர் சுதேஷ் நந்திமால் டி சில்வா இதனை தெரிவித் 04

## தேர்தல்கள் நெருங்கும் வேளையில் இனவாதத்தை தூண்டுகின்றனர்!
### கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் சாடல்

(திருமலை)

தேர்தல் நெருங்கி வரும் போது இனவாதத்தையும் பிரிவனைவாதத்தையும் தூண்டி விடும் கலாசாரமொன்று நாட்டில் அண்மைக் காலமாக தோற்றம் பெற்று வருவது இலங்கையின் அரசியல் கலாசாரத்துக்கு பாரிய



அச்சுறுத்தலாக அமைந்துள்ளதென கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை திருகோணமலை கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றும் போதே நஸீர் 04

## அமெரிக்க துணைத் தூதுவர் முதலமைச்சருடன் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

யாழிற்கு வருகை தந்த இலங்கைக்கான அமெரிக்க துணைத் தூதுவர் றொபேர்ட் கில்ரன், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. 23

## கர்ப்பிணி கொலை; மறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஊர்காவற்றுறையில் கர்ப்பிணியான ஹம்சிகா என்ற பெண் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் கைது செய் யப்பட்டுள்ள சந்தேக நபர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் பதில் நீதவான் ஆர்.சபேசன் முன்னிலை 24

## இங்கு இடம்பெற்றது இனப் படுகொலையே
### விசாரணையில் சிவாஜி உறுதி



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்கு எதிராக வன்னியில் இடம்பெற்றது இனப்படுகொலை தான் என்பதை நேற்றையதினம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது தான் 23

## அரசியல், கல்வி எல்லாத்துறையிலும்
# இந்திய - இலங்கை உறவு மேலோங்கி வளர்ந்து வருகிறது
### யாழ்.இந்.துணைத்தூதுவர் நடராஜன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

அரசியல் ரீதியாக, கல்வி ரீதியாக, பண்பாட்டு ரீதியாக, எல்லாத் துறைகளிலும் இந்திய - இலங்கை இருதரப்பு உறவு எப்பொழுதும்தொடர்ந்து மேலோங்கி வளர்வதை நம் எல்லோராலும் அவதானிக்க முடியும் என யாழ். இந்திய துணைத் தூதுவர் ஆ.நடராஜன் சுட்டிக் காட்டியுள்ளார். 10

## இரவில் பலர் சந்திக்கின்றனர்

(கொழும்பு)

ஒருங்கிணைந்த எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பலர் இரவு வேளையில் என்னைச் சந்திக்கிறார்கள் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றும் போதே ஜனா 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி செயற்பாடுகள் பொதுமக்களுக்கானவை

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(மாத்தறை)

நாட்டில் பல்வேறுவித மக்கள் பிரச்சினைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் அப்போதிருந்த தலைவர்கள் நாட்டின் ஒரு பகுதி தொடர்பிலேயே கவனம் செலுத்தினார்கள் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அவற்றில் இருந்த ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகள் காரணமாக மக்களுக்கு கிடைக்கும் நன்மைகள் குறைவாக இருந்த போதிலும் பாரிய அபிவிருத்தி திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது என்றும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

நேற்று பிற்பகல் வெலிகந்த பிரதேச சபையின் புதிய இருமாடி கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிராமப்புற, நகர்ப்புற மக்களுக்கு உண்மையான நன்மைகள் கிடைக்கும், அவர்களது நாளாந்த வாழ்க்கையில் முகம்கொடுக்கும் அழுத்தங்கள் குறைந்து நிவாரணம் கிடைக்கும். அபிவிருத்தி திட்டங்களுக்கே தற்போதைய அரசாங்கம் முன்னுரிமை வழங்கியுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பொது மக்களுக்கு பணியாற்றும் நிறுவனங்களின் வசதிகளை அதிகரிப்பதன் ஊடாக மிகவும் திருப்தியான மனதுடன் மக்கள் சேவையை உரியவாறு நிறைவேற்ற வாய்ப்பு கிடைக்குமென தெரிவித்த ஜனாதிபதி, அது ஒருபோதும் அரசியலை நோக்காக கொண்ட அபிவிருத்தித் திட்டங்கள் அல்ல எனவும் தெரிவித்தார்.

வெலிகந்த பிரதேசத்தில் இள வயது திருமணம், இள வயது கருத்தரித்தல் மற்றும் மதுபாவனை அதிகரித்திருப்பதாக சமூக கணிப்பீட்டு அறிக்கைகள் மூலம் தெரிய வருவதாகவும், பிள்ளைகளின் எதிர்காலத்துக்கு சவாலான அந்த தீய நிலையிலிருந்து மாற்றுவதற்காக எதிர்வரும் நாட்களில் விசேட திட்டம் அமுல்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்த சமூக நிலை தொடர்பில் பாடசாலை மாணவர்களை தெளிவுபடுத்துவதற்காக பிரதேச மதகுருமார்கள், சுகாதார மற்றும் கல்வி துறைசார்ந்த அனைவரும் இணைந்து செயற்திட்டமொன்றை அமுல்படுத்த வேண்டிய தனமுகக்கியத்துவத்தையும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

பிரதேச மக்களின் நிர்வாக நடவடிக்கைகளை மிகவும் வினைத்திறனாக்கும் நோக்குடன் வட மத்திய மாகாண சபையினால் 46 மில்லியன் ரூபா செலவிடப்பட்டு, முழு வசதிகளுடனான இருமாடி பிரதேச சபை கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 'ரஜரட்ட நவ உதயம் -புத்தெழுச்சிபெறும் பொலநறுவை' திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட வெலிகந்த மகா வித்தியாலய இருமாடி கட்டடத்தையும் திறந்து வைத்த ஜனாதிபதி, கண்காணிப்பு விஜயத்தில் ஈடுபட்டு, மாணவர்களுடன் உரையாடினார்.

வடமத்திய மாகாண முதலமைச்சர் பேஷல ஜயரத்ன, மாகாண சுகாதார அமைச்சர் எம். ஹேரத் பண்டா, மாகாண அமைச்சர் சம்பத் ஸ்ரீ நிலந்த உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் நிகழ்வில் கலந்து கொண்டனர். (செ-11)

# மக்களின் சம்...

திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற தேசிய நல்லிணக்க நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

உண்மையான சமாதானம் ஏற்பட வேண்டுமாக இருந்தால் மக்களால் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் சாசனம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். கடந்த கால ஆட்சிமுறைகள் மக்களின் சம்மதத்துடனும் இணக்கத்துடனும் நடைபெறவில்லை.

இதன் காரணமாகவே நாம் இன்று அனைத்துக் கட்சிகளினதும், முக்கியமாக மக்களின் சம்மதத்துடன் இந்த புதிய அரசியல் சாசனத்தினை ஏற்படுத்த முனைகின்றோம்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையினைப் பெறுவதுடன், மக்களது அங்கீகாரத்துடன் இப்புதிய அரசியல் சாசனத்தினை வெற்றிபெறச் செய்வதன் மூலம் நாட்டில் நிரந்தரமானதும், உறுதியானதுமான சமாதானத்தினை அடைய முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மேலும் தெரிவித்தார். (செ-11)

# தனியார் பேருந்து-பிக்கப் விபத்து

## சாரதி உட்பட நால்வர் காயம்



(பரந்தன்)

கிளிநொச்சி திரேசா ஆலயத்திற்கு முன்பக்கமாக தனியார் பேருந்தும் மகேந்திரா ரக பிக்கப்பும் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் சாரதி உட்பட நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

மகேந்திரா ரக வாகனத்தில் வந்தவர்களே படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்

விபத்தினால் சாரதிக்கு கை ஒன்று முறிவடைந்துள்ளதுடன் உடலில் பலத்த காயங்களும் காணப்படுகின்றது.

குறித்த விபத்து தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

டிப்போ சந்தியில் இருந்து கரடிப்போக்கு நோக்கி மிக வேகமாக பயணித்துக் கொண்டிருந்த மகேந்திரா ரக பிக்கப் திரேசா ஆலயத்திற்கு முன்பக்கமாக சென்ற வேளை அவ் வீதியினை துவிச்சக்கரவண்டி குறுக்காக கடந்து சென்றுள்ளது. இதன்போது சடுதியாக வாகன தடுப்பை பிரயோகித்து நிறுத்த முற்பட்ட போதே குறித்த வாகனம் கட்டுப்பாட்டை இழந்து மறுபுறத்திற்கு தூக்கி வீசப்பட்டுள்ளது.

வீசப்பட்ட வாகனம் டிப்போச்சந்தி நோக்கி சென்றுகொண்டிருந்த பேருந்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இவ் விபத்து அருகில் இருக்கும் வர்த்தக நிலையம் ஒன்றில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கருவியில் பதிவாகி உள்ளது

விபத்தில் சிக்கிய மகேந்திரா பிக்கப் கிளிநொச்சியில் உள்ள நபர் ஒருவரிடம் இருந்து நேற்று காலை தென்னிலங்கையை சேர்ந்த ஒருவருக்கு விற்கப்பட்டுள்ளது. குறித்த வாகனத்தினை வாங்கியவர்களும் விற்றவர்களும் கரடிப்போக்கில் உள்ள வாகனத் திருத்தகம் ஒன்றிற்கு சென்று கொண்டிருக்கும் போதே மேற்படி விபத்து இடம்பெற்றுள்ளது.(செ-312)


# மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபை-வருமதி சென்மதி மீதிகளை உறுதிப்படுத்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் கட்டளையின் அடிப்படையில் 25.07.2017 மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபை நடவடிக்கைகள் யாவும் பெறுநர் குழுவினால் கையேற்கப்பட்டுள்ளது.

அதனால் 25.07.2017 திகதிக்கு முன்னர் ஆலய தர்மகர்த்தா சபையுடன் பல்வேறு தரப்பினாலும் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் விளைவாக உருவாகிய வருமதி மற்றும் சென்மதி மீதிகளை உறுதிப்படுத்தி முடிவுறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளமையினால்,

தர்மகர்த்தா சபையுடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டு (கூலி, மூலப்பொருள் விநியோகம், சம்பளம் கடனாக வழங்கல், முற்பணம் வழங்கல், பெறல்) அதன் விளைவாக வருமதியாக அல்லது சென்மதியாக உள்ள மீதிகளை அவற்றுக்கான ஆதாரங்களின் நகல் பிரதிகளுடன் 15.08.2017 க்கு முன்னர் பெறுநர் குழுவிற்கு கிடைக்கக் கூடியதாக மேற்படி ஆலயத்தில் இயங்கும் பிரதேச செயலக அலுவலர்களிடம் (அலுவலக நாட்களில் காலை 09.00- பி.ப 1.00 மணிவரை) நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலம் “பெறுநர் குழு, மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம், மானிப்பாய்” என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் சென்மதி மற்றும் வருமதிகளினை தீர்வு செய்ய முடியாத நிலை காணப்படும் என்பதுடன் அவற்றுக்குத் தாங்களே பொறுப்பாவீர்கள்.

**பெறுநர் குழு,**
**மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்,**
**மானிப்பாய்.**

(செ-9210)


# அந்தியேட்டி அழைப்பு



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17 - 10 - 1937 | 02 - 07 - 2017 |

## அமரர் வல்லிபுரம் துரைசாமி

(திதி-நவமி)

அன்பின் வழி நடந்த அருள் நிதியே-எந்தன்
ஆற்றாமை அடங்கலையே எமையாள வந்தவனே
என்னுயிர் தலைவா எள்ளவும் எமைப்பிரிய எய்ப்பில் வைப்பே
எம் இதயம் கிழிகின்றதே கண்ணீரும் குளமாகின்றதே
கற்றவர் சபைதனில் கல்வியில் உயர வைத்தாய் பிள்ளைகளை
எப்போதும் அவர் தம்மை அணைத்துக் கொண்டாய்-அன்பு வழியில்
மற்றவர்காய் வாழ்ந்தவனே மல்லிகை பூப்பந்தல் ஆனவனே
தேற்றம் இலா நெஞ்சினிலே தேனாறு பாயவில்லையே

கடந்த 02.07.2017 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் வல்லிபுரம் துரைசாமி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 01.08.2017 செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்களும் கலந்து அன்னாரது ஆத்மா சாந்திபெற வேண்டுவதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கருணாநிதி ச.ச.நிலையம்
வித்தினாலை, வல்வெட்டி

குடும்பத்தினர்
0778364713, 0771171193

(C-9220)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு இணைப்புக்கு புதிய அரசமைப்பு இடமளியாது

## பிரதியமைச்சர் பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

மாவட்டத்துக்கு மாவட்டம், மாகாணத்துக்கு மாகாணம் வேறுபாடுகளைக் காட்டாத வகையில் புதிய அரசமைப்பு அமையவிருப்பதால் வடக்கு,கிழக்கு மாகாணங்களுக்கு மட்டும் விசேட சலுகைகளை வழங்கும் வகையில் ஏனைய மாகாணங்களிலிருந்து வேறுபடுத்தி காட்டும் வகையில் அந்த மாகாணங்கள் இணைக்கப்படமாட்டாது என பிரதி அமைச்சர் அஜித் பி.பெரேரா தெரிவித்துள்ளார்.



புதிய அரசமைப்பானது ஒற்றையாட்சி என்ற எல்லைக்குள் இருந்து கொண்டுதான் எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வை முன்வைக்கும். மாவட்டத்துக்கு மாவட்டம்,மாகாணத்துக்கு மாகாணம் வேறுபாடுகளைக் காட்டாத வகையில்தான் புதிய அரசமைப்பு அமையும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மட்டும் விசேட சலுகைகளை வழங்கும் வகையில் ஏனைய மாகாணங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் வகையில் அந்த மாகாணங்கள் இணைக்கப்படமாட்டா.

எந்தவொரு மாகாணமும் இணைக்கப்படாத புதிய அரசமைப்பே உருவாக்கப்படும். நிறைவேற்று அதி கார மிக்க ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் என்பது மைத்திரியால் எந்தவித நிபந்தனைகளுமின்றி வழங்கப்பட்ட வாக்குறுதியாகும்.

அவர் அந்த நிலைப்பாட்டில் தொடர்ந்து இருக்கின்றார். நிறைவேற்று அதிகார மிக்க ஜனாதிபதி முறைமையை நீக்குவதாக இருந்தால் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தியே ஆகவேண்டும்.

19வது திருத்தச்சட்டத்தின் ஊடாக ஜனாதிபதியின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. உதாரணத்துக்கு அமைச்சர் ஒருவரை நியமிக்க வேண்டுமென்றால் ஜனாதிபதியால் மாத்திரம் முடியாது.

ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்தே நியமிக்க வேண்டும். இவ்வாறு பல உள்ளன. இவ்வாறு மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை புதிய அரசமைப்பின் ஊடாக முற்றாக நீக்கப்படும்.

19ஆவது திருத்தச்சட்டத்தை ஆய்வுசெய்து பார்த்தால் இன்னும் ஓரிரு வருடங்களில் ஜனாதிபதி முறைமை இல்லாமல் போவதற்கான ஏற்பாடு இருப்பதைக் காணலாம்.

அரசமைப்பைத் திருத்தித் திருத்தி கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. காலத்துக்கேற்ப புதிய அரசமைப்பு கொண்டுவருவதுதான்பொருத்தமானதாகும். அவ்வாறு புதிய அரசமைப்புதான் வரும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## சிறுநீரக மோசடி விவகாரம்

# இலங்கையில் இந்தியர்கள் சத்திரசிகிச்சை செய்யத்தடை



சிறுநீரக மோசடி இடம்பெறுகின்றமை காரணமாக இந்தியர்களுக்கு இலங்கையில் சத்திரசிகிச்சை மேற்கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

எனினும், மாலைதீவிற்கு இது ஏற்புடையதல்ல என சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்கள இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாலைதீவு சுகாதார அமைச்சர் அப்துல் ஹபீம் இப்ராகிம்மை நேற்று முன்தினம் அமைச்சர் ராஜித சேனாரட்ன சந்தித்து கலந்துரையாடிய போது இந்த விடயத்தை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# ரவி நற்பண்புள்ள மனிதராயின் இராஜினாமா செய்ய வேண்டும்

## அமைச்சர் தயாசிறி வலியுறுத்து

(கொழும்பு)

பிணை முறி பரிமாற்ற விவகாரம் தொடர்பிலான குற்றச்சாட்டுக்களுக்காக, அமைச்சர் ரவி கருணாநாயக்க தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என, விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர வலியுறுத்தியுள்ளார்.



சிறந்த மனிதருக்கான குணங்கள் இருப்பவராயின், முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு இறுதி தீர்ப்பு வரும் வரை, ரவி கருணாநாயக்க தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என அவர் தெரிவித்தார்.

அவ்வாறு அவர் செய்யாமையால் அரசாங்கத்தில் இருக்கும் மற்றையவர்களும் சிரமத்திற்கு முகம் கொடுத்து வருவதாக தயாசிறி ஜயசேகர மேலும் கூறியுள்ளார்.

குருநாகல்பகுதியில்நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

அத்துடன், தற்போதைய ஜனாதிபதி பதவி ஏற்றதன் பின்னர், பிணை முறி பரிமாற்ற விவகாரம் குறித்த விசாரணைகள் உரிய முறையில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டிய விளையாட்டுத் துறை அமைச்சர், மோசடியுடன் தொடர்புடைய அனைவருக்கும் தண்டனை வழங்கப்படும் எனவும் தெரிவித்தார். (இ-7)

# பாதாள உலகக்குழுவை அடக்கும் பொறுப்பு விசேட அதிரடிப்படையினரிடம் ஒப்படைப்பு

பாதாள உலகக் குழு செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் பொறுப்பு விசேட அதிரடிப்படையினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

மீளவும் நாட்டில் பாதாள உலகக்குழு செயற்பாடுகள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்ற நிலையில் இதனைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு விசேட அதிரடிப் படையின் பொறுப்பதிகாரி பிரதிப் பொலிஸ்மா அதிபர் எம்.ஆர்.லத்தீப் தலைமையிலான விசேட பிரிவு ஒன்றிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

பிரபல பாதாள உலகக் குழுத் தலைவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்த செயற்றிறன் மிக்க பொலிஸ் அதிகாரிகள் இந்த குழுவிற்கு மீள அழைக்கப்பட்டுள்ளனர். இந்த விசேட பிரிவு பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினரைக் கொண்டமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# விச ஊசி ஏற்றி பெண் கொலை! குற்றவாளிக்கு மரணதண்டனை

(கொழும்பு)

குடும்பப் பெண்ணுக்கு தலையில் விச ஊசி ஏற்றிக் கொலை செய்த வழக்கில் குற்றவாளிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் குறித்த பெண்ணின் வீட்டின் பின்புறமாக இரகசியமாக வந்த நபர் அவரின் தலையில் விச ஊசியை செலுத்தியுள்ளார். இதை அப்பெண்ணின் மகள் கண்டுள்ளார். சம்பவத்தில் [illegible] ழந்த பெண் [illegible] வல்பொல [illegible]தியைச் [illegible] ந்த மூன்று பிள்ளைகளின் தாயாவார். (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மொயின் அலி ஹட்ரிக்
# இங்கிலாந்து இமாலய வெற்றி



தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்டின் இரண்டாவது இன்னிங்ஸில் மொயீன் அலி 'ஹட்ரிக்' சாதனை படைக்க, இங்கிலாந்து அணி 239 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இங்கிலாந்து, தென்னாபிரிக்கா அணிகள் மோதிய மூன்றாவது டெஸ்ட், லண்டன் ஓவல் மைதானத்தில் கடந்த 27ஆம் திகதி ஆரம்பமானது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று தமது முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, பென் ஸ்ரோக்ஸின் (112) அபாரமான துடுப்பாட்டத்தினால் தமது முதல் இன்னிங்சுக்காக 353 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி றோலண்ட் ஜோன்ஸின் (5/57) வேகத்தில் சிக்குண்டு 75 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது.

178 ஓட்டங்கள் முன்னிலையுடன் தமது 2ஆவது இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 313 ஓட்டங்களை எடுத்திருந்த போது ஆட்டத்தை இடைநிறுத்தி, தென்னாபிரிக்கா அணிக்கு 492 ஓட்டங்கள் என்ற கடின வெற்றியிலக்கை நிர்ணயித்தது.

இவ் வெற்றியிலக்கை நோக்கி தமது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி



நேற்று முன்தினம் நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 117 ஓட்டங்களை எடுத்திருந்தது. டீன் எல்கர் (72), பவுமா (16) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

### எல்கர் சதம்

நேற்று ஐந்தாம் நாள் ஆட்டம் நடந்தது. தமது 2ஆவது இன்னிங்ஸை தொடர்ந்த தென்னாபிரிக்க அணிக்கு ரோலண்ட் ஜோன்ஸ் தொல்லை கொடுத்தார். இவரது 'வேகத்தில்' பாவுமா (32), பிலாண்டர் (0) அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். மறுமுனையில் பொறுப்பாக ஆடிய எல்கர், டெஸ்ட் அரங்கில் தனது 8ஆவது சதமடித்தார்.

### மொயீன் 'ஹட்ரிக்'

கிறிஸ் மோரிஸ் (24) நிலைக்கவில்லை. மொயீன் அலி வீசிய 76வது ஓவரின் கடைசி 2 பந்தில் எல்கர் (136), ரபாடா (0) ஆட்டமிழந்தனர். பின், 78ஆவது ஓவரின் முதல் பந்தில் மோர்னே மோர்கலை (0) ஆட்டமிழக்கச் செய்த மொயீன் அலி, 'ஹட்ரிக்' சாதனை படைத்தார்.

இரண்டாவது இன்னிங்ஸில் தென்னாபிரிக்க அணி 252 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 239 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது.

மகராஜ் (24) ஆட்டமிழக்காமல் இருந்தார். இங்கிலாந்து சார்பில் மொயீன் அலி 4, ரோலண்ட் ஜோன்ஸ் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இந்த வெற்றியின் மூலம், நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணி 2:1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

போட்டியின் ஆட்டநாயகனாக இங்கிலாந்தின் பென் ஸ்ரோக்ஸ் தேர்வானார்.

இரு அணிகளுக்கும் இடையிலான நான்காவது மற்றும் கடைசி டெஸ்ட் எதிர் வரும் 4ஆம் திகதி மான்செஸ்டரில் ஆரம்பமாகிறது.

### 100ஆவது டெஸ்ட்

இப்போட்டி லண்டன் ஓவல் மைதானத்தில் நடந்த 100ஆவது டெஸ்ட். இங்கு, இங்கிலாந்து அணி விளையாடிய 100 டெஸ்டில், 41 வெற்றி, 37 'சமனிலை', 22 தோல்வியை பதிவு செய்தது.

## இறப்புச் சான்றிதழ்...

துள்ளார்.

இந்த இறப்புக்கள் இடம்பெற்று தற்போது ஐந்து ஆண்டுகள் கடந்துள்ளபோதும், உறவினர்களிடம் இதுவரை இறப்பு சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை. இதன் காரணமாக உறவினர்கள் இறந்தோர் சம்பந்தமாக செயற்படும்போது சட்ட சிக்கல்களுக்கு ஆளாகின்றனர்.

இதன் காரணமாக இறந்தோருக்கு அரசாங்கத்தினால் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ள நஷ்டஈட்டை பெறுவதற்கும் கூட விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக சுதேஷ் நந்திமால் டி சில்வா தெரிவித்தார்.

இவ்வாறு இறப்பு சான்றிதழ்கள் வழங்கப்படாமை குறித்து அரச பதிவாளர் திணைகளத்தின் கருத்துக்களை பெற முயற்சித்த போதிலும் அந்த முயற்சி பயனளிக்கவில்லை.

இதேவேளை வெலிக்கடை தாக்குதல் சம்பந்தமாக ஐந்து ஆண்டுகளுக்கு பின்னர் புதிதாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ள போதிலும், விசாரணைகள் நடைபெற்று வரும் முறை குறித்து திருப்தியடைய முடியாதென்று சுதேஷ் நந்திமால் சில்வா குற்றம் சாட்டினார்.

இது குறித்து கருத்துத் தெரிவித்த அவர், இந்த தாக்குதலுக்கு பொறுப்புக் கூறவேண்டிய முக்கிய நபர்கள் என்று தெரிவிக்கப்படும் முன்னாள் சிறைச்சாலை ஆணையாளர் கொடிப்பிலி, போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்தின் பொலிஸ் அதிகாரி ரங்கஜீவ, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரிடம் பொலிஸார் விசாரணைகளை இதுவரை மேற்கொள்ளவில்லை. இதன் காரணமாக இறந்தோரின் உறவனர்களுக்கு விசாரணைகள் மீது பாரிய சந்தேகம் எழுந்துள்ளதாக தெரிவித்தார்.

மேலும் இந்த விசாரணைகளை மூடி மறைப்பதற்காகவே இறந்தோருக்கு நஷ்டஈட்டை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் முன்வந்துள்ளதாகவும் அவர் மேலும் குற்றம் சாட்டினார்.

2012ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலைக்குள் தேடுதலொன்றுக்காக சென்ற அரச பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூடு காரணமாக அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த 27 கைதிகள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## தேர்தல்கள் நெருங்...

இதனைக் கூறியுள்ளார்.

கடந்த காலத்திலும் தற்போதும் மக்களால் புறக்கணிக்கப்பட்ட ஆட்சியாளர்கள் தமது அரசியலுக்காக இனங்கள் இடையில் வீண் அச்சங்களையும் சந்தேகங்களையும் உண்டாக்கியுள்ளனர்.

ஆகவே சிறுபான்மை மக்கள், எப்போதும் இனவாத, மதவாத போக்குக்கு எதிரானவர்கள் என்பதை தமிழ், முஸ்லிம் மக்கள் உணர்த்த வேண்டும் என்று ஹாபீஸ் நஷீர் அஹமட் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## யூரோ கால்பந்து
# அரையிறுதியில் இங்கிலாந்து

பெண்களுக்கான யூரோ கிண்ண கால்பந்து தொடரின் அரையிறுதிக்கு இங்கிலாந்து அணி முன்னேறியது. காலிறுதியில் 1:0 என்ற கோல் கணக்கில் பிரான்ஸை தோற்கடித்தது.

நெதர்லாந்தில், பெண்களுக்கான 12வது யூரோ கிண்ண கால்பந்து தொடர் நடக்கிறது. டேவன்டர் நகரில் நடந்த காலிறுதியில் இங்கிலாந்து - பிரான்ஸ் அணிகள் மோதின.

முதல் பாதி முடிவு கோல் எதுவுமின்றி சமநிலையில் இருந்தது. இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட இங்கிலாந்து அணிக்கு 60ஆவது நிமிடத்தில் ஜோடீ லீ டெய்லர், ஒரு கோல் அடித்தார்.

இதற்கு, பிரான்ஸ் வீராங்கனைகளால் பதிலடி தர முடியவில்லை. ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து அணி 1:0 என்ற கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

இதன்மூலம் 43 ஆண்டுகளில் முதன் முறையாக இங்கிலாந்து அணி, பிரான்ஸை வீழ்த்தியது.

ரோட்டர்டாம் நகரில் நடந்த காலிறுதியில் டென்மார்க், ஜெர்மனி அணிகள் மோதின. இதில் டென்மார்க் அணி 2:1 என்ற கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது. எட்டு முறை கிண்ணம் வென்ற ஜெர்மனி பரிதாபமாக வெளியேறியது.

டில்பர்க் நகரில் நடந்த ஆஸ்திரியா,



ஸ்பெயின் அணிகள் மோதிய காலிறுதி, ஆட்டநேர முடிவில் கோல் எதுவுமின்றி சமநிலை வகித்தது. கூடுதல் நேரத்திலும் இரு அணிகளால் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. பின், 'பெனால்டி ஷூட் அவுட்' முறையில் அசத்திய ஆஸ்திரியா 5:3 என வென்று அரையிறுதிக்குள் நுழைந்தது.

நாளை மறுதினம் நடக்கவுள்ள அரையிறுதியில் டென்மார்க் - ஆஸ்திரியா மற்றும் நெதர்லாந்து - இங்கிலாந்து அணிகள் மோதுகின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சைட்டம் எதிர்ப்புப் பேரணி கண்டியிலிருந்து ஆரம்பம்





(கொழும்பு)

சைட்டம் எதிர்ப்பு மாணவர்கள் இயக்கம் மேற்கொள்ளும் எதிர்ப்புப் போராட்டமும் நடைபவனியும் நேற்று பேராதனை பல்கலைக்கழகத்துக்கு அருகில் இருந்து ஆரம்பமானது.

பேராதனையிலிருந்து கொழும்பு வரை ஐந்து தினங்களுக்கு இந்தப் பேரணி இடம்பெறவுள்ளது.

இந்தப் பேரணியில் பல்கலைக்கழக மாணவர் அமைப்பு உறுப்பினர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள், மருத்துவபீட மாணவர்கள் மற்றும் பெற்றோர் கலந்து கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


**யாரிடம் பேசுவது?**

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

**எம்முடன் பேசுங்கள்.**

**கை கொடுக்கும் நண்பர்கள்**
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
'மதசார்பற்றது' 'ரகசியமானது' 'இலவச சேவை'
**021 222 8117, 077 900 8776**
வவுனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)


# மரண அறிவித்தல்



## அமரர் இராசையா நாகேஸ்வரன்

யாழ். அளவெட்டி வடக்கு அழகொல்லையைப் பிறப்பிடமாகவும், லண்டன் Chessington ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா நாகேஸ்வரன் அவர்கள் 08.07.2017 சனிக்கிழமை அன்று அகாலமரணம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான அளவெட்டி கொட்டடியைச் சேர்ந்த இராசையா சின்னம்மா தம்பதிகளின் இளைய புதல்வரும், இராஜகோபால் சரோஜினிதேவி தம்பதிகளின் அன்பு மருமகனும் , சுபாஜினி அவர்களின் அன்புக் கணவரும், தட்ஷா, டிலக்ஷா, டிலக்ஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ் சென்ற நம்பியாரூரன் (நெதர்லாந்து), நாகேஸ்வரி, ஞானேஸ்வரி(அளவெட்டி),திருவாதவூரன் (அளவெட்டி), செந்தூரன்(அளவெட்டி),இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் சகோதரரும் ஆவார். அன்னாரின் தகனக்கிரியைகள் (02.08.2017) நாளை புதன் கிழமை பிற்பகல் 2 மணியள்வில் லண்டனில் நடை பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (9989)

அளவெட்டி.

T.P - 077 2262572

தகவல்:
சகோதரர்
இ.திருவாதவூரன்

# 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பிதழும்



அமரர் திருமதி.
**பாக்கியம் சோமசுந்தரம்**
(02.08.2017)

மலர்வு
03.10.1926
உதிர்வு
03.07.2017

சொல்லமுடியாத துயரோடு வாழ்கின்றோம்.
அள்ளி நீதந்த அரவணைப் பெங்கம்மா?
உள்ளத்தில் மகிழ்வில்லை உத்தமி நீயில்லை!
செல்லமாய்க் கூப்பிட சொந்தமே ! நீயில்லை!
நிம்மதியாய் நீ தூங்கு நினைவுகள் சாகாது!
எம்மதி நீதானே ! எம் வழி யானாயே!

கடந்த 03-07-2017 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி அமரர் திருமதி. பாக்கியம் சோமசுந்தரம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 02.08.2017 நாளை புதன்கிழமை அதிகாலை 5 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் பிறபகல் 1 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சட்டம்பியார் வளவு (ஸ்ரடி சேக்கிள்),
கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை.

இங்ஙனம் :
குடும்பத்தினர்.

(9216)

# இராசி பலன்

01.08.2017
(ஆடி 16, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
நவமி பிற்பகல் 2.21 மணிவரை
விசாகம் பிற்பகல் 3.18 மணிவரை
சுபநேரம் 10.33-12.03 மணிவரை
இராகுகாலம் 3.03-04.33 மணிவரை
மூன்றாம் ஆடிச் செவ்வாய்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சுக் |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>ரேவதி ,அச்சுவினி<br>காலை 8.53 மணிக்கு<br>விருச்-சந் | | சூரி ராகு செவ் |
| கேது | | | புத |
| | சந் சனி | | குரு |

**மேடம்:** இறைவழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**இடபம்:** செய் தொழிலில் சிறப்புகள் வந்து சேரும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும். அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**மிதுனம்:** வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும் நாள்.

**கடகம்:** தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், எதிர்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ரோக பயமுண்டு, சுப செலவுகள் கூடும் நாள்.

**சிம்மம்:** சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைத் காண வேண்டிய நாள், பெற்றோர் மீதான பாசம் கூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கன்னி:** உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வருமானம் திருப்தி தரும்.

**துலாம்:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், புதிய பொறுப்புகளும் பதவிகளும் வந்து சேரும்.

**விருச்சிகம்:** குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, பணவரவு திருப்தி தரும், நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள்.

**தனுசு:** திட்டமிட்ட காரிய மொன்றில் திடீர் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தொழில் நலன் கருதிய பயணமொன்று இடம் பெறலாம், சயன சுகக் குறைவான நாள்.

**மகரம்:** பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் , இயல்பான வாழ்கையில் இன்பங்கள் கூடும் நாள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், போசன சுக முண்டு.

**கும்பம்:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறை வேறலாம், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்:** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் நாள், தொழில் ரீதியான பயணம் அனுகூலம் தரும், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வரும்

# தமிழ் அரசியல் தலைவர்கள் தமிழர்களை ஏமாற்றிவிட்டனர்

## ஆனந்தசங்கரி கவலை



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும் அரசியலில் நிலவும் குழப்பகரமான சூழ்நிலைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்கும் தற்போது அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வரும் தமிழ் அரசியல் தலைவர்கள் தவறிவிட்டனர். அதன் விளைவாக தமிழ் மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர். அதனால் தமிழ் மக்களுக்கு ஒரு சரியான தலைமை தேவைப்படுகின்றது. அதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணி களத்தில் இறங்கி செயற்பட்டு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு ஒரு நிரந்தரமான தீர்வை பெற்றுக் கொடுப்பதற்கு திடசங்கற்பம் பூண்டுள்ளது என அக்கட்சியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாகிய காலம் தொட்டு இன்றுவரை, வன்முறைகளில் ஈடுபடாமலும், வன்முறைக்கு துணை போகாமலும் செயலாற்றிக் கொண்டு வருகின்றது. வட, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களுக்கான ஒரே யொரு ஜனநாயகக் கட்சியாக மிளிர்வதும் தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டுமே. சர்வதேச சமூகத்தின் பார்வையில் தமிழ் மக்களின் ஜனநாயகத்திற்கான குரலாக செயற்பட்டு பல தியாகங்களை செய்த கட்சி என்ற நன்மதிப்பையும் பெற்றுள்ளது.

எனவே அத்தகைய பாரம்பரியமிக்க கட்சியை புனரமைப்பு செய்வதற்காக முதற்கட்டமாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் வருடாந்த பொதுக்குழு கூட்டம் எதிர்வரும் 06.08.2017 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்சியின் தலைமைச் செயலகத்திலும், அதனைத் தொடர்ந்து தேசிய மாநாடு 07.08.2017ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு, கல்லூரி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்திலும் நடைபெறும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனால் எமது கட்சியைச் சேர்ந்த அங்கத்தவர்கள் அனைவரையும் 06. 08. 2017இற்கு முன்னர் எமது அலுவலகத்தில் தொடர்பு கொண்டு, அங்கத்துவத்தை புதுப்பித்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். எமது கட்சியில் இணைந்து செயற்பட விரும்பும் அனைத்து தமிழ் மக்களையும் 07.08.2017ஆம் திகதி நடைபெறும் எமது மாநாட்டில் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அரசாங்கம் தேர்தலில் 25 சதவீத ஒதுக்கீட்டை கண்டிப்பாக கடைப்பிடிக்க தீர்மானம் எடுத்திருப்பதால் எமது மகளிரணியினர் மற்றும் பெண்களுக்கான அமைப்புகள் மாநாட்டில் கலந்து கொண்டு எம்முடன் இணைந்து செயற்பட வருமாறும் அன்புடன் அழைக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## 139 ஆவது நாளாக கவனயீர்ப்பு



(யாழ்ப்பாணம்)

காணாமற் போனவர்களைக் கண்டறியும் நோக்குடன் அவர்களின் உறவினர்களால் மருதங் கேணி பிரதேச செயலகம் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட கவனயீர்ப் புப் போராட்டம் 139 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது. (இ-60)

## மாடுகள் திருட்டு அதிகரிப்பு

தென்மராட்சி மந்துவில் வடக்குப் பகுதியில் மேய்ச்சலுக்காக விடப்படும் மாடுகள் தொடர்ந்து திருடப்பட்டு வருவதாகவும் இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸாருக்கு பல முறை தகவல் அளிக்கப்பட்ட போதிலும் பொலிஸார் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என பிரதேச மக்கள் கவலையுடன்தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச. மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-101)




## மாணவர்கள் கௌரவிப்பு



கொமர்ஷல் வங்கியின் சாவகச்சேரிக் கிளையில் அருணலு சேமிப்புக்கணக்கைப் பேணிவரும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கிளை முகாமையாளர் எஸ்.சிவரூபன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தென்மராட்சி வலய கல்விப்பணிப்பாளர் கு.கிருஸ்ணகுமார் பிரதம விருந்தினராகவும் கொமர்ஷல் வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் ஆர்.சிவஞானம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு மாணவர்களைக் கௌரவித்தனர். (இ-29)

## செய்தியில் திருத்தம்

மயிலிட்டியில் கடற்றொழில் செய்வதற்கு போதிய உதவிகள் வழங்கப்படவில்லை, அரசு மீது கடற்றொழிலாளர் சங்கம் புகார் என்ற தலைப்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வலம்புரி பத்திரிகையின் 6 ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்த செய்தியில் மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் செயலாளர் ந.ரட்ணராஜா என்பவர் முன்னாள் செயலாளர் என்றும் தற்போது குறித்த சங்கத்தின் செயலாள்ராக சி.இராயேந்திரபிரசாத் கடமையாற்றுகிறார் என அச் சங்கத்தினர் தெரியப்படுத்தியுள்ளனர். குறித்த செய்தியில் ந.ரட்ணராஜா தெரிவித்த தகவல்களுக்கும் தமது சங்கத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லையென்றும் அச்சங்கத்தினர் மறுப்பு தெரிவித்துள்ளனர். (இ-9)



கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை ஆசிரியர்களுக்கான உளவிருத்தி மற்றும் உள ஆற்றுப்படுத்தல் செயலமர்வு கடந்த 28 ஆம் திகதி அதிபர் கு.திலீபன் தலைமையில் இடம்பெற்றது.இச் செயலமர்வில் பாடசாலை ஆசிரியர்கள் 30 பேர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

(படங்கள்:-தெல்லிப்பழை செய்தியாளர்)

## கண்டல் காட்டுப் பகுதியில் விறகு வெட்டியவர் கைது

வரணி ஏழு கண் பிரதேச கண்டல் காட்டுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் விறகு வெட்டிக் கொண்டிருந்த நபரொருவரை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வரணி ஏழு கண் மதகுப் பகுதியில் பாதுகாக்கப்பட்ட கண்டல் காட்டில் சட்டவிரோதமான முறையில் விறகு வெட்டிக் கொண்டிருந்த போது நெல்லியடி மற்றும் கொடிகாமம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றி வளைப்பின் போதே மேற்படி நபர் கைது செய்யப்பட்டதுடன் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவர் தப்பியோடியுள்ளனர். விறகு ஏற்றுவதற்காக பயன்படுத்தப்பட்ட பட்டா ரக வாகனத்தையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை நெல்லியடிப்பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர். (இ-10-103)

## கழிவுகள் போடுமிடத்தில் இறந்த மாட்டின் உடல்

### சுகாதாரச் சீர்கேடு என சுட்டிக்காட்டு



(கரணவாய்)

கரணவாய் மண்டான் உப்பு ரோட் பகுதியில் கழிவுகள் கொட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் இறந்த மாடு ஒன்றும் போடப்பட்டுள்ளது.மேற்படி பகுதியில் கழிவுகள் கொட்டுவதற்கு பிரதேச சபையால் ஒதுக்கப்பட்ட இடத்திலே கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றன.ஆனால் சில தினங்களுக்கு முன்னர் இறந்த மாடு ஒன்றை அவ்விடத்தில் சிலர் வீசிவிட்டு சென்றுள்ளனர். உரிய முறையில் புதைக்காது கழிவுகள் கொட்டும் இடத்தில் வீசி விட்டு சென்றுள்ளதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது. (இ-60)

## இரு குழுக்களிடையே மோதல் இளைஞர்கள் மூவர் படுகாயம்

அளவெட்டி முத்துமாரியம்மன் வீதி கலைநகரில் இரு குழுக்களிடையே இடம்பெற்ற கைகலப்பில் மூன்று இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அளவெட்டி கோயில் ஒன்றில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இசை நிகழ்ச்சியின் போது இரு குழுக்களிடையே இடம்பெற்ற முறுகல் நிலை கைகலப்பாக மாறியதில் குறித்த மூன்று இளைஞர்களும் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.இச்சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-10-51)



யாழ்.குடாநாட்டில் நிலவும் கடும் வரட்சி காரணமாக ஈச்சமோட்டைக்குளம் வற்றி வரண்ட நிலையில் காணப்படுகின்றது.

(படங்கள்:-ஈச்சமோட்டை செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலக்ஷன் எங்களோடு என்றும் வாழ்வான்

2007 ஆம் ஆண்டு ஒகஸ்ட் முதலாம் திகதி கதிரவனின் விடியல் விருப்பமற்றதாகவே இருந்தது. ஒரு சூரியனின் இழப்பை பகலவன் பரப்ப முடியாதவனாய் வெறுத்திருந்தான்.

ஆம், நிலக்ஷன் சுட்டுக் கொல்லப்பட்டான் என்ற செய்தி அன்றைய நாள் எங்கள் இதயங்களைத் துளைத்துக்கொண்டன.

ஏன்தான் இப்படி என்ற ஏக்கம் இன்றுவரை நீள்கிறது. இருளில் இருந்து மீளத் துடித்த ஒரு அப்பளுக்கற்ற மாணவனை இப்படிச் செய்ததால் செய்தவர்கள் கண்ட இலாபம் தான் என்ன?

எதையும் நேர்கொண்ட பார்வையால் நோக்கும் நிலக்ஷனிடம் உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் இயல்பு இருந்திருந்தால் அவனும் உயிர் பிழைத்திருக்க முடிந்திருக்கும் என்று எண்ணத் தோன்றும்.


கொக்குவில் மண்ணில் சகாதேவன் செல்வராணி தம்பதிகளின் புதல்வனாக பிறந்த நிலக்ஷன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடகத்துறை மாணவனாக நான் சந்தித்தேன். அவரின் நேர் மனப்பாங்கு அனைவரையும் ஈர்த்திருந்தது. மற்றவர்களுடைய நியாயங்களை ஏற்கின்ற மனப்பக்குவம் நிலக்ஷனின் மிக உன்னதமான பண்பு.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மாணவனாக அவன் இருந்ததால் யாழ்ப்பாண இந்துக் கல்லூரி அன்னை தன் பிள்ளைகளுக்கு இயல்பாக ஊட்டிவிடும் தமிழ்ப்பற்றை, அறிவாற்றலை, தியாக உணர்வை நிலக்ஷனுக்குத் தாராளமாக ஊட்டியிருந்தாள் என்பது மறுக்க முடியாத உண்மை. பத்து ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த அந்தக் கொடுஞ் செயல் இன்றுவரை எம் இதயங்களை கசக்கிப் பிழிகின்றது என்பது உண்மையாயினும் நிலக்ஷன் மறைந்து பத்து ஆண்டுகளாகிவிட்டன என்று யார் கூறினாலும் அதனை நான் ஒருபோதும் ஏற்பதில்லை.

ஏனெனில் என்னைப் பொறுத்தவரை என் மாணவன் நிலக்ஷன் இன்றும் உயிரோடுதான் இருக்கிறான்.

அவன் மறைந்துவிட்டான் என்பதை என்னால் ஒரு போதும் ஏற்கவும் நம்பவும் முடியாது. அப்படியொரு மாணவனின் இழப்பை கற்பனை செய்வதற்குக்கூட என்னிடம் தைரியம் இல்லை. இதை இன்று தவிர என்றும் நான் எவரிடமும் கூறியதில்லை. ஏனெனில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடகவளங்கள் மையத்தின் விரிவுரை மண்டபத்தில் என் கருத்துக்கள் அதற்கு நிலக்ஷனின் உடன்பாட்டுக் கருத்துக்கள்... அவன் இல்லாத வெறுமையில் என்னோடு மட்டுமே அவை சங்கமித்துள்ளன.

எது எவ்வாறாயினும் அவனின் பத்தாவது ஆண்டு நிறைவை அவனின் பள்ளித் தோழர்கள் நினைவுகூருகின்ற செய்தி மனதுக்கு ஆறுதலைத் தருகிறது. நிலக்ஷன் எங்களோடு என்றும் வாழ்வான். அவனின் புனிதமான இலட்சியம், நேர் கொண்ட சிந்தனை இவை அனைத்தும் அவனின் ஞாபகத்தை இந்த உலகம் இருக்கும் வரை நம்மண் பேசும்.



வரலாற்றுப் பெட்டகத்தில் அவன் பதிவுக்குரியவன். அதை யாராலும் அழிக்கவே முடியாது.

என்.விஜயசுந்தரம்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுடன் அமைச்சர் மனோகணேசன் நேற்று சந்திப்பு



(பரந்தன்)

கிளிநொச்சிக்கு நேற்றைய தினம் விஜயம் செய்த தேசிய மொழிகள், தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோகணேசன் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டார். காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை விடுவிக்கக்கோரி கடந்த இரண்டாம் மாதம் இருபதாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கவனயீர்ப்பு போராட்டம் நேற்று திங்கட்கிழமை பல பொய் வாக்குறுதிகளுக்கும் இடையில் நூற்று அறுபத்து இரண்டாவது நாளாக நடைபெற்றுக் கொண்டுள்ள நிலையில் கிளிநொச்சிக்கு விஜயம் செய்த மனோகணேசன் அம்மக்களையும் நேரில் சென்று பார்வையிட்டதுடன் நிலைமைகளையும் ஆராய்ந்தார்.

இக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன் , சிறிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (3-8-312)

## மகிந்த-மைத்திரி சந்திக்காவிடின் பிளவு நிச்சயம்!

### அமைச்சர் செனவிரட்ன எச்சரிக்கை

ஐ.தே.கவுடன் கூட்டு அரசாங்கத்தில் இருப்பது என்பது, சுதந்திரக் கட்சிக்கு மிகுந்த கடினமாக இருப்பதாக, சு.கவின் உறுப்பினரும் தொழில் மற்றும் தொழிற்சங்க அமைச்சருமான, ஜோன் செனவிரட்ன தெரிவித்தார்.

எனவே, சு.கவில், மேலும் பிளவுகளைத் தடுக்கும் வகையில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடுமாறு, ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.



அரசாங்கத்தில், எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரை இருக்குமாறு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்துள்ளதாகவும், எனினும், அதுவரை காத்திருப்பதற்கு, சு.கவால் முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்திக்காவிடின், சு.கவில் நிச்சயம் பிளவு ஏற்படும் என்றும் அவர் கூறினார். ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிகளுக்கு இடையேயான ஒப்பந்தம், ஒகஸ்ட் மாதத்துடன் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அன்பளிப்பு நிகழ்வும் ஆடித்திருவிழாவும்

(யாழ்ப்பாணம்)

நவாலி வடக்கு முதியோர் சங்க (ஜே/ 134) முதியோருக்கான அன்பளிப்பு நிகழ்வுகளும் ஆடித் திருவிழாவும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நவாலி வடக்கு முதியோர் சங்க மண்டபத்தில் இடம்பெறும்.

டாக்டர் சோ. சுந்தரராஜன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடமாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், வடமாகாண சபை உறுப்பினர்களான ச.சுகிர்தன், கே.என். விந்தன் கனகரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)




யாழ். அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோவில்

பொதுக்கூட்ட அறிவித்தல்

மேற்படி ஆலய பொதுக்கூட்டம் 30.07.2017 இல் நடைபெற்றது. அதில் யாழ்.பிரதேச செயலர் கலந்து கொண்டு அவரின் அறிவுறுத்தலின் பிரகாரம் 13.08.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு புதிய நிர்வாக சபை தெரிவு செய்வதற்கு மட்டும் கணபதி கலாசார மண்டபத்தில் பொதுக்கூட்டம் நடைபெற இருப்பதால் ஆலயமுன்னேற்றத்தை கருத்திற் கொண்டு சகல உபயகாரர்களும், அடியார்கள், தொண்டர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.


இங்ஙனம்
நிர்வாகசபை (சி-9218)


## டெங்குக் குடம்பிகள் காணப்பட்டதால் ஹோட்டல் உரிமையாளருக்கு அபராதம்

(கொழும்பு)

பூகொடை நகரிலுள்ள ஹோட்டல் ஒன்றின் சுற்றுப்புற சூழலில் டெங்கு குடம்பிகள் காணப்பட்டதனால் ஹோட்டல் உரிமையாளருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தும்படி பூகொடை நீதவான் நீதிமன்ற நீதவான் செல்வி நிலுபுளி லங்காபுர கட்டளையிட்டார்.

பூகொடை சுகாதார உத்தியோகத்தர் சம்பத் திஸாநாயக்கவினால் ஹோட்டல் உரிமையாளர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போதே மேற்கண்டவாறு நீதவான் கட்டளையிட்டார்.



இதேவேளை, டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் வகையில் வீட்டுத் தோட்டத்தை வைத்திருந்த குற்றத்திற்கு 12 பெண்கள் உட்பட 28 பேருக்கு பூகொடை நீதவான் நீதிமன்ற நீதவான் தலா 1000 வீதம் 28 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கை வாட்டும் வரட்சி

(குருமன்காடு)

கடந்த சில மாதங்களாக நாட்டில் நிலவும் வரட்சியினால் 10 இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வட மாகாணத்தைச் சேர்ந்த 4,62,815 பேர் நீர்த் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் இயக்கச்சி பகுதியில் பயிரிடப்பட்ட தோட்டப்பயிர் செய்கைகள் நீரின்மையால் அழிவடைந்துள்ளன.

இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் நிலவும் வரட்சியினால் கிளிநொச்சி மாவட்டத்தில் 83 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் நீர்த் தட்டுப்பாட்டை எதிர்கொண்டுள்ளனர்.

பளை, இயக்கச்சி மக்களும் தமது நாளாந்த தேவைக்கான நீரைப் பெற்றுக்கொள்ள பாரிய இன் இன்னல்களை அனுபவிக்கின்றனர்.

கிளிநொச்சி, பளை, இயக்கச்சி பகுதியில் சுமார் 600 இற்கும் அதிகமான குடும்பங்கள் வசித்து வருகின்றன.

வரட்சி காரணமாக இப் பகுதியிலுள்ள கிணறுகள் உள்ளிட்ட நீர்நிலைகள் வற்றிப்போயுள்ளன.

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள ஆனையிறவு உப்பளத்திற்கு சொந்தமான கிணற்றிலிருந்து வரையறைக்குட்படுத்தப்பட்டு நீர் வழங்கப்படுவதாகவும் எனினும் அது போதுமானதாக இல்லை எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

பளை, இயக்கச்சி பகுதியில் பாதுகாப்பு பிரிவினர் வசமுள்ள கிணறுகளை பிரதேச சபைகளிடம் கையளிக்குமாறு யாழ். மாவட்ட செயலகத்தில் கடந்த 20 ஆம் திகதி நடைபெற்ற வரட்சி தொடர்பாக ஆராயும் கூட்டத்தில் வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இதேவேளை, இப்பிரச்சினை தொடர்பில் இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனவிரட்ன இயக்கச்சி பிரதேச கிணறு இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தபோதிலும், பொதுமக்களுக்காக விநியோகிக்கப்படும் தண்ணீரின் அளவைக் குறைக்கவில்லை என்றும் எனினும், அந்தக் கிணற் றிலிருந்து இராணுவத் தினருக்காக விநியோகிக் கப்படும் நீரை 50 வீதமாக குறைத்துள்ளதாக தெரிவித்தார். (3-8)

## வரட்சியால் வாடும் முல்லை

நாட்டின் பல பகுதிகளில் கடும் மழை பெய்யக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ள நிலையில் வடக்கு, கிழக்கில் வரட்சியான காலநிலை தொடருகின்றது.

இந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்டம் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ புள்ளி விபரத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாவட்டத்தில் கரைதுரைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு மற்றும் மணலாறு ஆகிய பகுதிகளே இவ் வாறு அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மாந்தை கிழக்கு பகுதியில் 2126 குடும்பங்களைச் சேர்ந்த 6684 பேர் வரட்சியினால் நீர்த்தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வன்னிவிளாங்குளம், கணணம்பிராங்குளம், கரும்புள்ளியான், நெட்டங்குளம், சிராட்டிகுளம், செல்வபுரம், பாண்டியன் குளம், அம்பாள்குளம் உள்ளிட்ட பல பகுதிகளும் வரட்சியினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. (3-8-250)

## துவிச்சக்கரவண்டிகள் வழங்கி வைப்பு



வடமாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரனின் நிதி ஒதுக்கீட்டில் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள குடும்பங்களில் புதுக்குடியிருப்பு கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட 70 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் அண்மையில் வழங்கப்பட்டன. இதே வேளை சாதிக்கும் சந்ததி செயற்றிட்டத்தின் ஊடாக தெரிவு செய்யப்பட்ட 74 மாணவர்களுக்கு 2017 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டின் மூலம் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனால் மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன. (3-8-281)




## ஐ.நாவிற்கு அனுப்பப்பட்ட அறிக்கை தொடர்பான செயலமர்வு வவுனியாவில்

சிவில் அமைப்புக்களால் ஐ.நாவிற்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையின் தொடர் நடவடிக்கை மற்றும் ஐ.நாவின் விசேட பிரதிநிதிகளை அறிவூட்டும் சிபாரிசுகளை தயாரிப்பதற்கான செயலமர்வு வவுனியா அருந்ததி மண்டபத்தில் நேற்று முன்தினம் முற்பகல் பத்து மணியளவில் ஆரம்பமாகியுள்ளது.

வருடத்திற்கு ஒருமுறை நடைபெறும் உலக நாடுகள் தொடர்பாக மனித உரிமை வளர்ச்சி மீளாய்விற்காக இலங்கை அரசால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கைக்கு சமாந்தரமான மற்றும் உண்மையான ஒரு சிறந்த அறிக்கையை அனுப்பி வைத்துள்ளமை மற்றும் அதன் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக ஆராய்வதற்காக செயலமர்வு நடைபெற்று வருகின்றது.

இந்த செயலமர்வை தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம், மொனலர் உட்பட பல சிவில் அமைப்புக்கள், மனித உரிமை சட்டத்தரணிகள் மற்றும் பல் துறை சார்ந்தவர்கள் இணைந்து முன்னெடுத்துள்ளனர்.

இதில், இங்கையின் வடக்கு, கிழக்கில் உள்ள ஏழு மாவட்டங்களின் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் உட்பட பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

பூகோள கள மீளாய்வு தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபைக்கு இலங்கை சிவில் அமைப்புகள் இணைந்து அறிக்கை ஒன்றை ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (3-8-250)

## கிளிநொச்சியில் உதயமானது குடில் கைத்தொழில் நிலையம்

கிளிநொச்சி அறிவியல் நகர்ப் பகுதியில் அமைந்துள்ள குடில்கைத்தொழில் நிலையம் ஒன்றினை தேசிய மொழிகள், தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் மற்றும் இந்திய துணைத் தூதுவர் நடராஜன் ஆகியோர் நேற்று முற்பகல் பத்து மணியளவில் திறந்து வைத்துள்ளனர்.

இந் நிகழ்வில் பாரளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சிறிதரன், செல்வம் அடைக்கல நாதன் மற்றும் கல்வியியலாளர்கள், மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (8-312)

# தேசியமட்ட போட்டிக்கு தெரிவான வவுனியா கால்பந்தாட்ட இளைஞர் அணி

## தேசிய சாதனை வீரர்களை கௌரவித்த கிராம மக்கள்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் விளையாட்டு விழா 2017 ஆம் ஆண்டுக்குரிய தேசிய மட்ட கால்பந்தாட்ட போட்டிக்கு தெரிவான வவுனியா மாவட்ட அணியான 786 இளைஞர் கழக அணிக்கான கௌரவிப்பு நிகழ்வும் வழியனுப்பும் நிகழ்வும் இளைஞர் பயிற்சி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

இளைஞர் சேவைகள் மன்றத்தின் தேசியமட்ட உதைபந்தாட்டப் போட்டியில் வவுனியாவின் 786 இளைஞர் கழகம் மூன்றாம் இடத்தினைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தேசியமட்ட 2017 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டிகளின் உதைபந்தாட்ட தேசியமட்ட போட்டிகள் கடந்த 27 ஆம் திகதி முதல் பதுளை மாவட்டத்தில் நடைபெற்றன.

இவ்ஆண்டுக்கான தேசிய உதைபந்தாட்ட போட்டிக்கு வவுனியாவில் இருந்து வவுனியா பிரதேச மட்டம் மற்றும் மாவட்ட மட்டத்தில் தனது திறமையினை வெளிப்படுத்திய 786 இளைஞர் கழகம் தேசிய மட்டத்தில் பல மாவட்ட அணிகளை வீழ்த்தி இவ் ஆண்டு மூன்றாம் இடத்தினை தனதாக்கியுள்ளது.

இவர்களுக்கான மாபெரும் வரவேற்பு நிகழ்வு கிராம மக்களின் ஒழுங்கமைப்பில் வெகு சிறப்பாக வவுனியா பட்டாணிச்சூர் கிராமத்தில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

இந் நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான், முன்னாள் நகர சபை உறுப்பினர் பாரி, முன்னாள் கிராம சேவகர் நசார், சமூக ஆர்வலர் ஆரிப், இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஐ.சுகானி, இளைஞர் கழக சம்மேளன தலைவர் சு.காண்டீபன், இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ.கேசவன், முன்னாள் மாவட்ட சம்மேளன தலைவர் தே.அமுதராஜ், உதைபந்தாட்ட சம்மேளன தலைவர் எ.ஜோன்சன் மற்றும் வைத்தியர் அனஸ் உட்பட பல நூற்றுக்கணக்கான கிராம மக்களின் பங்களிப்புடன் தேசிய வெற்றி வீரர்கள் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (3-8-112-250)





## பாலர் பாடசாலைக்கு பாண்ட் வாத்தியங்கள்

வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் க. சிவனேசனுக்கு வடக்கு மாகாண சபையினால் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி மூலம் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள ஒட்டுசுட்டான் சின்னச் சாளம்பன் கிராமத்திலுள்ள அன்பழகன் பாலர் பாடசாலைக்கு சிறுவர்களுக்கான பாண்ட் வாத்தியக் கருவிகள் அன்பளிப்பாக வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றுள்ளது.

பாலர் கல்வியை வளம்படுத்தும் நோக்கில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன் நிகழ்வில் கலந்து கொண்டு பாண்ட் வாத்தியக் கருவிகளை அன்பளிப்பாக வழங்கி வைத்துள்ளார். (3-8-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வீட்டுத்திட்டத்தில் இருந்து வெளியேறும் உயிலங்குள மக்கள்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு - துணுக்காய், உயிலங்குளம் இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் உள்ள மக்கள் குடியிருப்பில் போதிய அடிப்படை வசதிகள் இன்மை, மாற்றுத்திறனாளிகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான தொழில் வாய்ப்பின்மை, காட்டு யானைகளின் தொல்லை போன்ற காரணங்களால் இங்கிருந்து வெளியேறி வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த வீட்டுத்திட்டத்தின் கீழ் வாழ்ந்து வரும் அப்பகுதி மக்கள் தமக்கான அடிப்படை வசதிகள் இன்மை மற்றும் வீடுகள் ஆபத்தான நிலையில் காணப்படுதல் போன்ற காரணங்களால் வெளியேறி வருவதாக தெரிவித்துள்ளனர்.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள உயிலங்குளம் கிராமத்தில் இந்திய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட 50 வீட்டுத் திட்டத்தில் தற்போது 20 வரையான குடும்பங்களே வாழ்ந்து வருகின்றன.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் சொந்தக்காணிகள் இன்றி வாழ்ந்த மாற்றுத்திறனாளிகளின் குடும்பங்கள், பெண் தலைமைத்துவ குடும்பங்கள் என தெரிவு செய்யப்பட்டு கடந்த 2012 ஆம் ஆண்டு மேற்படி இந்திய அரசின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட 50 வீட்டுத்திட்டத்தின் மாதிரிக் கிராமத்தில் 50 வரையான குடும்பங்கள் குடியேற்றப்பட்டன.

இம் மாதிரி வீட்டுத்திட்டத்திலிருந்த ஐம்பது வரையான குடும்பங்களில் 30 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இங்கிருந்து வேறு இடங்களுக்கு குடிபெயர்ந்துள்ளன.

மேலும், தலா பத்து இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் யாவும் உரிய முறையில் அமைக்கப்படாமல் சுவர்களில் வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளதுடன், ஆபத்தான நிலையில் காணப்படுகின்றன.

இந்த வீடுகளில் வாழ முடியாத சூழல் காணப்படுவதாகவும், குறித்த வீடுகள் அமைக்கப்பட்டு நான்கு வருடங்களுக்குள்ளேயே சேதமடைந்துள்ளதாக தெரிவித்துள்ள மக்கள் தமக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும் வீடுகளை புனரமைத்துத் தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (3-8-281)

# வீட்டுத் திட்டத்திற்கான முதற்கட்ட நிதி கையளிப்பு



முல்லைத்தீவு மாவட்டத்தில் நீண்டகாலமாக இடம்பெயர்ந்த மக்களுக்கான செயலணியின் வேலைத் திட்டங்களின் முதலாவதாக வீடமைப்புக்கான நிதி வழங்கும் நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணியளவில் நீராவிப்பிட்டி மேற்கு பொதுநோக்கு மண்டபத்தில் வடமாகாண சபை உறுப்பினர் ஜெனோபர் தலைமையில் நடைபெற்றது.

ஒவ்வொன்றும் சுமார் 8 இலட்சம் பெறுமதியான வீடுகள் 128 குடும்பங்களுக்கு வீடமைப்புத்திட்டத்துக்கான முதற்கட்ட நிதிவழங்கும் இந்நிகழ்வில் கைத்தொழில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் உள்ளிட்ட விருந்தினர்கள் கலந்து கொண்டு வீட்டுத்திட்டத்திற்கான முதலாவது கட்ட நிதியினை வழங்கி வைத்தனர். (8-281)

# தொலைக்காட்சி நாடகங்களை பார்ப்பதை விடுத்து நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களைப் பொருத்துங்கள்

## வடமாகாண சுகாதார அமைச்சர் வேண்டுகோள்



நுண்நிதிகடனில்தொலைக்காட்சி நாடகங்களை பார்ப்பதை விடுத்து வீட்டுக்கொரு நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை பொருத்துங்கள் என வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வவுனியா தாலிக்குளம் அ.த.க பாடசாலையில் அமைக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்தை மாணவர்களின் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

இன்று பலரும் நுண்நிதி கடன்களைப் பெற்று வீட்டில் தொலைக்காட்சிகளையும், டிஸ் அன்ரனாக்களையும் பொருத்துவதில் ஆர்வம் காட்டுகின்றனர். இதனை விட வீட்டுக்கொரு வடிகட்டும் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை பொருத்துவதன் மூலம் சுத்தமான குடிநீரை பருகமுடியும்.

தற்போது தொற்றாத நோயின் தாக்கம் எமது நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது. அதிலும் குறிப்பாக நாட்பட்ட சிறுநீரக நோய்த்தாக்கமுடையவர்கள் அண்மைக்காலமாக அதிகளவில் இனங்காணப்பட்டுள்ளனர்.

இலங்கையில் எட்டு மாவட்டங்கள் அதிகளவிலான சிறுநீரக நோயாளர்களை கொண்ட மாவட்டங்களாக இனங்காணப்பட்டுள்ளன. அதில் எமது மாகாணத்தில் வவுனியா மாவட்டமும் முல்லைத்தீவு மாவட்டமும் அதிகளவிலான நோயாளர் களை கொண்ட மாவட்ட ங்களாக அடையாளங்காணப்பட்டுள்ளன.

இதற்கு பல காரணங்கள் இருந்தாலும் சுத்தமான குடிநீர் பருகாமையும் ஒருகாரணமாக கருதப்படுகின்றது. சிறுவயதிலிருந்தே சுத்தமான குடிநீரை பருகுவதை ஊக்குவிக்கும் வகையில் பாடசாலைகளில் இவ்வாறான இயந்திரங்களை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். எனக்கு ஒதுக்கப்பட்ட மாகாண குறித்தொதுக்கப்பட்ட கொடை நிதியிலிருந்து இதுவரை 18இற்கு மேற்பட்ட பாடசாலைகளுக்கு இந்த இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது. இவ்வருடமும் 7 பாடசாலைகளுக்கு இந்த இயந்திரம் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிராம சேவை உத்தியோகத்தர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களென பலரும் கலந்து கொண்டனர். (3-8-250)




# மூத்த உறுப்பினர்களை கௌரவிக்கும் நிகழ்வு





முல்லை மாவட்ட அரச ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் மூத்த உறுப்பினர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்றைய தினம் முற்பகல் 10 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

முல்லை. மாவட்ட அரச ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் மு. குகதாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நீண்டகாலமாக அரச சேவையில் கடமையாற்றி இளைப்பாறிய நிலையில் இன்றும் சமூகத்திற்கு தங்கள் சேவையை வழங்கி வரும் இருபது ஓய்வூதிய அங்கத்தவர்களுக்கு மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி, நினைவுப் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா, வடமாகாண சபை பிரதி அவைத்தலைவர் கமலேஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர் ஆ. புவனேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட அரச ஓய்வூதியர்கள் பலரும் கலந்து கொண்டனர். (8)

# புலமைப்பரிசில் செயலமர்வு

வெளிச்சம் அறக்கட்டளையும் விபுலானந்தாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கமும் 2006 ஆம் ஆண்டு உயர்தர மாணவர்களும் இணைந்து வவுனியா தெற்கு வலயத்திற்குட்பட்ட வ/ விபுலானந்தாக் கல்லூரியைச் சேர்ந்த தரம் -5 இல் கல்வி கற்கும் 180 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் செயலமர்வு நேற்று முன்தினம் 30 ஆம் திகதி விபுலானந் தாக் கல்லூரியில் இடம் பெற்றது.

இச்செயலமர்வில்தலைமை உரையாற்றிய பாடசாலையின் அதிபர் எமது பாடசாலைக்கு பழைய மாணவர் சங்கமும் வெளிச்சம் அறக்கட்டளையும் இணைந்து இவ்வாறான செயலமர்வினை நடத்தியமை பெருமைக்குரிய செயற்பாடு என்றும் இதன் மூலம் இம் மாணவர்களுடைய உயர்வு மட்டத்தை உயர்த்த முடியும் என்றும் இனி வரும் காலங்களில் இவர்களுடைய சேவைகள் எப்போதும் எமது பாடசாலைக்கு கிடைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். தொடர்ந்து வெளிச்சம் அறக்கட்டளையின் தலைவர் பா.லம்போதரன், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர், ஆரம்ப பிரிவு அதிபர் ஆகியோர் உரையாற்றினர். வளவாளர்களாக வவுனியா வடக்கு வலய ஆசிரிய ஆலோசகராக க. சந்திரகுமாரும் ஆசிரியராக அ.சசிகுமாரும் கடமை யாற்றினர். அத்துடன் மாணவர்களுக்கு கையேடும் உணவுப் பொருட்களும் வெளிச்சம் அறக்கட்டளையினால் வழங்கப்பட்டது. (8)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல், கல்வி எல்லாத்துறையிலும் இந்திய-இலங்கை உறவு மேலோங்கி வளர்ந்து வருகிறது

## யாழ்.இந்.துணைத்தூதுவர் நடராஜன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

அரசியல் ரீதியாக, கல்வி ரீதியாக, பண்பாட்டு ரீதியாக, எல்லாத் துறைகளிலும் இந்திய-இலங்கை இருதரப்பு உறவு எப்பொழுதும் தொடர்ந்து மேலோங்கி வளர்வதை நம் எல்லோராலும் அவதானிக்க முடியும் என யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் நாட்டைச் சேர்ந்த தொழிலதிபரான வி.சுவாமிநாதனின் ஏற்பாட்டில் சர்வதேச பிளாஸ்ரிக் பொதி செய்தல் மற்றும் இறப்பர் கண்காட்சி நாளை மறுதினம் 3 ஆம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதி வரை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.




இந்தக் கண்காட்சி தொடர்பாக வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தொழிலதிபர்கள், தொழில் முனைவோருக்கான தெளிவுபடுத்தல் நிகழ்வு யாழ்.இந்தியத் துணைத் தூதரகத்தின ஏற்பாட்டில் யாழ். கிறீன்கிறாஸ் ஹோட்டலில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் ரீதியாக இருக்கலாம் அல்லது கல்வி ரீதியாக இருக்கலாம் கலை, கலாசாரப் பண்பாட்டு ரீதியாக இருக்கட்டும், வர்த்தக ரீதியாக இருக்கட்டும், பொருளாதார ரீதியான மேம்பாடு அல்லது விளையாட்டுத் துறையாக இருக்கட்டும் எல்லாத் துறைகளிலும் இந்திய - இலங்கை இருதரப்பு உறவு எப்பொழுதும் தொடர்ந்து மேலோங்கி வளர்வதை நம் எல்லோராலும் அவதானிக்க முடியும்.

நண்பர்களே ! இந்தியா என்பது ஒரு பெரிய நாடாக இருக்கலாம். அதனுடைய பொருளாதார வளர்ச்சியும் குறிப்பாக தென்கிழக்காசியக் கண்டத்தில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி- அபிவிருத்தி அதிவேகத்தில் இருக்கின்றது என்பதை நாம் எல்லோரும் அறிவோம்.

### பேராசை வேண்டும்

நாம் பொதுவாகச் சொல்லுவோம். ஆசை என்பது நல்லதல்ல. பேராசை இருக்கவே கூடாது என்று. ஆனால் நான் சொல்வேன் ஆசை, பேராசை சில வேளைகளில் இருக்க வேண்டும் என்று . அப்போது தான் வாழ்க்கையில் நாம் முன்றே முடியும். நாடு முன்றே முடியும்.

### போதாமையை உணர்கின்றோம்

அந்த வகையில் எவ்வளவு தான் அதிவேகத்தில் பொருளாதார அபிவிருத்தி இருந்தாலும் இன்று கூட நாங்கள் பல விடயங்களில் போதாமையை உணர்கின்றோம்.

இந்தியாவில் , உதாரணத்திற்கு கல்வியை எடுத்துக் கொண்டால் பல்லாயிரக்கணக்கான பாடசாலைகள் இருக்கின்றன. ஆயிரக்கணக்கான கல்லூரிகள் உள்ளன. ஆயிரக்கணக்கான பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. இருந்த போதும் இன்றும் பெற்றோர்களைக் கேட்டால் என் குழந்தைக்கு அனுமதி கிடைக்கவில்லை. பல்கலைக் கழகங்களில் அனுமதி கிடைக்கவில்லை என்று தான் சில பேர் கூறும் நிலையுள்ளது.

இந்தியாவில், எவ்வளவுதான் அபிவிருத்தி இருந்தாலும் இன்றும் போதாமையை உணர்கின்றோம். பொருளாதார ரீதியில் வளர்ந்து வரும் நிலையில் இருந்தாலும் அதுவும்போதாது என்றுநினைக்கின்றோம்

### எல்லாத்துறையிலும் வளர்ச்சி வேண்டும்

ஏனென்றால் என் பக்கத்து வீட்டுக்காரனும் என்னைப் போன்று வசதியா, சந்தோசமாக இருந்தால் தான் நானும் சந்தோசமாக, வசதியாக இருப்பதாக உணர முடியும். அந்தவகையில் இந்தியாவும் அப்படித்தான் உணர்கின்றது.

அதனுடைய அண்டை நாடுகள், நட்பு நாடுகள் இலங்கை போன்ற நாடுகளிலும் அபிவிருத்தி வேண்டும். அது எந்த ரீதியாக இருந்தாலும் பொருளாதார ரீதியாக, வர்த்தக ரீதியாக, கல்வி, எல்லாத் துறையிலும் வளர்ச்சி வேண்டும்.

அந்த வளர்ச்சிக்காக நாம் எல்லோரும் ஒன்றுகூடி சேர்ந்து பாடுபட வேண்டும். உழைக்க வேண்டும். இந்த தெற்காசியக் கண்டத்தில் நமது நாடுகள் வலிமையான நாடுகளாக உருவாக வேண்டும் என்றால் நாம் எல்லோருமே இணைந்து - ஒத்துழைத்து முயற்சி செய்தால் வெற்றி கிடைக்கும்.

முயற்சி திருவினையாக்கும்.

### "நம்முடைய முயற்சிகள் தவறலாம் ஆனால் முயற்சிக்க தவறக்கூடாது"

நான், சில வேளைகளில் கூறுவேன், நம்முடைய முயற்சிகள் தவறலாம். ஆனால், முயற்சிக்கத் தவறக் கூடாது. அந்த வகையில் இங்கே எங்கள் அழைப்பையேற்று நீங்கள் எல்லோரும் வந்திருப்பது மகிழ்ச்சியை மட்டும் கொடுக்கவில்லை. நம்மாலும் முடிந்த வரைக்கும் நமக்கு எவ்வளவு பக்குவம், சக்தி இருக்கின்றதோ அந்த வகையில் எங்களுடைய பங்கும் இலங்கை நாட்டுக்கு, இந்திய நாட்டுக்கு ஒரு உதவியாக இருக்கும். நம்முடைய பங்கும் அதில் வேண்டும்.

கொழும்பில் ஓகஸ்ட் மாதம் 3,4,5 ஆம் திகதிகளில் பிளாஸ்ரிக் - மற்றும் இறப்பர் பரஸ்பர தொழிலைச் சார்ந்தவர்களின் கண்காட்சி நடக்கவுள்ளது.

இக்கண்காட்சிக்கு உங்களை அழைத்துச் செல்வதற்காகத்தான் இவர்கள் இங்கு வந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் எந்தளவுக்கு நாம் ஒன்று சேர்ந்து இந்தத் தொழிலை மேம்படுத்த முடியும்.எப்படி முன்னேற முடியும் என்ற கருத்துக்களை முன்வைக்க வந்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்த மட்டில் குறிப்பாக போர் முடிந்த பின்னர் இந்தியா எந்தளவுக்கு இங்கு புனரமைப்பு வேலைத்திட்டங்களைச் செய்துள்ளது என்பதை நான் இங்கு கூற வேண்டிய அவசியமில்லை.

இருந்த போதிலும், பொருளாதார ரீதியிலும் வர்த்தக ரீதியிலும் நமது உறவு வலுப்பட வேண்டும். நேர்பட வேண்டும் என்று நாங்கள் எப்பொழுதும் ஆசைப்படுகின்றோம்.



அதற்காகத் தான் வடக்கு மாகாணத்தில் போருக்குப் பின் ஒரு இந்தியத் துணைத்தூதரகம் கூட யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் கடந்த வருடங்களில் 2015, 2016 ஆம் ஆண்டுகளில் ஏராளமான வர்த்தகர்கள் , தொழிலதிபர்கள் குறிப்பாக தமிழகத்திலிருந்து வந்ததை நீங்கள் அறிவீர்கள். அவர்கள் இங்கு வந்ததன் முக்கிய நோக்கமே இங்குள்ள மக்களுக்கு எப்படி உதவி செய்யலாம், அவர்களுடன் சேர்ந்து ஒத்துழைத்து எப்படி முன்றே முடியும் என்பதற்காகத் தான் அவர்கள் இங்கு வந்தார்கள். இருந்த போதும் காரணம் நமக்கு சரியாகத் தெரியாது.

### பொருளாதார அபிவிருத்தி வடக்கில் போதாது

ஆனால், பொருளாதார அபிவிருத்தியைப் பொறுத்தவரைக்கும் அது நாம் நினைத்தபடி இதுவரை அவ்வளவாக நடக்கவில்லை.

சில விடயங்கள் நடந்திருக்கின்றன.ஆனால் அது போதாது. நான் ஆரம்பத்தில்கூறியதைப்போல, ஆசை இருக்கிறது.

ஆனால் அது நிறை வேற வேண்டும். எங்களுடைய முய ற்சி எப்பொழுதும் தொடர்ந்து வர்த்தக ரீதியிலும் இருக்க வேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

உங்களுக்கு எந்தவிதமான உதவிகள் வேண்டுமென்றாலும்- தேவைப்பட்டாலும் இந்திய அரசாங்கம் இங்குள்ள துணைத் தூதரகம் ஊடாக ஒத்துழைக்க, ஒருங்கிணைந்து வேலை செய்யத் தயாராக இருக்கின்றது என்பதைக் கூறிக் கொள்ள விருப்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)



எழுத்தாளர் தெணியானின் பவளவிழாவும் ஜீவநதி சிறப்பிதழ், தெணியானின் குறுநாவல் வெளியீட்டு நிகழ்வும் அண்மையில்இடம் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் ஆலயச் சூழலில்

## தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கின் ஐந்தாம் நாள் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.45 மணி முதல் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்கா தேவி மண்மண்டபத்தில் இடம் பெறும். இதில் பாட்டு- குமுதா உமாகாந்தன், வயலின்-பசியாம கிருஸ்ணா, மிருதங்கம்- க.நந்தகுமார், கடம்- அ.செல்வரத்தினம் ஆகியோர் கலந்துகொள்வர். (இ-3)



நல்லூர்க்கந்தன் ஆலயச் சூழலில் நேற்று முன்தினம் மாலைநேரத் திருவிழாவின் போது ஆலய வளாகத்தில் பரப்பப்பட்டுள்ள மணலில் வேலணையைச் சேர்ந்த சுகுமார் என்ற அடியவர் விநாயகப் பெருமானின் உருவத்தை சிற்பமாக வடித்துள்ளார்.

## தெய்வீக சிறப்பு நிகழ்வின் ஐந்தாம் நாள் நிகழ்வு

நல்லூர்க்கந்தசுவாமிஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு உலக சைவத் திருச்சபை நடத்தும் தெய்வீக சிறப்பு நிகழ்வின் ஐந்தாம் நாள் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 7.45 மணிவரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் இடம்பெறும் சைவப் புலவர் சிவஸ்ரீ கதிர் குமார சாமி சுமுகலிங்க சிவாச்சாரியார் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் சைவ சமய வாழ்வியல் எனும் தலைப்பில் சைவப்புலவர் சைவநெறிச் சன்மார்க்கர் காசிராஜா சொற்பொழிவாற்றுவார். (இ-3)

## கந்தபுராண எழுச்சி விழாவின் ஐந்தாம் நாள் நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் நிகழ்வுகள் அரங்கேறும் கந்தபுராண எழுச்சி விழாவின் ஐந்தாம் நாள் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லை திருஞான்சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இடம்பெறும்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் முன்னிலையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.கர்ஜின் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக காரைநகர் பிரதேச செயலாளர் ஈ.தயாரூபன் கலந்துகொள்வார். இந்நிகழ்வில் கந்த புராணம் தொடர்பான ஆன்மீகச் சொற்பொழிவினை சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் வழங்குவதுடன் ஞான ஏந்தல் ந.பரமேஸ்வரன் தன் குழுவினருடன் வழங்கும் திருப்புகழ் கச்சேரியும் இடம்பெறும். (இ-3)

# மீளாய்வின் போது பாதிக்கப்பட்ட சமுர்த்தி பயனாளிகள் போராட்டம்





(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி நிவாரண மீளாய்வைக் கண்டித்து சமுர்த்திப் பயனாளிகள் வரணி சமுர்த்தி வங்கி முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சாவகச்சேரி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட வரணி சமுர்த்தி வங்கியூடாக சமுர்த்தி பயனாளிகளுக்கான மீளாய்வுகள் கடந்த வாரம் இடம்பெற்றது. இதன்போது சமுர்த்தி பயனாளிகளாக இருந்த பலருடைய பெயர்கள் தவிர க்கப்பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் நியாயமான முறையில் மீளாய்வுகள் இடம்பெறவில்லை எனவும் உண்மையான தேவைப்பாடுகள் உடைய பயனாளிகளின் பெயர்கள் மீளாய்வின் போது திட்டமிட்ட முறையில் நீக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தும் நேற்றுக்காலை 9 மணியளவில் வரணி சமுர்த்தி வங்கியின் பிரதான வாயிலை மூடி உத்தியோகத் தர்களை உள்ளே விடாது போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் வரணி சமுர்த்தி வங்கி பிரி விற்குட்பட்ட சுமார் 150 மேற்பட்ட பயனாளிகள் ஈடுபட்டிருந்தனர். இதையடுத்து தென்மராட்சி சமுர்த்தி தலைமையக முகாமையாளர் குறித்த இடத்திற்கு சென்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் கலந்துரையாடி மீண்டும் மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு சமுர்த்தி பயனாளிகள் பாதிக்கப்படாதவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்ததையடுத்து போராட்டம் நிறைவுக்கு வந்தது. வரணி சமுர்த்தி வங்கியில் இதற்கு முன்னர் பயனாளிகளுக்கான பணம் இலகுவில் விரைவாக வழங்கப்படுவதில்லை என வலம்புரி சுட்டிக் காட்டியதை அடுத்து அச்செயற்பாடு மேலதிகாரிகளின் தலையீட்டையடுத்து இலகுபடுத்தப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-9)

# அம்பாந்தோட்டை துறைமுக உடன்படிக்கை நாட்டில் முன்னெடுக்கப்படும் பாரிய திட்டம்

## நிதியமைச்சர் மங்கள மகிழ்ச்சி


அம்பாந்தோட்டை துறைமுக உடன்படிக்கை மகாவலி அபிவிருத்தித் திட்டத்திற்குப் பின்னர் நாட்டில் முன்னெடுக்கப்பட்டுள்ள பாரிய அபிவிருத்தித் திட்டமாகும் என்று நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுக உடன்படிக்கை மற்றும் தேசிய பொருளாதார அபிவிருத்தி கருத்து தொடர்பாக தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், அம்பாந்தோட்டை துறைமுக உடன்படிக்கையின் கீழ் நேரடியாக முதலீடுகள் கிடைப்பதாக சுட்டிக்காட்டிய அமைச்சர் இதன் காரணமாக அபிவிருத்தியில் பெரும் வளர்ச்சி ஏற்படும் என்றும் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை உள்ளிட்ட மாவட்டங்கள் பலவற்றுக்கு இந்த அபிவிருத்தியின் மூலம் பல நன்மைகள் கிடைக்கும். இந்தத் திட்டத்திற்காக தலைமைத்துவத்தை வழங்கிய ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் தான் நன்றி தெரிவிப்பதாக அமைச்சர் மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார். (இ-7)

### நல்லூர் கந்தனுக்கு இன்று ஐந்தாம் திருவிழா



### நல்லைநகர் உறையும் பணக்காரக் கந்தா

யாழின் நல்லையில் உறையும் கந்தா
வேலின் துணையுடன் அருள்புரியும் கந்தா
மயிலின் மீது வீற்றிருந்தருளும் கந்தா
துயிலும் பக்தர்களுக்கு சக்தி கொடுக்கும் கந்தா
சேவல் கொடியுடன் விளங்கும் முருகா
காவல் செய்து பிரபஞ்சத்தைக் காக்கும் மருகா
நாவல் கனியில் திருவிளையாடல் புரிந்த முருகா
ஆவலுடன் பக்தருக்கும் அருள் தருவாய் கந்தா

முளாயூர் க.அபிஷேக், யாழ்ப்பாணம்

### வேலவனே துன்பங்கள் நீக்கிடுவாய்

வேலவனே வேலவனே
நல்லூர் பதியில் உறைபவனே
அல்லலுறும் பக்தர்களின்
அறு வினைகள் தீர்த்திடுவாய்

தேடி வரும் பக்தருக்கு
தெய்வ பலம் கொடுத்திடுவாய்
நாடி வரும் மக்களுக்கு
நல்ல வழி காட்டிடுவாய்

பக்தி பலம் பெருகுதையா
பரவசத்தில் பாடல்களும்-எம்
நாவை நோக்கி வருகுதைய்யா
நல்லறிவும் பெருகுதையா!

பா.கலாதேவி
சண்டிலிப்பாய் மேற்கு.

### நம்பினோர் துயர் தீர்க்கும் நல்லை நாயகா

நல்லைக்கந்தன் இருக்கையிலே
சூழும் வினைகள் சூன்யமாய் ஓடும்
கதி யென்று உன்னை நாடிவந்தோம்
நம் விதிகளை மாற்றிடு நல்லை நாயகா

கலியுகம் தன்னில் நடப்பவை
அனைத்தும் கவலைக்குரியதல்லோ
வலி போக்கி கலி நீக்கி வாழ்வாங்கு
வாழவே நல்லை நாயகா வழி சமைத்துவிடு

அல்லும் பகலும் வேலும் மயிலும்
துணையிருக்க வேறென்ன வேண்டும் வாழ்வில்
நாடி வரும் பக்தர் துயர் தேடி ஓடி
துயர் நீக்கும் நல்லை நாயகா உன்திருவடி சரணம்.

செல்வி கீர்த்தனா ஆறுமுகதாசன்

### நல்லைக்கந்த சந்தப்பா

காற்று மாகினை கடலு மாகினை
கண்ட வண்டமெல் லாமு மாகினை
ஊற்று மாகினை சுஹ்று மாகினை
உணர்வி லொன்றியோ ருணர்வு மாகினை
ஆற்று மாகினை நாற்று மாகினை
அவனி யெங்குமே யணுவு மாகினை
ஆற்று மாற்றலி னசைவு மாகினை
அற்பு தப்பதி நல்லைக் கந்தப்பா!

கலாபூஷணம், சந்தக்கவிஞர், நவ.பாலகோபால்


நல்லைக் கந்தன் திருவடியை
உங்கள் கவிதைகளால் அர்ச்சனை
செய்யுங்கள்
கவிதைகளை அனுப்ப வேண்டிய முகவரி
"நல்லைக் கந்தன் பாமாலை"
இல. 03, 2 ஆம் ஒழுங்கை
பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## விவசாயிகளின் போராட்டம் தொடர்கிறது

### 15ஆவது நாளில் பாடை கட்டி ஊர்வலம்



(டில்லி)

டில்லி ஜந்தர் மந்தர் பகுதியில் தமிழக விவசாயிகள் பாடை கட்டி ஊர்வலமாக சென்று போராட்டம் நடத்தினார்கள்.

கடன் தள்ளுபடி, காவிரி மேலாண்மை வாரியம் அமைத்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்க தலைவர் அய்யாக்கண்ணு தலைமையில் தமிழக விவசாயிகள் டில்லியில் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

டில்லி ஜந்தர் மந்தர் பகுதியில் நடைபெற்று வரும் இப் போராட்டம் நேற்று முன்தினம் 15 ஆவது நாளாக நீடித்தது.

ஒவ்வொரு நாளும்நூதன முறையில் போராட்டம் நடத்தி வரும் அவர்கள், நேற்று முன்தினம் பாடை கட்டி ஊர்வலம் நடத்தினார்கள்.

பாடை கட்டி அதில் ஒருவரை படுக்க வைத்து, சிறிது தூரம் ஊர்வலமாக தூக்கிச் சென்று விட்டு திரும்பினார்கள்.

பின்னர் அய்யாக்கண்ணு நிருபர்களிடம், தமிழகத்தில் வரட்சியால் விவசாயிகளின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

ஆனால் விவசாயிகளின் கோரிக்கைகளை மத்திய அரசு கண்டுகொள்ளவில்லை. எனவே அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக ஒவ்வொரு நாளும் நூதனமான முறையில் போராட்டம் நடத்தி வருகிறோம் என்றார். (3-8)

## ஒப்பந்தத்தை மீறும் பாக்.இராணுவம்



(ஸ்ரீநகர்)

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு அருகே பாகிஸ்தான் இராணுவத்தினர் நேற்று முன்தினம் நள்ளிரவில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி அத்துமீறி துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்டுள்ளனர்.

ஜம்மு காஷ்மீர் மாநிலம் எல்லைக்கட்டுப்பாடு கோட்டின் அருகே உள்ள ரஜோரி மாவட்டத்தின் நவுஷேரா செக்டார் பகுதியில் நேற்று முன்தினம்நள்ளிரவில்பாகிஸ்தான் இராணுவத்தினர் துப்பாக்கி மற்றும் சிறிய ரக மோட்டார் குண்டுகளால் நிலைகள் மீது போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி தாக்குதலை நடத்தினர்.

பாகிஸ்தான் இராணுவத்தின் தாக்குதலையடுத்து இந்திய வீரர்கள் தக்க பதிலடி கொடுத்து வருவதாக இந்திய இராணுவத்தின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதத்தில் மட்டும் பாகிஸ்தான்இராணுவத்தினர் 23 முறை போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறி இந்திய நிலைகளை குறிவைத்து தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். இதில், 9 இராணுவ வீரர்கள் உட்பட 11 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (3-8)

## சாஸ்திரி பவனில் தீ விபத்து



(டில்லி)

மத்திய அமைச்சரவை அலுவலகங்கள் அமைந்துள்ள டில்லி சாஸ்திரி பவன் கட்டடத்தில் நேற்று திடீர் தீ விபத்து ஏற்பட்டது. உரிய நேரத்தில் தீ அணைக்கப்பட்டதால் முக்கிய கோப்புகள் தீக்கிரை ஆகாமல் தப்பின.

நாட்டின் தலைநகரான டில்லியின் மத்திய பகுதியில் சாஸ்திரி பவன் என்ற கட்டடம் அமைந்துள்ளது. இக்கட்டடத்தில் மத்திய சட்டத்துறை அமைச்சகம், தகவல் ஒலிபரப்பு, மனித வள மேம்பாட்டுத்துறை, கார்பரேட் விவகாரங்கள், இரசாயனம் மற்றும் பெட்ரோகெ மிக்கல்ஸ்துறை ஆகிய அமைச்சகத்தை சேர்ந்த அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

இந்நிலையில், இந்த கட்டடத்தின் ஏழாவது மாடியில் நேற்றுக் காலை திடீரென தீ விபத்து ஏற்பட்டது. தகவல் அறிந்து நான்கு வாகனங்களில் விரைந்துவந்த தீ அணைப்பு படையினர் உடனடியாக தீயை அணைத்து கட்டுப்படுத்தினர். இதனால், பெரும் சேதம் தவிர்க்கப் பட்டது. அந்த மாடியில் உள்ள அரசு அலுவலகங்களில் இருந்த முக்கிய கோப்புகள் தீக்கிரை ஆகாமல் தப்பின.

ஏ.சி இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக தீ விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடந்த 2014ஆம் ஆண்டும் இதே கட்டடத்தின் ஏழாவது மாடியில் தீ விபத்து ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. (3-8)

## அமெரிக்க தூதரக அதி...

## உடனடியாக வெளியேற...

### ரஷ்ய ஜனாதிபதி அதிரடி உத்தரவு



(மொஸ்கோ)

ரஷ்யாவில் இருக்கும் அமெரிக்க தூதரக அதிகாரிகள் 755 பேர் உடனே நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என அந்நாட்டின் ஜனாதிபதி விளாடிமிர் புடின் உத்தரவிட்டுள்ளார்.

அமெரிக்காவின் நலனுக்கு எதிராக செயற்பட்டதாக அமெரிக்காவையும் அதன் நட்பு நாடுகளையும் பலவீனப்படுத்துவதாகவும் ரஷ்யா, ஈரான், வடகொரியா ஆகிய 3 நாடு கள் மீது குற்றச்சாட்டு எழுந்தது.

குறிப்பாக அமெரிக்காவில் கடந்த ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில், ரஷ்யா நேரடியாக தலையிட்டதாகவும், உக்ரைன், சிரியா ஆகிய நாடுகளில் தனது இராணுவத்தின் மூலம் ஆக்கிரமிப்பு செய்ததாகவும்

## வடகொரியாவின் தாக்குதலை முறியடிக்க அமெரிக்கா தயார்

### ஏவுகணைகளை இடைமறித்து தாக்கும் ஏவுகணைச் சோதனை வெற்றி



(வோஷிங்டன்)

ஏவுகணைகளை இடைமறித்து தாக்கியழிக்கும் தாட் ஏவுகணை சோதனையை அமெரிக்க இராணுவம்வெற்றிகரமாக நிகழ்த்தியுள்ளது.

பசுபிக் கடல் பகுதியில் தாட் ஏவுகணை சோதனை 15 முறை வெற்றிகரமாக சோதிக்கப்பட்டுள்ளதாக, அமெரிக்க இராணுவம் அறிவித்துள்ளது. அணு ஆயுதங்களை சுமந்து வரும் ஏவுகணைகளை கூட நடுவானிலேயே தடுத்து நிறுத்தி, தாக்கியழிக்கும் வல்லமை கொண்டது தாட் ஏவுகணை. அமெரிக்கா வான் படையின் சி-17 விமானத்திலிருந்து செலுத்தப்பட்ட ஏவுகணையை, அலாஸ்காவிலிருந்து ஏவப்பட்ட 'தாட்' இடைமறிப்பு ஏவுகணை சரியாக கணித்து தாக்கி அழித்ததாக அமெரிக்க ஏவுகணை பாதுகாப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இரண்டு முறை கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனைகளை நடத்தியுள்ள வடகொரியா, அமெரிக்க நகரங்களை தாக்கி அழிக்கும் வல்லமையை தாங்கள் பெற்று விட்டதாக கூறி வருகிறது.

இதற்கு பதிலடியாக அமெரிக்க இராணுவம் தாட் ஏவுகணை சோதனையை நடத்தியுள்ளது. அமெரிக்கா கடந்த மாதமே தென்கொரிய எல்லையில்தாட் ஏவுகணையை நிலை நிறுத்தியது. சீனாவின் சுப்பர் சொனிக் ஏவுகணைகளை கூட தாக்கியழிக்கும் வல்லமை படைத்தது தாட் ஏவுகணை என்பதால், அந்நாடு அமெரிக்காவிற்கு எதிர்ப்பு தெரிவித்தது குறிப்பிடத்தக்க[illegible]

இதுதவிர தென்கொரியாவி[illegible] விமானப் படைத்தளத்திற்கு மேலே வானில் பறந்த அமெரிக்க போர் விமானங்கள், பறந்த படியே எரிபொருள் நிரப்பி சாகசத்தில் ஈடுபட்டது.

அமெரிக்க விமானங்களுடன் தென்கொரியா மற்றும் ஜப்பான் போர் விமானங்களும் பயிற்சியில் ஈடுபட்டன. இதனால் கொரிய தீபகற்பத்தில் போர் பதற்றம் அதிகரித்துள்ளது. (3-8)

## சீன - அமெரிக்க வர்த்தகத்...

## அணுவாயுத திட்டத்திற்கு...

(பியாங்யாங்)

வடகொரியாவின் அணுவாயுத திட்டம் மற்றும் சீன - அமெரிக்க வர்த்தகம் ஆகிய வற்றுக்கு இடையில் எந்தத் தொடர்பும் இல்லை என சீன துணை வர்த்தக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை சீனத் தலைநகர் பீஜிங்கில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடகொரியாவின் நடவடிக்கைகள் மீது அழுத்தம் ஏற்படுத்தும் வகையில் சீனா எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்ததைத் தொடர்ந்தே குறித்த சீன அதிகாரி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை வடகொரியாவால் நடத்தப்பட்ட ஏவுகணை சோதனை தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்த ட்ரம்ப், "அமெரிக்காவில் இருந்த சில முட்டாள்தனமான முன்னாள் தலைவர்கள் சீனாவுடன் வர்த்தக உறவுகளை ஏற்ப



டுத்தி பல பில்லியன் டொலர்களை சீனா சம்பாதிக்கும்படி செய்திருந்தனர்.

இருப்பினும், அதற்கு கைமாறாக வடகொரியா விடயத்தில் சீனா எந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



## காரிகள் வேண்டும்

கூறி அந்த நாட்டின் மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது.

இந்நிலையில் ரஷ்யா மீது பொருளாதார தடை விதிக்கும் மசோதாவுக்கு அமெரிக்க செனட் சபை உறுப்பினர்கள் ஆதரவு அளித்துள்ளனர்.

இதனால் அமெரிக்கா மீது ரஷ்யா அதிருப்தி அடைந்துள்ளது.

இதன் எதிரொலியாக ரஷ்யாவில் சுமார் 1000-க்கும் அதிகமான அமெரிக்க தூதரக அதிகாரிகள் தற்போது பணி யாற்றி வருகின்றனர்.

அவர்களில் 755 பேரை செப்டெம்பர் முதலாம் திகதிக்குள் வெளியேற விளாடிமிர் புடின் உத்தரவிட்டுள்ளார். (3-8)

# வெனிசுலா தேர்தலில் கலவரம்

## 13 பேர் பலி



(கராகஸ்)

வெனிசுலா நாட்டில் நடைபெற்ற அரசியல் நிர்ணய சபை தேர்தலுக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சிகள் மற்றும் பொதுமக்கள் நடத்திய போராட்டம் கலவரமாக மாறிய சூழலில் 13 பேர் வரை பலியாகியிருக்கலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

தென் அமெரிக்க நாடான வெனிசுலாவில் புதிய அரசியலமைப்பு சட்டம் இயற்றுவதற்காக ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ முடிவு செய்திருந்த நிலையில், இதற்கான அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களை நியமிப்பதற்கான தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஆனால், ஜனாதிபதி நிக்கோலஸின் இந்த முடிவை எதிர்த்து அந்நாட்டு எதிர்க்கட்சிகள் மற்றும் பல்லாயிரக் கணக்கான பொதுமக்களும் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தலுக்கு எதிர்ப்பு தெரிவித்து நடைபெற்ற போராட்டம் கலவரமாக மாறியது.

இதில், போராட்டக்காரர்களை ஒடுக்குவதற்காக பாதுகாப்புப்படையினர் அதிரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதில், 13 பேர் வரை பலியானதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அரசியல்நிர்ணய சபையை எதிர்த்து கடந்த ஏப்ரல் மாதம் முதல் நடைபெற்று வந்த போராட்டத்தில் இதுவரை 121 பேர் வரை பலியாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (3-8)

# அமெ. பதிலடி கொடுக்க நினைத்தால் பதில் நடவடிக்கை எடுக்க நேரிடும்

## வடகொரியா எச்சரிக்கை




(பியாங்யாங்)

வடகொரியாவுக்கு எதிராக அமெரிக்கா தடைகளை விதித்தாலோ அல்லது இராணுவ நடவடிக்கைகள் மூலம் பதிலடி கொடுக்க முயற்சித்தாலோ அதற்கு ஒப்பான சரியானதும் நீதியுமானதுமான நடவடிக்கை எடுக்கப்படும் என வடகொரியா அதிரடி எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொண்ட ஏவுகணை தாக்குதல் தொடர்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கருத்து தெரிவித்த வடகொரியாவின் வெளியுறவு அமைச்சகம், அமெரிக்காவால் வடகொரியா மீது விதிக்கப்படும் தடைகள் நிறுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியே குறித்த ஏவுகணைச் சோதனையைமேற்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது எனத் தெரிவித்தது.

இதேவேளை, அமெரிக்காவுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் இன்னும் என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பது தொடர்பில் எவ்வித கருத்துக்களையும் வடகொரியா தெரிவிக்கவில்லை.

வடகொரியா மீது அமெரிக்கா அண்மையில் புதிய தடைகளை விதித்ததைத் தொடர்ந்தே குறித்த கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனையை வடகொரியா முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-8)

# ரூ.18 இலட்சத்திற்கு ஏலத்தில் எடுக்கப்பட்ட டொனால்ட் ட்ரம்ப் வரைந்த ஓவியம்

(வோஷிங்டன்)


அமெரிக்காவின் மான்ஹட்டன் நகரில் உள்ள கட்டடங்களை குறிக்கும் வகையில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வரைந்த ஓவியம் ஒன்று 18இலட்சம் ரூபாய்க்கு ஏலத்தில் விற்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் முக்கிய நகரமாக மான்ஹட்டனில் உள்ள வானுயர்ந்த கட்டடங்களை குறிக்கும் விதமாக கடந்த 2005 ஆம் ஆண்டில் தொண்டு நிறுவனத்திற்காக நடத்தப்பட்ட ஏலம் ஒன்றிற்காக ஓவியம் டொனால்ட் ட்ரம்ப்பால் வரையப்பட்டது.

எனினும், இந்த ஓவியத்தில் தனக்கு சொந்தமான 'ட்ரம்ப் டவர்' கட்டடத்தை முன்னிலைப்படுத்தி ஓவியத்தை ட்ரம்ப் வரைந்திருப்பார்.

இந்த ஓவியம் லொஸ் ஏஞ்சல்ஸை மையமாக கொண்டு இயங்கும் நேட்டி சாண்டர்ஸ் என்ற ஏல நிறுவனம் மூலம் தற்போது ஏலம் விடப்பட்டது. 9,000 அமெரிக்க டொலர்களில் தொடங்கிய இந்த ஓவியத்தின் ஏலம், இறுதியாக, 29,184 அமெரிக்க டொலர்களில் முடிவடைந்தது.

இது இந்திய ரூபாய் மதிப்பில் சுமார் 18,73,175 ரூபாயாகும். இதற்கு முன்னர் ஏற்கனவே, ட்ரம்ப் பயன்படுத்திய பெரராரி ரக சொகுசு கார், கோல்ப் கிளப்பின் ஒரு தொகுப்பு மற்றும் ட்ரம்ப் கையெழுத்திட்ட விஸ்கி போத்தல் ஆகியவை ஏலம் விடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (3-8)



# இந்தியாவை மிரட்டும் வகையிலான சீன இராணுவத்தின் அணிவகுப்பு



(பீஜிங்)

சீன இராணுவத்தின் 90ம் ஆண்டு விழாவை முன்னிட்டு நேற்று முன்தினம் பிரமாண்ட அணிவகுப்பு நடத்தப்பட்டது.

அதில், இந்தியாவுக்கு மிரட்டல் விடுக்கும் வகையில் அந்நாட்டின் 5 அணு ஏவுகணைகள், அதிநவீன போர் விமானங்கள் இடம் பெற்றன. உலகின் மிகப்பெரிய இராணுவம் என்ற பெருமையை பெற்றது, சீனா வின் 'மக்கள் விடுதலை இராணுவம்'.

இதில், வேறு எந்த நாட்டிலும் இல்லாத வகையில் 23 லட்சம்வீரர்கள் உள்ளனர். 'மக்கள் விடுதலை இராணுவம்' கடந்த 1927ம் ஆண்டு, ஓகஸ்ட் முதலாம் திகதி, அப்போதைய சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் மாவோ ஜிடொங்கினால் தொடங்கப்பட்டது. இப்படை தொடங்கப்பட்டு 90 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளன.

[illegible] கொண்டாடும் வகையில் சீன தலைநகர் பீஜிங்கில் நேற்று முன்தினம் இராணுவத்தின் பிரமாண்ட அணிவகுப்பு நடைபெற்றது.

இதில், சீனா இதுவரை வெளியில் காட்டாமல் ரகசியமாக வைத்திருந்த அதிநவீன போர் விமானங்கள், கண்டம் விட்டு கண்டம் பாயும் அணு ஏவுகணைகள் போன்றவையும் இடம் பெற்றன.

டாங்பெங்-26, டாங்பெங்-21டி உள்ளிட்ட 5 அணு ஏவுகணைகள், நான்காம் தலைமுறை ஜெ-20 அதிநவீன போர் விமானங்கள், ஜெ-16 போர் விமானங்கள், 200 தொன் எடையுள்ள ராணுவ தளபாடங்களையும், வீரர்களையும் ஏற்றிக் கொண்டு எப்படிப்பட்ட கடினமான வானிலையிலும் நீண்ட தூரம் பறக்கக் கூடிய வை-20 இராணுவ சரக்கு விமானம் போன்றவை அணிவகுப்பில் இடம் பெற்றன.

இது தவிர, முப்படைகளை சேர்ந்த பல லட்சம் வீரர்கள், பெண்கள் இராணுவப் படை, பீரங்கிப் படை, ரொக்கெட் படை, கடற்படை போன்றவையும் அணிவகுப்பில் இடம் பெற்றன.

பிரமாண்டமான கண்கவர் அணிவகுப்பையும், வானில் சீறிப்பாய்ந்த போர் விமானங்கள், ஹெலிகொப்டர்களையும் மக்கள் பார்த்து வியந்தனர். (3-8)

# ...ந்திற்கும் வடகொரியாவின் ...ம் தொடர்பில்லை - சீனா



...வொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை என தெரிவித்திருந்தார்.

இருப்பினும், குறித்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த சீன துணை வர்த்தக அமைச்சர், "வட கொரியாவுக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் சீன - அமெரிக்க வர்த்தகம் ஆகியவற்றுக்கு இடையில் தொடர்பு கிடையாது.

இருப்பினும், வர்த்தக மற்றும் இருதரப்பு உறவுகள் விடயத்தில் அமெரிக்காவுடன் [illegible] என தெரிவித்தார். (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை-சீன உறவுகளால் இந்திய நிபுணர்கள் அச்சம்

## இந்திய ஊடகம் தகவல்

வளர்ந்து வரும் இலங்கை- சீன உறவுகள் குறித்து இந்திய நிபுணர்கள் அச்சம் கொண்டுள்ளனர் என்று இந்திய ஊடகம் ஒன்றில் எழுதப்பட்டுள்ள கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் 70 வீத உரிமையை 99 ஆண்டுகளுக்கு இலங்கை அரசாங்கம் சீனாவுக்கு வழங்கியுள்ளமை குறித்து, தேவிரூப மித்ரா என்பவர் எழுதியுள்ள கட்டுரையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

இந்த உடன்பாட்டில் கூறப்பட்டுள்ள பாதுகாப்பு உத்தரவாதங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்று இந்தியா நம்புகிறது. எனினும், இந்த துன்பகரமான விற்பனை போன்ற நிலை அண்டை நாட்டில் உள்ள ஏனைய திட்டங்களுக்கும் ஏற்படுமோ என்ற அச்சமும் அதற்கு உள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுக உடன்பாட்டை டில்லி வரவேற்கவில்லை. ஆனால், சீனாவின் கடன் பளுவில் இருந்து தப்பிப்பதற்கு, கொழும்புக்கு வேறு நல்ல வழி இல்லை. இதனால், அம்பாந்தோட்டையை சீன நிறுவனம் நிர்வகிப்பதை ஏற்றுக் கொள்வதைவிட இந்தியாவுக்கு வேறு தெரிவு இல்லை.

இந்த உடன்பாடு குறித்த பேச்சுக்கள் மற்றும் அதில் பாதுகாப்பு குறித்த சில பிரிவுகளை உட்சேர்ப்பதில், அமெரிக்காவுடன் இந்தியாவும், தொடர்புபட்டிருந்தன என்றும் உறுதிப்படுத்த முடிகிறது.

எந்தவொரு இராணுவ செயற்பாடுகளையும் இங்கு முன்னெடுப்பதற்கு கடுமையான தடைகள் விதிக்கப்பட்டுள்ளன என்றும் இராணுவ செயற்பாடுகளை மேற்கொள்ளும் முழு உரிமையும் இலங்கைக்கே உள்ளது என்றும் உடன்பாட்டு வரைவில் கூறப்பட்டிருந்தது.

துறைமுக பாதுகாப்புச் சேவைகளில் ஈடுபடும் அனைவருமே இலங்கையர்களாக இருக்க வேண்டும் என்ற விதிமுறையும் சேர்க்கப்பட்டுள்ளது என்றும் அந்த கட்டுரையில் கூறப்பட்டுள்ளது. (இ-7)

# இந்தியாவிடம் வாங்கிய புதிய போர்க்கப்பலை இந்திய எல்லையிலேயே நிறுத்துகிறது இலங்கை




இந்தியாவிடம் இருந்து அண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட புத்தம் புதிய போர்க்கப்பல், வெளிநாட்டவர்களின் ஊடுருவல் மற்றும் கடத்தல்களை முறியடிக்க பாக்கு நீரிணையில் நிறுத்தப்படும் என்று இலங்கை கடற்படை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் கோவா கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்டு, கடந்த 22ஆம்திகதி கடற்படையினரால் பொறுப்பேற்றப்பட்ட ஆழ்கடல் ரோந்துக் கப்பலுக்கு சயுரால என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் கொழும்பு துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. நாளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனை அதிகார பூர்வமாக இயக்கி வைப்பார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள இலங்கை கடற்படைப் பேச்சாளர் லெப். கொமாண்டர் சமிந்த வலுகலகே,

"பாக்கு நீரிணையில் இது கடற்படைக்கு மேலும் பலத்தைக் கொடுத்துள்ளது. நாட்டின் கடல் எல்லைகளுக்குள் ஊடுருவும் வெளிநாட்டவர்கள் மற்றும் கடத்தல்காரர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் இந்தக் கப்பல் ஈடுபடுத்தப்படவுள்ளது.

கடலிலும் தரையிலும் அதிகரித்துள்ள கடத்தல் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுப்பதற்காக, யாழ்.குடாநாட்டில் கடற்படையினர் மற்றும் கடலோரக் காவல் படையினர் உயர் விழிப்பு நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

போர் முடிவுக்கு வந்த பின்னர், கடற்படையின் பாதுகாப்பு குறைக்கப்படவில்லை. உயர்மட்ட பாதுகாப்பு வடக்கு, கிழக்கில் மாத்திரமன்றி நாட்டின் ஏனைய பகுதிகளிலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பாக்கு நீரிணை வழியாக இந்தியாவில் இருந்து போதைப் பொருள் கடத்தல்கள் அதிகரித்திருக்கின்றன." என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# இலங்கைப் பாடசாலை தொடர்பில் கட்டார் தூதரகம் முக்கிய அறிக்கை

கட்டாருக்கான இலங்கை தூதரகத்தின் அனுசரணையின் கீழ், அந்த நாட்டில் பராமரிக்கப்படும் ஸ்டெஸபட் பாடசாலை தொடர்பில் விசேட அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

அந்த நாட்டுக்கான இலங்கைத் தூதரகம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

கட்டார் இராச்சியத்தில் இலாபம் ஈட்டாத பாடசாலையாக இதனை பராமரித்துச் செல்ல, இலங்கை தூதரகம் அனுசரணை வழங்கியுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், இலங்கை தூதரகத்திற்கு அறிவிக்காமல் வெளியில் இருந்து நிதி சேகரித்தல், பாடசாலை நிதியை முறைகேடாக பயன்படுத்தல், பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்காமை, ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களுக்கு உரிய முறையில் வேதனம் செலுத்தாமை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் பெற்றோரால் பல்வேறு முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள்ளதாக, கட்டாருக்கான இலங்கை தூதுவரின் கையொப்பத்துடன் வெளியாகியுள்ள அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் கட்டாருக்கான உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ள நிலையில், அவர்களை சம்பந்தப்பட்ட பாடசாலைக்கு அழைத்துச் செல்ல எதிர்பார்த்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### நீங்களுண்டு உங்கள் வேலையுண்டு

பக்கத்தில் இடியே விழுந்தாலும் லேசாகத் திரும்பிப் பார்த்து விட்டுத் தங்கள் வேலையைத் தொடருகிற ரகத்தினரும் உண்டு; எல்லாவற்றிலும் மூக்கை நுழைத்துக் கொண்டு அவதிப்படுகிறவர்களும் உண்டு.

தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருப்பதும் ஒரு வகையில் நல்லதுதான். இந்தப் பண்பை ஒரேயடியாகக் குறை சொல்வதிற்கில்லை. ஆனால் இந்த இயல்பை எல்லா விடயத்திலும் எல்லோர் விடயத்திலும் பின்பற்றுவது சரியில்ல.

காரணம், இப்படிப்பட்ட பண்பு நற்பெயரைச் சம்பாதித்துத் தருவதைவிட சமயங்களில் மிகப் பெரிய அவப்பெயரை சம்பாதித்து தந்து விடுவதும் உண்டு.

எல்லா விடயங்களிலும் நாம் தாமரை இலைத் தண்ணீராகப் பட்டும் படாமல் இருந்து விட முடிவது இல்லை.

நாமும் நம்மைச் சுற்றியவர்களும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்படும் போது, அதனாலென்ன? என்று இருந்து விட முடியாது. அப்படி இருக்கப் பழகிக் கொண்டோமானால் தொல்லைகள் அதிகரித்துக் கொண்டே போய்விடும். தான் ஆடா விட்டாலும் தன் சதை ஆடும் என்பார்களே, அந்த உணர்வு சிறிதளவாவது இருக்க வேண்டும்.

ஒரேயடியாக ஒதுக்கி இருந்தால் சுயநலப் பேர்வழி என்கிற பெயர்தான் இறுதியில் மிஞ்சும். இந்த மாபெரும் குற்றச்சாட்டு நம் மீது வந்து விடக் கூடாது என்பது மிக முக்கி யம்.

நாம் உண்டு; நம் வேலையுண்டு என்று இருக்கக் கூடாத விடயங்கள் சில உண்டு. அவை என்னென்ன என்பதைத் தெளிவு படுத்திக் கொள்வோமா?

நாம் எந்த விடயத்தில் தலையிடுகிறோமோ அந்த விடயத்திற்கும் நமக்கும் சிறிதளவேனும் சம்பந்தமோ உரிமையோ இருக்க வேண்டும். அப்படிச் சம்பந்தம் இருப்பதாக நாம் மட்டுமல்ல மற்றவர்களும் நம்ப இடமிருக்க வேண்டும். அப்படியே நம்ப இடமிருந்தாலும் நாம் தலையிடாமலேயே பிரச்சினை சரியாகிவிடாதா? என்று எதிர்பார்த்து அதற்குத் தகுந்த அவகாசம் தர வேண்டும். இனித்தாங்காது. நாம் தலையிட்டே ஆக வேண்டும் என்கிற கட்டாயத்தைச் சூழ்நிலைகள் உருவாக்கியிருக்க வேண்டும்.

உரிமையும் சம்பந்தமும் இருக்கின்றன என்பதற்காக எதை வேண்டுமானாலும் செய்துவிட முடியாது. அப்படி ஒரு மனப்பான்மை இருந்தால் அதை மாற்றிக் கொண்டு நியாயத்தையும் துணைக்கு அழைத்துக் கொள்ள வேண்டும்.

நடைமுறையாகச் சொல்ல வேண்டுமானால் நாம் தலையிட்ட செயலோ, பேசிய விதமோ செய்த காரியமோ தவறு என்று விமர்சிக்க நான்கு பேர் சேர்ந்தால் கூட, இல்லையில்லை அவர் செய்தது சரிதான் என்று நியாயம் பேச நான்கு பேர் சேர வேண்டியது அவசியம். இந்தப் பின்னணியும் பலமும் இல்லாவிட்டால் நாம் உண்டு நம் வேலை உண்டு என்று இருந்து விடுகிறதே உத்தமம்!

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துமிந்தவின் பதவியை பறிக்க வேண்டாம்!



## மகிந்த கோரிக்கை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து அமைச்சர் துமிந்த திசாநாயக்கவை நீக்க வேண்டுமென அக்கட்சியின் ஊடகப் பேச்சாளரான இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா வலியுறுத்தியுள்ள நிலையில் அதற்குரிய தேவைப்பாடு இல்லையென அமைச்சர் மகிந்த அமரவீர கூறியுள்ளார்.

துமிந்த திசாநாயக்க சிறந்த இளம் தலைவராகச் செயற்பட்டு வருகின்றார் என்று சுதந்திக் கட்சியின் முக்கியஸ்தரான அமைச்சர் மகிந்த அமரவீர கூறியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நெருங்கிய சகாக்களுள் ஒருவராகக் கருதப்படும் அமைச்சர் மகிந்த அமரவீர ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளராகவும் செயற்பட்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)



கேலிச்சித்திரம்

# எதிர்க்கட்சியினர் மனநோயாளிகள்

## ரங்கே பண்டார விசனம்

கூட்டு எதிர்க்கட்சியினர் அதிகாரம் இல்லாத காரணத்தினால் மனநிலை பாதிப்புக்கு உள்ளாகியிருப்பது அண்மையில் தெளிவானதாக இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

அதியுயர் நாடாளுமன்றத்தில் சபாநாயகரின் ஆசனத்திலும் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் ஆசனங்களிலும் அமர்ந்து கூட்டு எதிர்க்கட்சியினர் நடத்திய நாடகத்தை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன் கூட்டு எதிர்க்கட்சியில் இருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் மனநோயாளிகளா என்பதை பரிசோதித்து பார்ப்பது பொருத்தமானது எனவும் ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஆனமடுவையில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அரசாங்கம் தெளிவான வேலைத்திட்டங்களை செயற்படுத்தி வருகிறது. இந்த வேலைத்திட்டங்களுக்கு ஆதரவளிப்பதே நாட்டையும் மக்களையும் நேசிக்கும் அனைவரது கடமையாகும்.

குறைகள் இருந்தால், அதனை சுட்டிக்காட்டி ஒத்துழைப்பு வழங்க சந்தர்ப்பம் உள்ளது. எனினும் தற்போது நடப்பது அரசியல் தலைவர்களிடம் இருந்து எதிர்பார்க்கும் விடயங்கள் அல்ல.

உரிய காலத்திற்கு மக்கள் எமக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்கியுள்ள நிலையில், கூட்டு எதிர்க்கட்சியினர் அவசரமாக அரசாங்கத்தை கவிழ்க்க முயற்சித்து வருகின்றனர். பொய்யான கதைகளை பரப்பி மக்களை தூண்ட முயற்சித்து வருகின்றனர்.

நாட்டின் காணிகளை கூட்டு எதிர்க்கட்சியில் இருப்பவர்களே கடந்த காலத்தில் விற்பனை செய்தனர். கடன் சுமையில் நாட்டை அழுத்தங்களுக்கும் இவர்களே உள்ளாக்கினர். மக்களை இருள் சூழ்ந்த பாதாளத்திற்கு தள்ளிய இவர்களுக்கு நாட்டை முன்னேற்ற தற்போது ஆடசிக்கு வர வேண்டுமாம்.

பல ஆண்டுகள் ஆட்சியில் இருந்து நாட்டை அழித்தனர். மக்கள் இதனை உணர்ந்து கொண்டனர். மகிந்த உள்ளிட்ட அணியை விரட்டி விட்டு மைத்திரி - ரணிலுக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்கினர்.

ஆட்சியை பொறுப்பேற்ற நாளில் இருந்து கூட்டு எதிர்க்கட்சியினர் எதிர்ப்புகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இவர்கள் மக்களின் நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்வதில்லை. அதே போல் ஜனநாயகத்தையும் ஏற்பதில்லை. அதிகாரம் இன்றி வெறிபிடித்துள்ளது இதன் மூலம் தெளிவாகியுள்ளது எனவும் பாலித ரங்கே பண்டார மேலும் தெரிவிததார். (இ-7)

# மண்சரிவு அபாயம் காரணமாக 21 குடும்பங்கள் வெளியேற்றம்

உமாஓயா திட்டத்தால் மண்சரிவு அபாயம் ஏற்பட்டிருக்கும் இரண்டு கிராமங்களிலிருந்து முதற்கட்டமாக 21 குடும்பங்கள் அப்புறப்படுத்தப்பட்டிருப்பதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

பதுளை மாவட்டத்தின் எல்ல பிரதேசத்திலுள்ள அளுத்கம மற்றும் திக்கராவ கிராமங்களிலுள்ள குடும்பங்களே இவ்வாறு அப்புறப்படுத்தப்பட்டுள்ளன எனவும், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் நடத்திய ஆராய்ச்சியின் பின்பே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப் பதாகவும் அவர் கூறியுள்ளார்.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் பதுளை மாவட்ட அதிகாரியும் புவியியலாளருமான கெலும் செனிவிரத்ன இந்தப் பகுதியிலுள்ள ஏராளமான வீடுகளில் வெடிப்புகள் ஏற்பட்டிருப்பதாகவும், இந்த இரண்டு கிராமங்களுக்கும் மேலதிகமாக ஏனைய பகுதிகளிலும் தங்களது ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெறுவதாகவும் தெரிவித்தார்.

முக்கியமாக எல்ல பிரதேசத்திலுள்ள வலஸ்முல்ல, உடபேருவ மற்றும் தந்திரிய ஆகிய கிராமங்களில் மண்சரிவு அபாயம் அதிகமாகக் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# முடியுமானால் ஆட்சியை கவிழ்த்துக் காட்டுங்கள்

## கபீர் ஹாஷிம் சவால்

(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தை நாம் ஒருபோதும் விட்டுக் கொடுக்கமாட்டோம். தேசிய பிரச்சினையை தீர்க்கும் வரைக்கும் தேசிய அரசாங்கத்தை விழாமல் பாதுகாப்போம். மேலதிமாக இரு போயா தினங்களை பெற்றுத் தருகின்றோம். முடியுமானால் ஆட்சியை கவிழ்த்து காட்டுங்கள் என ஐக்கிய தேசியக் கட்சி சவால் விடுத்துள்ளது.

மேலும் தேசிய அரசாங்கத்தின் பிரதான கட்சிகளுக்கிடையிலான ஒப்பந்தகை நீடிப்பதா ? இல்லையா? என்பது இம்மாதம் சுதந்திரக் கட்சி எடுக்கப்போகும் தீர்மானத்தை பொறுத்து நாம் முடிவெடுப்போம் என்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது.



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறி கொத்தாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அக் கட் சியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான கபீர் ஹாஷிம் மேற் கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# யாழ். மத்திய கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று செவ்வாய்க் கிழமை இடம்பெறும். கல்லூரியின் நிறுவுநர் தினம் காலை 7.30 மணிக்கு சென்.பீற்றர் தேவாலயத்தில் ஆராதனை நிகழ்வாக இடம்பெறும்.

பரிசளிப்பு விழா மாலை 4 மணிக்கு பாடசாலையின் தம்பர் மண்டபத்தில் பாடசாலை அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் இடம் பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இப்பாடசாலையின் பழைய மாணவரும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான பாலசிங்கம் பிரகலாதன் கலந்து கொள்வார். (இ-3)

# டுபாயில் கொள்ளையில் ஈடுபட்டதாக 6 இலங்கையர்கள் மீது குற்றச்சாட்டு

டுபாயில் கொள்ளையில் ஈடுபட்டதாக ஆறு இலங்கையர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. டுபாய் பாதுகாப்பு நிறுவனமொன்றில் கடமையாற்றி வரும் இலங்கையர்கள் மீதே இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

11 இலட்சத்து 98 ஆயிரம் தினார்கள் இவர்களால் கொள்ளையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. டுபாய் வர்த்தக நிலையமொன்றின் பல கிளைகளது பணமே இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் 6 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரையில் இந்தக் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கொள்ளையிட்ட பணத்தை அவர்கள் இலங்கைக்கு அனுப்பி வைத்திருந்தனர் என்பது விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. (இ-7)

# தேவை ஏற்பட்டால் துறைமுக ஒப்பந்தத்தை திருத்த முடியும்

## துறைசார் அமைச்சர் சமரசிங்க தெரிவிப்பு

அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பாக இலங்கை அரசாங்கத்திற்கும் சீன நிறுவனத்திற்கும் இடையில் செய்து கொண்ட ஒப்பந்தத்தினைத் தேவைப்படின் திருத்த முடியும் என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஹிக்கடுவையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,




இந்த உடன்படிக்கை மூலம் நாட்டுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தினாலும் ஒப்பந்தத்தின் 50 ஆவது பக்கத்தில் உள்ள பந்திக்கு அமைய இந்த ஒப்பந்தத்தினைத் தேவைக்கு அமைய திருத்த முடியும்.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமையவே இந்த பந்தி சேர்க்கப்பட்டது. ஜனாதிபதியின் ஆட்சியின் கீழ் இலங்கையில் ஒரு அடி நிலம் கூட எந்த நாட்டுக்கும் விற்பனை செய்யப்படமாட்டாது எனவும் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். (இ-7)

# அரசின் பங்காளிக்கட்சிகள் அபிவிருத்தி குறித்து கவனம் செலுத்த வேண்டும் - பிரதமர் அழைப்பு

நல்லாட்சி அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கூட்டணி கட்சிகள் ஒன்றையொன்று குற்றம் சுமத்திக் கொள்வதனை தவிர்த்துக் கொள்ள வேண்டுமென அவர் தெரிவித்தார். [illegible] விஹாரையில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



முரண்பாட்டு அரசியலினால் எவருக்கும் எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை என குறிப்பிட்டுள்ள பிரதமர் அம்பாந்தோட்டை துறைமுக உடன்படிக்கை நாட்டுக்கு பல்வேறு நலன்களை அளிக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து

# மாபெரும் கவனயீர்ப்புப் பேரணி


கிளிநொச்சியில்.....


முல்லைத்தீவில்....

கிளிநொச்சி கந்தசாமி கோவில் முன்றலில் பிற்பகல் ஒரு மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட பேரணி ஏ- 9 வீதி ஊடாக கிளிநொச்சி மாவட்ட செயலகம் வரை சென்று கோரிக் கைகள் அடங்கிய மகஜர் ஒன்றினையும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் பாதிரியார்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவினர்கள் இணைந்து கையளித்தனர். இப் போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவினர்கள்,பாதிரியார்கள் ,ஆயர், மக்கள் எனப் பலரும் கொண்டனர் .

இலங்கை மெதடிஸ்த சபையினர், திருப்பணியா ளர்களும் வடக்கு-கிழக்கின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து கலந்து கொண்டு வடக்கு-கிழக்கில் தொடரும் போராட்டங்களுக்கு ஜனாதிபதி உடனடியாக தீர்வு வழங்க வேண்டுமென வலியுறுத்தி முல்லைத்தீவு இராயப்பர் ஆலய முன்றலிலிருந்து முற்பகல் 10 மணிக்கு பேரணி யாக முல்லைத்தீவு மாவட்ட செயலகம் வரை சென்று அங்கு ஜனாதிபதிக்கான மகஜர் அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது. இப்பேரணியில் வடக்கு- கிழக்கின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து சுமார் 100 வரையான மதகுரு மார்களும் சுமார் 200 க்கு மேற்பட்ட காணா மலாக்க ப்பட்டவர்களின் உறவினர்களும் கலந்து கொண்டனர். (8-281)

## அதிசக்தி வாய்ந்த மின்சார கம்பத்துடன் மோதி விபத்து

ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில் கினிகத்தேனை பதுபொல எனும் இடத்தில் நேற்று முற்பகல் 10.40 மணியளவில் கார் ஒன்று அதிசக்தி வாய்ந்த மின்சார கம்பத்தூணுடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் நான்கு பேர் காயங்களுடன் கினிகத்தேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

குறித்த கார் கட்டுநாயக்கவிலிருந்து கினிகத்தேனை அலகல பகுதியை நோக்கிச் செல்லும் வழியிலேயே இவ்வாறு வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

சாரதிக்கு உறக்கம் ஏற்பட்டதன் காரணமாக இவ்விபத்து நேர்ந்திருக்கலாம் என விசாரணைகளை மேற்கொள்ளும் கினிகத்தேனை பொலிஸார் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும் காரில் பயணித்த 50 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவரும், மூன்று இளைஞர்களும் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

மேற்படி கார் அதிசக்தி வாய்ந்த மின்சார கம்பத்தூணுடன் மோதுண்டதனால் மின்சார கம்பம் சேதத்திற்குள்ளாகியுள்ளது. இதனால் அப்பிரதேசத்திற்கு மின் விநியோகம் தடைப்பட்டுள்ளதாகவும், அதனைச் சீர் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் கினிகத்தேனை பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-7)





## மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு

சிரேஷ்ட சட்டத்தரணி வேலாயுதன் தேவசேனா திபதியால் (அருள் கல்வி வட்டம்) வட மாகாணத்தைச் சேர்ந்த க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு நடத்து வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கமைய எதிர்வரும் 10.08.2017 வியாழக்கிழ மை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை வேலணை பிரதேச செயலகத்திலும் 11. 08.2017 வெள்ளிக்கிழமை காலை 8 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரியி லும் 12.08.2017 சனிக்கிழமை காலை 6 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திலும் 13.08.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திலும் 14.08.2017 திங்கட்கிழமை காலை 6 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத் திலும் (இருபாலாரும்) 15. 08.2017 செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை உருத்திரபுரம் மகா வித்தியாலயத் திலும் 16.08.2017 புதன் கிழமை காலை 8 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை கற்சிலைமடு அரசினர் கலவன் பாடசாலையிலும் 17. 08.2017 வியாழக்கிழமை காலை 8 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை மன்னார் நகரசபைமண்டத்திலும் 18.08. 2017 வெள்ளிக்கிழமை காலை 8 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை வவுனியா நகர சபை மண்டபத்திலும் இடம்பெறவுள்ளன. (இ-3)

## இரு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்து; மூவர் காயம்



(கரணவாய்)

வதிரி சந்திப்பகுதியில் மோட்டார் சைக்கிள்கள் இரண்டு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அரசடி கரவெட்டியைச் சேர்ந்த சிவராசா ரவிசன் (வயது 18), குஞ்சர் கடையைச் சேர்ந்த சண் முகநாதன் திவாகர் (வயது-27), அத்துளு அம்மன் கோவிலடியைச் சேர்ந்த புவனேந்திரராஜா தனுசன் (வயது- 18) ஆகிய மூவரும் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். அதில் ரவிசன் என்பவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (இ-60)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**கணித ஒலிம்பியாட் போட்டி-2017**

எமது கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவன்

**செல்வன் தெய்வேந்திரம் திருக்குமரன்**
**தரம்- 06**

அவர்கள் அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற கணித ஒலிம்பியாட் போட்டியில் 03 ஆம் இடத்தைப் பெற்று சர்வதேச ஒலிம்பியாட் போட்டியில் பங்குபற்றுவதற்காக சிங்கப்பூர் செல்லவுள்ளார்.

இவர் இலங்கை சார்பாக பங்குபற்றும் ஆறு மாணவர்களில் ஒரே ஒரு தமிழ் மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது வெற்றிப்பயணம் தொடர வாழ்த்துகின்றோம்.



பாடசாலைச் சமூகம்
கிளி/கிளிநொச்சி ம.வி.
கிளிநொச்சி.

(சி-9217)

உ
சிவமயம்
ஸ்ரீ நாககன்னி அம்பாள் துணை





## பிறந்தநாள் வாழ்த்துக்கள்

சித்தன்கேணி அருள்மிகு ஸ்ரீநாககன்னி அம்பாள் ஆலய சித்தஞானகுரு, சாமஸ்ரீ, தேசமான்ய, அருள்நெறிச் செல்வர், சேவை நெறிச் செம்மல் இந்திரன் ஐயா இராசதுரை அவர்களை 60 ஆவது பிறந்த நாளில் வாழ்த்துகின்றோம்.

நாககன்னி அம்பாள் திருவடி சரணம்
நாககன்னி ஐயா திருவடி வணக்கம்
நாககன்னி ஐயா பல்லாண்டு வாழ்க
ஞானகுரு இந்திரன் ஐயா பல்லாண்டு வாழ்க

பல அன்பர்களுக்கு திருமணம் கைகூடவும் புத்திர பாக்கியம் பெறவும் பலவிதமான நோய்களை விலக்கவும் பல பிரச்சினைகள் தீர்த்துக் கொள்ளவும் உடல், உள ஆரோக்கியத்தை நாககன்னி அம்பாள் அருளைப் பெற்றுக் கொள்ள வழிகாட்டியாகத் திகழும் எங்கள் பேரன்பிற்குரிய ஐயா எல்லா நலன்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ சிவன் சக்தி திருவடியைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

-நாககன்னி அடியார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா ஆரம்பித்த அம்புலன்ஸ் சேவை இலங்கை முழுவதற்கும் விரிவாக்கம்

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் இரண்டு மாகாணங்களில் ஆரம்பிக்கப்பட்ட அவசர நோயாளர் காவு வண்டிச் சேவையை (அம்புலன்ஸ்) நாடு முழுவதிலும் விரிவாக்குவதற்கு இலங்கை அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இந்திய அரசாங்கத்தின் நிதி மற்றும் ஆலோசனை, பயிற்சி உதவிகளுடன், கடந்த ஆண்டு அவசர நோயாளர் காவுவண்டிச் சேவை, தென் மற்றும் மேல் மாகாணங்களில் ஆரம்பிக்கப்பட்டன.

இரண்டாவது கட்டமாக இந்தச் சேவை நாடு முழுவதற்கும் விரிவாக்கப்படவுள்ளது என்று பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த சேவையை விரிவாக்குவதற்கு 300 நோயாளர் காவு வண்டிகளும், 2000 பணியாளர்களும் தேவைப்படுவதாகவும், அவர் தெரிவித்தார்.

முதல் ஆண்டில் இந்தச் சேவைக்கு 322,000 அழைப்புகள் வந்தன என்றும், 32 ஆயிரத்துக்கும் அதிகமான அவசர உதவி தேவைப்படும் நோயாளர்களுக்கான உதவிகள் அளிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது, தென் மற்றும் மேல் மாகாணங்களில் இந்தியா வழங்கிய 88 நோயாளர் காவு வண்டிகளில், 550 பணியாளர்கள், 24 மணி நேரமும் இந்தச் சேவையை வழங்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பன்றிப் பண்ணையில் சூடு; ஒருவர் பலி! காவலாளி கைது

கொஸ்கம, புஸ்ஸலாவப் பகுதியில் இறைச்சிக்காக வளர்க்கப்படும் பன்றி பண்ணையில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக, கொஸ்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 1.20 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிர் இழந்த நபர் தொடர்பில் எந்தவொரு விபரமும் இதுவரை அறியப்படவில்லை.

குறித்த பண்ணைக்குள் நுழைந்து பன்றிகளைத் திருடமுற்பட்ட வேளையில், காவலாளியால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். துப்பாக்கி பிரயோகம் மேற் கொண்ட காவலாளியை கைது செய்து, கொஸ்கம பொலிஸார் மேலதிக விசாரணையை முன்னெடுத்துள்ளனர். (இ-7)


# நல்லாட்சி அரசாங்கமும் கூட்டு எதிரணியும் ஒன்றே

## ஞானசார தேரர் கூறுகிறார்

(கொழும்பு)

ஆளும் கட்சியினதும் கூட்டு எதிர்க்கட்சியினதும் பிழைகளை ஒருவர் மாறி ஒருவர் மூடி மறைத்து வருகின்றனர் என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.



அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

"மாகம்புர துறைமுகத்தை சீனாவிற்கு விற்பனை செய்வதற்கு முன்னதாக கூட்டு எதிர்க்கட்சியின் தரப்பினர் ஊடக சந்திப்புக்களை நடத்தி தேசப்பற்றை வெளிப்படுத்தியிருந்தனர்.

எனினும் துறைமுகம் சீனாவிற்கு விற்பனை செய்யப்பட்ட போது அந்த தேசப்பற்றை கூட்டு எதிர்க்கட்சியின் ஒருவரிடமும் காண முடியவில்லை.

மெய்யாகவே இதற்கு எதிர்ப்பை வெளியிட்டிருந்தால் பல்வேறு விடயங்களை செய்திருக்க முடியும். அவர்களினால் முடியாததை இவர்களும் இவர்களினால் முடியாததை அவர்களும் செய்யும் ஓர் அரசியல் சூழ்நிலை உருவாகியுள்ளது.

ஆளும் கட்சியினதும் கூட்டு எதிர்க்கட்சியினதும் பிழைகளை ஒருவர் மாறி ஒருவர் மூடி மறைத்து வருகின்றனர்.

நாட்டின் சொத்துக்கள் விற்பனை செய்யப்படுவதாக கூச்சலிட்ட மக்களை கூட்டு எதிர்க்கட்சி அணி திரட்டத் தவறியுள்ளது.

இந்த இரண்டு தரப்பினரதும் நடிப்பிற்கு நாட்டு மக்கள் ஏமாந்துள்ளனர். இதனால் நாட்டின் எதிர்கால தலைமுறையே பாதிக்கப்படும்" என ஞானசார தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஆறு மாதங்களில் அரசிற்கு எதிராக 1500 போராட்டங்கள்

இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் அரசாங்கத்துக்கு எதிராக போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் 1500 இடம்பெற்றுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இந்த 1500 போராட்டங்களும் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காக திட்டமிட்டு நடத்தப்பட்ட போராட்டங்கள் என்பது தெரியவந்துள்ளது.

தொழிற்சங்கங்கள் தங்களுடைய பிரச்சினைகளுக்கு போராட்டங்கள் வாயிலாக இறுதித் தீர்வு பெற்றுக் கொள்வது நிச்சயமற்ற விடயமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1149

Search for people, places and things Nagendram Home

### சிந்துஜன்




### விதுர்சா




### வினித்




### மாறன்

உலகத்திலேயே
ரொம்ப கஷ்டமான
விடயம்...
முறுக்குச் சாப்பிடும்
போது சத்தம்
வராம சாப்பிடுறதுதான்!

### கல்யாணி




### சுவேதா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராகு–கேது பெயர்ச்சி பலன்கள்

## (27.07.2017 முதல் 13.02.2019 வரை)

## சுற்றி வரும் இராகு பன்னிரெண்டில் சுப விரயங்கள் இனி அதிகரிக்கும்!



(பெயரின் முதல் எழுத்துக்கள்: ம, மி, மு, மெ, மோ, ட, டி, டு, டே உள்ளவர்களுக்கும்)

**கம்பீரமான தோற்றமும், கடமையைப் பெரிதாக மதிக்கும் சுபாவமும் கொண்ட சிம்ம இராசி நேயர்களே!**

நினைத்ததை நினைத்தபடியே முடித்துக் காட்டும் உங்களுக்கு இதுவரை ஜென்மத்தில் சஞ்சரித்து வந்த இராகு, இப்பொழுது கடகத்திற்கு செல்கிறார். இதுவரை 7ஆம் இடத்தில் இருந்து வந்த கேது இப்பொழுது 6ஆம் இடத்திற்கு வருகிறார். இதன் விளைவாக நல்ல மாற்றங்கள் உங்களைத் தேடிவரப் போகின்றது.

இப்பொழுது உங்களைப் பொறுத்தவரை 12இல் பாம்புக் கிரகமான இராகு சஞ்சரிக்கப் போகிறார். எனவே பயணங்களால் பலன் கிடைக்கும். இனிய காரியங்கள் இல்லத்தில் ஏராளமாக நடக்கும். நண்பர்களாலும் பலன் கிடைக்கும்.

இந்த இராகு- கேது பெயர்ச்சியால் சர்ப்ப தோஷம் விலகுகிறது. என்றாலும் உங்கள் சுய ஜாதகத்திற்கு அனுகூலம் தரும் நாளில் உங்கள் இராசிக்கு ஏற்ற ஸ்தலங்களில் சாப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது.மேலும் மறைந்த இராகுவால் நிறைந்த இலாபம் கிடைக்கும். மேலும் இந்த இராகு- கேது பெயர்ச்சிக்குப் பிறகு குரு மற்றும் சனி ஆகிய இரண்டும் அடுத்தடுத்து பெயர்ச்சியாகப் போகின்றன. இந்த 3 கிரகங்களின் பெயர்ச்சியும் உங்கள் முன்னேற்றத்திற்கு வழி வகுத்துக் கொடுக்கும்.

குறிப்பாக செப்டெம்பர் 2ஆம் திகதி பெயர்ச்சியாகும் குருவின் பார்வை 7, 9, 11 ஆகிய இடங்களில் பதிவதால் எண்ணற்ற நல்ல மாற்றங்கள் வந்து சேரப் போகிறது.

சனிப்பெயர்ச்சியின் மூலமாக அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் விலகுகிறது. எனவே ஒளிமயமான எதிர்காலம் உருவரகப் போகின்றது. சனி விலகும் நேரத்தில் அதற்குரிய ஸ்தலங்களுக்குச் சென்று, சனிபகவான் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. யோகம் தரும் கிரகங்கள் இராசிக்கு வரும் பொழுது வழிபாடுகளை செய்வதால் வளர்ச்சி கூடும்.

**பயணங்களால் பலன் தரும் பன்னிரெண்டாமிடத்து இராகு!**

இதுவரை உங்கள் இராசியிலேயே சஞ்சரித்து வந்த இராகு பகவான், இனி 12ஆம் இடத்தில் உலாவரப் போகிறார். கேது சப்தம ஸ்தானத்தில் இருந்து 6ஆம் இடத்திற்கு செல்கிறார்.

பன்னிரெண்டில் இராகுபலம் பெற்றிருந்தால் பணி சிறக்கும்! பயணத்தால் பலன் கிடைக்கும்! இனிமை தரும் இல்லறத்தில் மகிழ்ச்சி கூடும்! இடம், பூமி வாங்குகின்ற யோகம் உண்டு! என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

12ஆம் இடம் விரய ஸ்தானம் என்று சொல்வார்கள். எனவே விரயங்கள் அதிகரிக்குமோ என்று கவலைப்பட வேண்டாம். ஜென்மத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது, வியாபாரத்தில் பெரும் வளர்ச்சி காண திட்டங்களைத் தீட்டி, அவற்றை நிறைவேற்ற முடியாமல் திணறிப் போயிருப்பீர்கள். அந்த நிலை இனி மாறும். தீட்டும் திட்டங்கள் நிறைவேற இந்தப் பாம்புக் கிரகங்களின் பெயர்ச்சி உங்களுக்கு பலன் தரப் போகிறது.

வாழ்வில் முன்னேற்றம் பெறுவதற்கு வழிபிறக்கும். உங்களைப் புறக்கணித்த சொந்தங்கள் வலிய வந்து சேருவர். எந்தச் செயலையும் தைரியத்தோடும், தன்னம்பிக்கையோடும் எதிர்கொள்வீர்கள்.

பன்னிரெண்டில் இராகு வரும் பொழுது, பயணத்தால் பலன் கிடக்கும். வீடு மாற்றம், இடமாற்றம் மட்டுமல்லாமல், ஒரு சிலருக்குக் வெளிநாட்டு பயணங்கள் உருவாகும். புண்ணிய நதிகளில் நீராடும் யோகமும், புனிதப் பயணங்களை மேற்கொள்ளும் சூழ்நிலையும் அமையலாம். எதிர்கால நலன் கருதி சேமிப்பில் ஆர்வம் காட்டுவீர்கள். வெளிவட்டாரப் பழக்கத்தால் நன்மைகள் கிடைக்கும். மகப்பேறு கிடைக்கும் வாய்ப்பு உண்டு. வீண் விரயங்களுக்கு மாற்றாக, சுப விரயங்களை மேற்கொள்ளுங்கள். வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்குவது நல்லது. ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

**ஆறாமிடத்து கேது தரும் பலன்கள்!**

இதுவரை உங்கள் இராசிக்கு 7ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த கேது இப்பொழுது 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். எதிர்ப்பு, வியாதி, கடன் என்பதை அறிந்து கொள்ளும் இடமான 6ஆம் இடத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது ஆரோக்கியப் பாதிப்புகள் அகலும். பிறர் நலன்கருதி எடுத்த முயற்சிகளில் ஆதாயம கிடைக்கும். கடன் சுமை குறைய புதிய ஒப்பந்தங்கள் கைகொடுக்கும். குருவின் பார்வை சப்தம ஸ்தானத்தில் பதிவதால் கல்யாண வாய்ப்புகள் கைகூடும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர்.

நீங்கள் எடுத்த முயற்சிகளில் எந்தத் தடையும் இருக்காது. உதிரி வருமானங்கள் ஒரு சிலருக்கு வந்து சேரும். உத்தியோகத்தைப் பொறுத்தவரை பழைய வேலையை விட்டுப் புதிய வேலைக்கு முயற்சி செய்தவர்களுக்கு அது கைகூடும். அரசு வேலைக்கு விண்ணப்பித்து இருந்தவர்களுக்கு அது கைகூடுவதற்கான அறிகுறிகள் தோன்றும்.

ஒருசிலர் வேலையை விட்டு விருப்ப ஓய்வில் வெளிவந்து சுயதொழில் தொடங்கலாமா? என்று சிந்திப்பார்கள். அந்தச் சிந்தனை [illegible] நண்பர்களும் உங்களுக்கு கூட்டுச் சேர முன்வருவர். இதுபோன்ற நேரங்களில் திசாபுத்தி பலம் பெற்றவர்கள் அதை உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

குருவின் பார்வை 9 மற்றும் 11 ஆகிய இடங்களில் பதிவதால் இலாபம் வர வேண்டிய நேரமிது. தொழில் தொடங்கினால் இலாபம் பெற முடியும். ஆயினும் கூட்டாளிகளின் ஜாதகத்தையும் ஆராய்ந்து செயற்பட வேண்டும்.

6 இல் கேது சஞ்சரிக்கும் பொழுது கடன் சுமையும் அதிகரிக்கும் என்பார்கள். அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது தொழிலை விரிவுபடுத்த வங்கிகளின் ஒத்துழைப்பை நாடுபவர்களுக்கு சலுகைகளும், பணவரவும் கிடைத்து சந்தோசப்படுவார்கள். உடல் ஆரோக்கியம் சீராகும். தங்கு தடைகள் தானாக விலகும். உற்றார், உறவினர்களில் ஒருசிலர் உங்களை விட்டு விலகி இருந்திருக்கலாம். அவர்கள் இப்பொழுது பகை பாராட்டாமல் வந்திணைய சந்தர்ப்பங்கள் கைகூடிவரும்.

**பெண்களுக்கான பலன்கள்!**

சிம்ம இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்த இராகு-கேது பெயர்ச்சி யோகம் தரும் பெயர்ச்சியாக அமையப் போகின்றது. தேகநலன் சீராகும். திடீர் முன்னேற்றம் ஏற்படும். காக வாகனத்தானின் அருளும், குரு பகவானின் அருளும் உங்களுக்கு கூடுதலாகக் கிடைக்கிறது. எனவே குடும்ப ஒற்றுமை பலப்படும். கணவன்-மனை விக்குள் பாசமும், நேசமும் கூடும். குழந்தைகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். உத்தியோகத்தில் எதிர்பார்த்த இடமாற்றமும், ஊதிய உயர்வும் உண்டு. கல்யாணமாகாதவர்களுக்கு கல்யாண வாய்ப்பு கைகூடும். பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டு புதிய வாகனம் வாங்கும் யோகமும் உண்டு. அரசியல் ஈடுபாடு கொணடவர்களுக்கு புதிய பதவிகள் கிடைக்கும். நாகசாந்திப் பரிகாரம் நன்மைகளை வழங்கும். குலதெய்வ வழிபாடு குடும்ப முன்னேற்றத்தைக் கூட்டும்.




**வாழ்க்கை வசந்தமாக வழிபாடு!**

12ஆம் இடத்து இராகுவால் பலன்களை நற்பலன்களாகப் பெறவும், 6ஆம் இடத்து கேதுவால் சீரான வாழ்க்கை அமையவும், செல்வநிலை உயரவும் ஞாயிற்றுக் கிழமைதோறும் குலதெய்வ வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். வெள்ளிக்கிழமை தோறும் விநாயகரை வழிபடுங்கள்.

**பாதசாரப்படி இராகு தரும் பலன்கள்!**

புதன் சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது (27.7.2017 முதல் 3.4.2018 வரை):

இக்காலத்தில் தனலாபாதிபதியாக புதன் விளங்குவதால் தனவரவிற்கு பஞ்சமிருக்காது. பொருளாதார நிலை உயரும். வங்கிச் சேமிப்பை எடுத்து வளர்ச்சிக்குரிய சொத்துகளாக மாற்ற முன்வருவீர்கள். வர்த்தகத்தால் இலாபம் உண்டு. கடல் வணிகம் செய்பவர்கள் கைநிறையப் பொருளீட்டும் வாய்ப்பு கிடைக்கும். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறிகள் தோன்றும்.

சனி சாரத்தில் இராகு சஞ்சரிக்கும்



பொழுது (4.4.2018 முதல் 11.12.2018 வரை):

இக்காலத்தில் பிரச்சினைகள் படிப்படியாகத் தீரும். பிறருக்கு பொறுப்புச் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையும் வந்து சேரும். வீடு கட்டும் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த இடத்திற்கு மாறுதல் கிடைத்து மகிழ்ச்சியடைவீர்கள். வாழ்க்கைத் துணைக்கும் வேலை கிடைக்கும்.

குரு சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது (12.12.2018 முதல் 12.2.2019 வரை):

இக்காலத்தில் பெரியோர்களின் ஆசியும், செல்வந்தர்களின் நட்பும் கிடைக்கும். தெய்வத்திருப்பணிகளை முன்னின்று நடத்துவீர்கள். வெளிநாட்டுப் பிரயாணம் வெற்றிகரமாக அமையும். பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதித் தீட்டிய திட்டங்கள் பலன் தரும். குறிப்பாக பெண் குழந்தைகளின் சுபச்சடங்குகளும், கல்யாண வாய்ப்புகளும் கைகூடி வரும் நேரமிது.

**பாதசாரப்படி கேது தரும் பலன்கள்!**

செவ்வாய் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது (27.2.2017 முதல் 29.11.2017 வரை):

இக்காலத்தில் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். நிலபுலன்கள் சேரும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். தாய்வழி ஆதரவு உண்டு. செவ்வாய் உங்கள் இராசிப்படி யோககாரகன் என்பதால் இக்காலம் ஒரு பொற்காலமாகும். கிளைத் தொழில்கள் தொடங்கும் வாய்ப்பும் கேட்ட இடத்தில் உதவிகளும் கிடைக்கும் நேரமிது.

சந்திரன் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது (30.11.2017 முதல் 29.11.2017 வரை):

இக்காலத்தில் உடல்நலத்தில் கவனம் தேவை. உறவினர்களால் மனக்குழப்பத்திற்கு ஆளாக நேரிடும். சுபச்செலவுகள் அதிகரிக்கும். துணிவும், தன்னம்பிக்கையும் தேவைப்படும் நேரமிது. எதிர்மறைச் சிந்தனைகள் மேலோங்காமல் பார்த்துக்கொள்வது நல்லது. உறவினர்களிடம் கருத்து வேறுபாடு அதிகரிக்கும்.

சூரிய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது (8.8.2018 முதல் 12.2.2019 வரை):

இக்காலத்தில் நல்ல வாய்ப்புகள் உங்களை நாடிவரும். கேதுவுக்கு சூரியன் பகை கிரகமாக இருந்தாலும் 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது அதிக நன்மைகள் கிடைக்கும் என்பார்கள். பதவி உயர்வு, ஊதிய உயர்வு, விரும்பிய இடத்திற்கு இடமாற்றம், உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் அன்பிற்கும், ஆதரவிற்கும் பாத்திரமாகும் சூழ்நிலை உருவாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராசினிதேவி சிவலிங்கத்தின் "தடம்மாறும் பாதைகள்" சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அதிபர் சி.வேலழகன் தலைமையுரை நிகழ்த்துவதையும் ஜீவநதி ஆசிரியர் க.பரணீதரன் நூலை வெளியிட்டு வைப்பதையும் த.அஜந்தகுமார் கருத்துரை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# சு.கவை ஐ.தே.க. ஆட்டுவிக்கின்றது

## கூட்டு எதிரணி கூறுகிறது



பொம்மை தலைவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஐக்கிய தேசியக் கட்சியின் கைகளால் ஆட்டுவிக்கும் பொம்மையாக மாற்றி விட்டனர் என கூட்டு எதிர்க்கட்சியின் ஒருங்கிணைப்பாளரான நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கம்பஹா உடுகம்பொல ரெஜி ரணதுங்க மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தொகுதி அதிகார சபையை ஸ்தாபிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தற்போது மிகவும் கஷ்டமான நிலைமைக்குள் விழுந்துள்ளது.

பண்டாரநாயக்க அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பித்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகள் நாட்டுக்கு பொருத்தமற்றது என்ற காரணத்தினாலேயே அவர் அதில் இருந்து விலகி இந்த கட்சியை ஆரம்பித்தார்.

ஆனால், தற்போது என்ன நடந்துள்ளது. கட்சியின் தலைவரே எமது அன்புக்குரிய கட்சியை, அன்று பண்டாரநாயக்க கூட நிராகரித்த ஐக்கிய தேசியக்கட்சியின் வாலில் கட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி கூறுதற்கு இணங்கவே இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி செயற்படுகிறது.

கட்சித் தலைவர்களின் தூரநோக்கற்ற வேலைத்திட்டங்கள் காரணமாகவே நாட்டின் வளங்களை விற்பனை செய்து, தொழிற்சங்க போராட்டங்களை வன்முறையில் அடக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் கொலைகார பயணத்திற்கு கட்சி பங்காளியாக மாறியுள்ளது எனவும் பிரசன்ன ரணதுங்க பகிரங்கமாக குற்றஞ்சாட்டினார். (இ-7)



யாழ்.வரணி மத்திய கல்லூரியன் வருடாந்த பரிசில்நாள் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக வலயக்கல்விப்பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் கலந்து கொண்டார். சிறப்பு நிகழ்வாக கணித , விஞ்ஞானத்துறை ஆரம்பிக்கப்பட்டு முதன்முதலாக பொறியியல் பீடத்திற்கு தெரிவான மாணவன் கந்தையா ஜனகராஜ் இந்நிகழ்வில் முன்னிலைப்படுத்தி கௌரவிக்கப்பட்டார்.

### ஸ்மார்ட் தொலைபேசிகள் மூலம்

# டெங்கு பிரதேசங்களை படம்பிடிக்க படையணி

ஸ்மார்ட் தொலைபேசிகள் ஊடாக, குப்பை மற்றும் டெங்கு பிரச்சினைகளுக்குரிய இடங்களைப் படம்பிடித்து அதனை சட்ட நடவடிக்கைகளின் போது சாட்சியங்களாக சமர்ப்பிக்க விசேட படையணியொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

திண்மக் கழிவுகளை சரியான முறையில் முகாமைத்துவம் செய்வதற்கு, அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைத் திட்டங்களை முன்னெடுத்து வரும் நிலையில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபாவின் விசேட ஆலோசனையின் கீழ், இப்பணிகளை உரிய முறையில் மேற்கொள்வதற்கு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இதன்பிரகாரம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய திண்மக் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ உதவி நிலையத்துடன் பாதுகாப்பு அமைச்சும் ஒன்றிணைந்து, இவ்விசேட பணிகளை மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ளது.

இதற்காக, திண்மக் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ நிலையத்தில், விசேட படையணிப் பிரிவொன்றும் தற்போது உருவாக்கப்பட்டுள்ளது. இப்படையணிப் பிரிவு, திண்மக் கழிவுகள் முகாமைத்துவம் தொடர்பில் 24 மணி நேரமும் அவதானம் செலுத்தும்.

தற்போதைக்கு, கொழும்பு மாநகர எல்லைப் பிரதேசத்தைக் கண்காணிக்கும் பொறுப்பு, இவ் விசேட படையணிப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் குப்பைகளை, கண்ட கண்ட இடங்களில் கொட்டுதல், அதனைச் சேகரித்தல் மற்றும் ஒதுக்கி வைத்தல் தொடர்பில், இப் படையணிப் பிரிவு எந்நேரமும் அவதானத்தைச் செலுத்திக் கொண்டிருக்கும்.

இதன் மற்றொரு அங்கமாக, சைக்கிள்கள் மூலம் சென்று, கழிவுப் பொருட்கள் சேரும் இடங்களையும் டெங்கு நுளம்புகள் பெருக வாய்ப்புள்ள இடங்களையும் பரிசோதிக்க 40 குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

இந்தக் குழுக்களில், முப்படையைச் சேர்ந்தவர்கள் அங்கம் வகிப்பர். இவர்களுக்கு முப்பது ஸ்மார்ட் தொலைபேசிகளும் வழங்கப்படும். அவைகள் ஊடாக, இவர்கள் குப்பை மற்றும் டெங்கு பிரச்சினைகளுக்குரிய இடங்களைப் படம்பிடிப்பர். அப்படங்கள் சட்ட நடவடிக்கைகளின் போது சாட்சியங்களாக சமர்ப்பிக்கப்படும்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா, சட்டம் ஒழுங்குகள் அமைச்சர் சாகல ரத்நாயக்க ஆகியோர் கூட்டாக சமர்ப்பித்த பிரேரணைகளுக்கு அமைவாக, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதையடுத்தே, இந் நடவடிக்கை இவ்வாறு மேற்கொள்ளப்படவுள்ளது. (இ-7)




குரும்பசிட்டி உதயதாரகை சனசமூக நிலைய ஆதரவில் அமரர் நா.கதிர்காமநாதன் ஞாபகார்த்தமாக 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களுக்கான சுற்றாடல் சார் செயற்பாட்டுக் கண்காட்சி குரும்பசிட்டி பொன் பரமானந்தா மகா வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தெல்லிப்பழை கோட்டக்கல்விப்பணிப்பாளர் மா.ஆனந்தகுமார் கலந்து கொண்டு மங்கல விளக்கேற்றி வைப்பதையும் தெல்லிப்பழை கோட்டத்தைச் சேர்ந்த அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என்பலரும் கலந்து கொண்டு கண்காட்சியை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## மருத்துவத் தொழில்

பரமார்த்த குருவை பார்த்து "குரு நாதா! இனிமேல் நாம் மருத்துவத் தொழில் செய்தால் என்ன?" எனக் கேட்டான். முட்டாள்.

"அதனால் நமக்கு என்ன பயன்?" என்று பரமார்த்த குரு கேட்டார்.

"பணம் கிடைக்கும். அத்துடன் புண்ணியமும் கிடைக்கும்" என்றான் மூடன். "அப்படியே செய்வோம்" என்றார் குரு.

"மனிதர்களுக்கு மட்டும் தானா?" என்று கேட்டான் மண்டு.

"மனிதருக்கும் வைத்தியம் செய்வோம் மாட்டுக்கும் செய்வோம் குழந்தைக்கும் செய்வோம் குரங்குக்கும் செய்வோம்!" என்றான் மட்டி.

பரமார்த்தரும் அவரது ஐந்து சீடர்களும் மருத்துவம் செய்யும் செய்தி ஊர் முழுதும் பரவியது.

காய்ச்சலால் அவதிப்பட்ட ஒருவன் வந்தான். அவன் உடலைத் தொட்டுப் பார்த்த மடையன், "குருவே! இவன் உடம்பு நெருப்பாகச் சுடுகிறது!" என்றான்.

"அப்படியானால் உடனே உடம்பைக் குளிர்ச்சி அடையச் செய்ய வேண்டும்!" என்றார் பரமார்த்தர்.

"அதற்கு என்ன செய்வது?" எனக் கேட்டான் முட்டாள். "இந்த ஆளைக் கொண்டு போய்த் தொட்டியில் உள்ள தண்ணீரில் அழுத்தி வையுங்கள். ஒரு மணி நேரம் அப்படியே கிடக்கட்டும்" என்றார் குரு.

உடனே மட்டியும் மடையனும் அந்த நோயாளியைத் தூக்கிக் கொண்டு போய், தொட்டி நீரில் போட்டனர். முட்டாளும் மூடனும் மாற்றி மாற்றி அவனை நீரில் அழுத்தினார்கள்.

நோயாளியோ "ஐயோ. அம்மா!" என்று அலறியபடி விழுந்தடித்து ஓடினான். கொஞ்ச நேரம் கழித்து ஒரு கிழவி வந்தாள். "கண் வலிக்கிறது" என்றாள்.

"இப்போது நேரமில்லை. உன் கண்ணை மட்டும் தோண்டி எடுத்துக் கொடுத்து விட்டுப்போ. சரி செய்து வைக்கிறோம்!" என்றான் முட்டாள். கிழவியோ. "ஐயையோ" என்று கத்திக் கொண்டு ஓடினாள்.

சிறிதுநேரம் சென்றது. "உடம்பெல்லாம் வெட வெட என்று நடுங்குகிறது என்றபடி ஒருவன் வந்தான்.

"சும்மா இருப்பதால்தான் ஆடுகிறது. உடம்பு முழுவதும் கயிறு போட்டுக் கட்டி விடுங்கள்! அப்போது எல்லாம் சரியாகிவிடும்" என்றார் பரமார்த்தர்.

முட்டாளும் மூடனும் வந்தவனை இழுத்துக் கொண்டு சென்று தூணில் கட்டி வைத்தனர்.

கட்டி வைத்த பிறகும் அவன் உடம்பு நடுங்குவதைக் கண்ட மட்டி, "குருதேவா! இது குளிரால் வந்த நோய்.

இது தீர வேண்டுமானால், இவன் உடம்பைச் சூடாக்க வேண்டும்!" என்றான்.

அதைக் கேட்ட முட்டாள் தன் கையிலிருந்த கொள்ளிக் கட்டையால் நோயாளியின் உடல் முழுவதும் வரிவரியாகச் சூடு போட்டான்.

வலி தாங்காத நோயாளி சுருண்டு விழுந்தான்.


"பல் வலி தாங்க முடியவில்லை. என்ன செய்வது?" என்று கேட்டபடி வேறொருவர் வந்தார்.

"வலிக்கிற பல்லை எடுத்து விட்டால் சரியாகி விடும்" என்றார் பரமார்த்தர்.

சீடர்களோ, ஆளுக்குக் கொஞ்சமாக எல்லா பல்லையும் கத்தியால் தட்டி எடுத்துப் பொட்டலமாகக் கட்டிக் கொடுத்தனர்! "இனிமேல் உனக்குப் பல் வலியே வராது!" என்றார் பரமார்த்தர்.

சற்று நேரம் கழிந்தது. யானைக்கால் வியாதிக்காரன் ஒருவன் வந்தான்.

"உலகிலேயே இதற்கு இரண்டு



வகையான வைத்தியம்தான் இருக்கிறது. நன்றாக இருக்கிற காலை வெட்டிவிட்டு, அந்த இடத்தில் யானையின் காலை ஒட்டி விட வேண்டும். இல்லாவிட்டால் அந்தக் காலுக்குச் சமமாக இந்தக் காலில் உள்ள சதையைச் செதுக்கி எடுத்து விட வேண்டும்!" என்றார் பரமார்த்தர்.

யானைக்கால் வியாதிக்காரனோ, "காலை விட்டால் போதும்" என்று தப்பினான்.

"ஐயா! ஒரே இருமல். தொடர்ந்து இருமிக் கொண்டே இருக்கிறான்" என்றபடி வேறு ஓர் ஆள் வந்தார். வாயைத் திறப்பதால்தானே இருமல் வருகிறது. வாயை மூடிவிட்டால் என்ன? என்று நினைத்தார். பரமார்த்தர். "இவர் வாயை அடைத்து விடுங்கள்!" என்று கட்டளை இட்டார்.

குருவின் சொல்படி, கிழிந்த துணிகளை எல்லாம் சுருட்டி, இருமல்காரனின் வாயில் வைத்துத் திணித்தான் மட்டி.

"என் ஆடு சரியாகத் தழை தின்னமாட்டேன் என்கிறது" என்றபடி ஒருவன் வந்தான். அந்த ஆட்டைக் கண்ட குரு, "தொண்டையில் ஏதாவது அடைத்துக் கொண்டு இருக்கும்" என்றார்.

"வாயைப் பெரிதாக ஆக்கி விட்டால் போதும்" என்றான் மடையன்.

கத்தி ஒன்றைத் தூக்கிக் கொண்டு வந்தான் முட்டாள்.

அதைப் பிடுங்கி, ஆட்டை வெட்டப் போனான் மூடன். பயந்துபோன ஆட்டுக்காரன், ஆட்டை இழுத்துக் கொண்டு ஓட்டம் பிடித்தான்.

குருவும் சீடர்களும் வைத்தியம் என்ற பெயரில் கண்டபடி நடந்து கொள்வதைப் பற்றி எல்லோரும் பேசிக் கொண்டனர். ஊர் பெரியவர்கள் கூடி இனி குருவையும் சீடர்களையும் ஊருக்குள் நுழைய விடக் கூடாதென முடிவெடுத்தனர்.



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

08.2017 01



- 2007- யாழ்.பல்கலைக்கழக ஊடகத்துறை மாணவன் ச.நிலக்சன் அவரது வீட்டில் வைத்து படுகொலை செய்யப்பட்டார்.
- 1914 - இலங்கையில் மன்னாருக்கும் மதவாச்சிக்கும் இடையில் பகல் நேர தொடரூந்து சேவை ஆரம்பிக்கப்பட்டது.
- 1952 - தந்தை பெரியார் தொடரூந்து நிலையங்களில் இந்தி அழிப்புப் போராட்டத்தைத் துவக்கி வைத்தார்.
- 2006 - இலங்கை, திருகோணமலையில் கடற்படைத்தளம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய எறிகணைத் தாக்குதலில் 14 கடற்படையினர் கொல்லப்பட்டனர்.

பிறப்புகள்

- 1907-மறை. திருநாவுக்கரசு, இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (இ. 1983)
- 1876-டைகர் வரதாச்சாரியார், கர்நாடக இசைக் கலைஞர் . (இ. 1950)
- 1910 - முகமது நிசார், இந்தியத் துடுப்பாளர் (இ. 1963)
- 1932 - மீனாகுமாரி, இந்திய நடிகை (இ. 1972)
- 1946 - குப்பிழான் ஐ. சண்முகம், ஈழத்து எழுத்தாளர்
- 1952-வி. எஸ்.ராதாகிருஷ்ணன், இலங்கை மலையக அரசியல்வாதி.
- 1987 - டாப்சி பன்னு, இந்திய நடிகை

இறப்புகள்

- 1920-பால கங்காதர திலகர், இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி. 1856)
- 1974-மு. இராமலிங்கம், ஈழத்து எழுத்தாளர் (பி. 1908)
- 1982-தா.திருநாவுக்கரசு, இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (பி. 1933)
- 1999- நீரத் சந்திர சவுத்ரி, வங்காளதேஷ் ஆங்கிலேய வரலாற்றாளர் (பி. 1897)
- 2008-ஹர்கிஷன் சிங் சுர்ஜீத், இந்திய அரசியல்வாதி (பி. 1916)

சிறப்புநாள்

- அங்கோலா - இராணுவ நாள்
- பெனின் - தேசிய நாள் (1960)
- கொங்கோ - பெற்றோர் நாள்
- லெபனான் - இராணுவ நாள்
- சுவிட்சர்லாந்து - தேசிய நாள் (1291)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 150 | 140 | 100 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 80 | 110 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 400 | 600 | 350 | 280 | 400 | 350 |
| தக்காளி | 160 | 200 | 120 | 170 | 160 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 120 | 60 | 80 | 80 | 60 |
| கோவா | 140 | 160 | 80 | 120 | 140 | 120 |
| கரட் | 160 | 200 | 200 | 200 | 200 | 250 |
| பூசணி | 50 | 100 | 110 | 80 | 80 | 100 |
| புடோல் | 60 | 120 | 50 | 70 | 100 | 150 |
| வாழைக்காய் | 100 | 120 | 60 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 180 | 180 | 150 | 150 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 90 | 100 | 120 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 300 | 140 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 50 | 120 | 50 | 80 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 120 | 180 | 150 | 120 | 160 | 140 |
| பயற்றங்காய் | 100 | 50 | 150 | 80 | 80 | 100 |
| லீக்ஸ் | 100 | 120 | 50 | 120 | 80 | 100 |
| பீற்றூட் | 50 | 50 | 150 | 140 | 60 | 80 |
| கறிமிளகாய் | 160 | 200 | 150 | 200 | 160 | 200 |
| முருங்கைக்காய் | 150 | 100 | 120 | 120 | 120 | 150 |
| போஞ்சி | 160 | 200 | 100 | 160 | 160 | 240 |
| கத்தரிதம்புள்ள | 80 | 100 | 100 | 80 | 100 | 100 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 30 | 40 | 25 |
| தேசிக்காய் | 60 | 25 | 50 | 50 | 120 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 60 | 60 | 40-60 | 60 |
| இராசவள்ளி | 200 | 200 | — | 240 | 300 | — |
| வெங்காயப்பூ | 180 | 200 | 150 | 160 | 160 | 200 |
| முள்ளங்கி | 80 | 50 | 30 | 80 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 100 | 120 | — | 50 | — | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் நானே. பாவமும் நானே.
பாடும் உனை நான் பாட வைப்பேனே.
– கண்ணதாசன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## குழப்பத்தை ஏற்படுத்துவதற்கான சூழ்ச்சிகள் தெரிகின்றன

யாழ்ப்பாணக் குடாநாட்டின் அமைதியை குழப்புவதற்காக சதித்திட்டங்கள் அரங்கேறுவது தெரிகின்றது.

யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் அவர்களை நோக்கிய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஆரம்பிக்கப்பட்ட விவகாரம் இப்போது வேறொரு வடிவில் நகர்த்தப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

நேற்று முன்தினம் கொக்குவில் பகுதியில் வைத்து இரண்டு பொலிஸார் மீது வாள்வெட்டு நடந்துள்ளது. வாள்வெட்டு கோஷ்டி ஒன்று இப்பயங்கரச் செயலைச் செய்ததாக கூறப்படுகிறது.

யாழ்ப்பாண குடாநாட்டில் வாள்வெட்டு கோஷ்டிகளின் நடமாட்டத்தால் மக்கள் அதிர்ந்து போயுள்ளனர்.

ஒவ்வொரு நாளும் ஊடகங்களில் வருகின்ற செய்திகளைப் பார்த்தால் வாள்வெட்டு என்ற செய்திக்கு குறைவே இல்லை எனலாம்.

அந்தளவுக்கு வாள்வெட்டு சம்பவங்கள் சர்வ சாதாரணமாக நடந்துள்ளன. இதற்கு மேலாக நீதிபதி இளஞ்செழியன் மீது நல்லூரில் வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பற்றி பொலிஸ் நிர்வாகம் விடுத்த முதலாவது அறிக்கை நீதிபதியை நோக்கி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெறவில்லை என்பது தான்.

தன்னை நோக்கியே துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றதாக சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட நீதிபதி கூறும்போது, அதனை அவசரமாக மறுப்பதில் பொலிஸார் ஈடுபட்டமை பாதுகாப்புச் செயல் ஒழுங்கில் சில குழப்பங்கள் உண்டென்பதையே சுட்டி நிற்கிறது.

இதுதவிர, நேற்று முன்தினம் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களை வாள்வெட்டு கோஷ்டி ஒன்று வெட்டியுள்ளது. இதனால் மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

நீதிபதி மீது துப்பாக்கிச் சூடு, அவரின் மெய்ப்பாதுகாவலர் பலி, இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது வாள்வெட்டு என்ற சம்பவங்கள் சாதாரணமானவை அல்ல. இச்சம்பவங்களுக்கு பின்னணி உண்டு.

இதுதொடர்பில் தமிழ் அரசியல் தலைமை கூடி ஆராய வேண்டும். இவ் விடயத்தில் வெளிநாடுகளில் கரிசனையை ஏற்படுத்த வேண்டும்.

யாழ்ப்பாண குடாநாட்டில் ஓர் அமைதியற்ற சூழ்நிலையை ஏற்படுத்துவதே நடந்த சம்பவங்களின் பின்னணி என்பது உணரப்பட வேண்டும்.

அதேநேரம் இராணுவ பிரசன்னத்தை வடமாகாணத்தில் தொடர்ந்து மேற்கொள்வதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்படுவதான நிலைமையை உணர முடிகிறது.

எது எப்படியாயினும் யாழ்ப்பாண குடாநாட்டில் நடக்கின்ற இச்சம்பவங்கள் தொடர்பில் நாம் அனைவரும் விழிப்பாக இருக்க வேண்டும்.

நீதிபதி மீது துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தை மேற்கொள்கின்ற தினத்தன்று இராணுவத்தின் மீது துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்ததாகவும் வாள்வெட்டு சம்பவம் இடம்பெற்றதுமான செய்திகள் வெளிவந்திருந்தன.

எனினும் அவற்றின் உண்மைத்தன்மையை ஆராய்ந்தபோது அது வெறும் வதந்தி என செய்தியாளர்கள் அறிந்து கொண்டனர்.

இவ்வாறான வதந்திகள் எதற்கானது? அந்த வதந்திகளை தொடர்ந்து இப்போது நடக்கின்ற சம்பவங்கள் என்பன தொடர்பில் நிதானமாக ஆராய்ந்தால், யாழ்ப்பாண குடாநாட்டின் அமைதிக்கு பங்கம் வரக்கூடியதை உணர முடிகின்றது.

எனவே இது விடயத்தில் தமிழ் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

# பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர யாழ்.போதனாவுக்கு நேற்று விஜயம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் நந்தாவில் பகுதியில் பொலிஸாரை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டு தாக்குதலில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களை பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர நேற்று முற்பகல் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் சட்டம் ஒழுங்கு பாதிப்பு நிலைமைகள் தொடர்பில் ஆராயும் பொருட்டு பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர நேற்று யாழ் மாவட்டத்திற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து பொலிஸாருக்கு வழங்கப்படும் சிகிச்சை தொடர்பாக வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தியிடம் கலந்துரையாடியதுடன் இவ் விடயம் தொடர்பில் விரைவில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு யாழ். மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபருக்கு, பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

இதனையடுத்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த பொலிஸாருடனான கலந்துரையாடலையும் ஆரம்பித்து வைத்ததுடன் அதனைத் தொடர்ந்து ஊடகவியலாளர் சந்திப்பொன்றை மேற்கொண்டார்.

அத்துடன் யாழ்.குடாநாட்டில் இடம்பெறும் சகல குற்றச் செயல்கள் தொடர்பிலும் தகவல்களை வழங்குமாறு மக்களிடமும் ஊடகங்களிடமும் கோரிக்கை விடுத்த அவர், குற்றச் செயல்கள் குறித்து ஏதாவது தகவல்கள் தெரிந்தால் 071 758 2222 அல்லது 071 859 2020 என்ற தனது தொலைபேசி இலக்கங்கள் மூலம் நேரடியாகத் தெரியப்படுத்துமாறும் அவர் கேட்டுக் கொண்டார். (செ-11)

## துறைமுகத்தை விற்றமை எனக்கு கவலையளிக்கிறது

### முன்னாள் ஜனாதிபதி மகிந்த ஆதங்கம்

இதயபூர்வமாக கட்டியெழுப்பிய அம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்றது எனக்கு கவலையாக உள்ளது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தங்காலை கார்ல்டன் வீட்டில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் கலந்துரையாடலின் போதே மகிந்த மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர்மேலும்கூறுகையில்,

நான் நினைக்கிறேன் எனது தந்தை எனது சிறிய தந்தை மற்றும் ஆனந்த குலரத்ன மற்றும் அன்றைய ஐ.தே.கவினர் பெரும் எதிர்பார்ப்புடன் இந்த துறைமுகம் சம்பந்தமான அபிவிருத்தியை கருதி இருந்தனர்.

ஆனாலும் யாராலும் முடியாத இந்த துறைமுகத்தை நாம் கட்டியெழுப்பினோம். இதற்கு அரசின் பணம் எடுக்கவில்லை.

கொடுக்க வேண்டிய கடன் துறைமுகத்தில் கிடைக்கப்பெற்ற வருமானத்திலே பணிகள் முடிக்கப்பட்டு கொடுக்கப்பட்டது.

சீனாவுக்கு வர்த்தக ரீதியில் கொடுக்கப்பட்ட 99 வருட குத்தகைக்குரிய காலத் தில் எத்தனை பரம்பரை இருக்கப் போகின்றோம். இது எமது பிள்ளைகளுக்கானது.

ஜூலை 29ஆம் திகதி எமக்கு கரிநாள். நாம் துன்பம் அடைகின்றோம். மக்களுக்கு வேண்டிய இத்துறைமுகத்தை திறமையாக நிர்வகிக்க முடியும்.

ஆனால்என்மீதுகொண்ட கோபம், வைராக்கியம் காரணமாக தற்போதைய ஆட்சியாளர்கள் தவறிழைக்கின்றனர் என்றார் மகிந்த. (செ)




வகுளாதேவி திரும்பத் திரும்ப திருச்செல்வன் முகம் பார்த்தாள்.

எங்கே கண்ட முகம் இது? இந்த முகம் ஏன் என்னை இந்தப் பாடு படுத்துகிறது? என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள். பதிலொன்றும் கிடைக்கவில்லை. இருப்பினும் பால் வடியும் முகத்துடன் காட்சி தந்த பரந்தாமனை விட்டு விலகவும் அவள் உள்ளம் ஒப்பவில்லை. எனவே அவனுடன் செல்ல அவள் இன்முகத்துடன் இசைந்தாள்.

வராஹமூர்த்தி கை காட்டிய இடத்தில் கார்வண்ணன் பர்ணசாலை ஒன்றைப் பாங்காக அமைத்தான். அன்னையோடு அவனும் அதில் குடி புகுந்தான்.ஆசிரமம் அமைந்ததும் அன்னை அவள் தம் மைந்தனிடம் குழந்தாய் ஏனோ தெரியவில்லை. (தொடரும்)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**நாக தோஷம் எப்படி அறிவது?**

நாகதோஷத்தை லக்கின 2,5,7,8 இல் இருக்கும் ஸ்ரீராகு பகவானையும் ஸ்ரீ கேது பகவானையும் வைத்து அறியலாம். லக்கின வாரியாக எவ்வித அமைப்பு பலம் என்று பார்ப்போம்.

மேஷ லக்கினம் 5,7 ஆம் இடங்கள் தோஷம், ரிஷப லக்கிணம் 5,7,11 ஆம் இடங்கள் தோஷம, மிதுன லக்கினம் 2,8,5,7 ஆம் இடங்கள் தோஷம், கடக லக்கினம் 2,5,7,8 ஆம் இடங்கள் தோஷம், கன்னி லக்கினம் 5,11 ஆம் இடங்கள் தோஷம், துலாம் 7,8,11 ஆம் இடங்கள் தோஷம், விருச்சிக லக்கினம் 5,7 ஆம் இடங்கள் தோஷம், தனுசு லக்கினம் 5,7,8 ஆம் இடங்கள் தோஷம், மகர லக்கினம் 7 ஆம் இடம் தோஷம், கும்ப லக்கினம் 5,7 ஆம் இடங்கள் தோஷம். மீன லக்கினம் 2,7 ஆம் இடங்கள் தோஷம்.

இவ்வித தோஷ அமைப்பிற்கு எவ்வித வரன்களை பொருத்தலாம் என்பதை ஜோதிட ஆய்வாளர்களை மட்டும் அணுகவும். (தொடரும்)

## இருதய நோயாளிகள் தவிர்க்க வேண்டிய உணவுகள்

கொழுப்பு கூடிய உணவுகளான மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, தோலுடனான கோழி இறைச்சி, பொரித்த உணவுகள், பட்டர், மாஜரின், முட்டை மஞ்சள்கரு, இறால், நண்டு, கணவாய்.

அதிக உப்பு சேர்க்கப்பட்ட உணவுகளான கருவாடு, ஊறுகாய், மோர் மிளகாய், பொரித்த உணவுகள், ரின்மீன் போன்றவை.

சமைக்கும் போது அதிக உப்பு சேர்ப்பதனை தவிர்த்தல்

தேங்காய், தேங்காயெண்ணெய், மரக்கறி எண்ணெய் பாவனையை முடிந்தவரை குறைத்தல், தேங்காய் பாலில் முதல் பாலை தவிர்த்து மற்றைய பாலில் பயன்படுத்தல்

அதிக இனிப், மாப்பொருள் உணவுகளை உள்ளெடுப்பதனை தவிர்த்தல்

சொக்லட், மிக்சர் போன்றவற்றை அடிக்கடி உண்பதனை தவிர்த்தல்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகரசபை.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ இந்திய மக்கள் சமூகமே எனது குழந்தைப் பருவத்தைத் தொட்டதில் எனது காளைப்பருவத்துச் சுகம் தரும் மலர்வதனம்,நாம் முதுமையில் அடையும் பரமபதமும் வாரணாசியும் அதுவே என வீறுடன் கூறுக. சகோதரா இந்தியாவின் மண்ணே எனது மிகவுயர்ந்த விண்ணுலகம். இந்தியாவின் நன்மையே எனது நன்மை என்று கூறி கௌரிநாயகா! ஜெகதாம்பிகே! எனக்கு ஆண்மையை அளித்தருள்க! சக்திதேவி! எனது பலவீனத்தை ஒழித்தருள்! எனது பேடித்தனத்தைப் போக்கி என்னை ஓர் ஆண்மகனாக்கு! என்று அல்லும் பகலும் ஓதிப் பிரார்த்தித்து வருக.

❖ இந்தியாவே இது உனக்குப் பேராபத்து. மேலைநாட்டாரைப் பின்செல்லும் மயக்கம் உன்னைப் பற்றிக் கொண்டுள்ள அளவை என்னென்பேன். நல்லது இது, தீயது இது என்பதைப் புத்தியாலோ ஆராய்ச்சியாலோ சாஸ்திரப் பிரமாணத்தாலோ முடிவு செய்பவர்கள் இன்றில்லை. வெள்ளையர்கள் புகழ்வதும் விரும்புவதும் என்னென்ன கருத்துக்களோ, அவை நல்லவை. அவர்கள் வெறுப்பனவும் கண்டிப்பனவும் தீயவை! அந்தோ உன் பேதமைக்கு இதைவிடத் தெளிவான சான்று வேறு என்ன இருக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலுசந்தி மைக்கல் அணியை தோற்கடித்து இறுதிப் போட்டிக்கு நுழைந்தது பரு.ஐக்கியம்



பருத்தித்துறை ஐக்கிய விளை யாட்டுக் கழகம் நடத்தும் வட மராட்சி கபடிச் சங்கத்தின் அனு மதியுடன் "அமரர் ம.சூரிய குமா ரன்" ஞாபகார்த்த 20 வயதுக்கு உட்பட்டோர்கான யாழ்.மாவட்ட ரீதியிலான கழகங்களுக்கு இடை யிலான மின்னொளியிலான மாபெரும் கபடிச் சுற்றுப் போட்டி ( 28-07.2017 ) வெள்ளி இடம்பெற்றது. நடைபெற்ற அரை இறுதி ஆட்டத்தில் பருத்தித் துறை ஐக்கியம் விளையாட்டுக் கழகத்தை எதிர் கொண்டு மைக்கல் கபடி அணி விளையாடியது.

மைதானத்தில் அதிகளவு ஆதர வாளர் களுடன் களம் இறங்கிய பருத்தித்துறை ஐக்கியம் அணியை மைக்கல் அணி கம்பீரமாக எதிர் கொண்டு விளையாடியது.

இரு அணிகளும் ஆரம்பத்தில் சம பலத் துடன் மோதினார்கள்.

தொடர்ந்து போட்டி விறுவிறுப் படைய மைக்கல் தனது புள்ளி களை வேகப்படுத்த தொடங்கியது. தொடர்ந்து களவியூகங்களை மாற் றிய ஐக்கியம் அணி வேகமான விளை யாட்டை நகர்த்தி புள்ளி களை பெற தொடங்கினர்.

இடைவேளையின் போது ஐக்கியம் 25:20 என முன்னிலை பெற்றது. இடைவேளையின் பின்



னர் போட்டி விறுவிறுப்பாக நகர தொடங்கியது. போட்டியில் பார் வையாளர்களின் உற்சாகம் மைதானத்தை அதிர வைத்தது. தொடர்ந்து போட்டி இறுதிக் கட் டத்தை அடைய இரு அணிகளும் ஆக்ரோசமான நகர்வுகள் மூலம் புள்ளிகளை பெற முயற்சித்தனர்.

இறுதியில் 57:46 என்ற புள்ளியடிப்படையில் பரு.ஐக்கியம் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

இப்போட்டியின் ஆட்ட நாய கனாக ஐக்கியம் வி.கழக வீரர் ரொக்கன் தெரிவுசெய்யப்பட்டார்.

இவருக்கான பதக்கத்தை வட மராட்சி கபடி சங்க உறுப்பினரும் விளையாட்டு உத்தியோகத்தரும் மதிப்புக்குரிய ஜிவிந்தன் வழங்கி கௌரவித்தார். (க)

# சிநேகபூர்வமான கிரிக்கெட்; சென்றலைட்ஸ்சை வென்றது AB

AB அணிக்கும் சென்றலைட்ஸ் அணிக்கும் இடையிலான சிநேக பூர்வமான 50 பந்து பரிமாற்றங் களை கொண்ட கிரிக்கெட் போட்டி 30.07.2017 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சென்றலைட்ஸ் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித் தது. அதன் படி முதலில் துடுப்பெடுத் தாடிய சென்றலைட்ஸ் 22.2 பந்து பரிமாற்றத்தில் அனைத்து இலக்கு களையும் இழந்து 134 ஓட்டங் களை பெற்றது. இதில் சென்ற லைட்ஸ் அணி சார்பாக நிரஞ்சன் 36, அலன் 29, ஜெம்ஸ் 23 ஓட்டங்களை பெற்றனர்

AB சார்பாக பந்து வீச்சில் சிலோஜன் 6 பந்துபரிமாற்றங்கள் வீசி 26 ஓட்டங்களுக்கு hattrick உட்பட 4இலக்குகளையும் பார்த் தாபன் 5.2 பந்துபரிமாற்றங்கள் வீசி 30 ஓட்டங்களுக்கு 3 இலக்கு களையும் விஷ்ணு 2 பந்துப் பரி மாற்றங்கள் வீசி 10 ஓட்டங்களுக்கு 1 இலக்கையும் கைப்பற்றினர்

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய AB அணி 22.3 பந்து பரிமாற்றத்தில்



5 இலக்குகளை இழந்து 135 ஓட்ட ங்களை பெற்று வெற்றியினை பெற் றது. இதில் AB சார்பாக ராகுலன் 63 ஆதி. 44, லிங்கநாதன் 19 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சென்றலைட்ஸ் சார்பாக மயூரன் 8 பந்து பரிமாற்றங்களை வீசி 45 ஓட்டங்களுக்கு 3 இலக் குகளையும் ஜெம்ஸ் 2 பந்து பரிமாற்றங்களை வீசி 15 ஓட் டங்களுக்கு 1 இலக்கையும்ெ ஜரிக் 7ப ந்துபரிமாற்றங்களை வீசி 24 ஓட்டங்களுக்கு 1 இலக் கையும் கைப்பற்றினர்

இப்போட்டியில் AB 5 இலக்கு களால் வெற்றிபெற்றதுடன் AB யின் 5 வது தொடர் வெற்றியையும் பதிவு செய்தது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# ஐக்கிய வி.கழகம் நடத்தும் கழக வீரர்களுக்கான கபடி

## சொக்கன் வெற்றி

பருத்தித்துறை ஐக்கிய விளை யாட்டுக்கழக வீரர்களுக்கு இடை யிலான உள்ளக கபடிப் போட்டியில் 29.07.2017 சனிக்கிழமை நடைபெ ற்ற போட்டியில் சொக்கன் அபார மான வெற்றியை பதிவு செய்தது.

தன்னை எதிர்த்து விளையாடிய பெரியம்மான்சலன்டேர்ஸ்அணியை திறமையான ஆட்டத்தால் திணற வைத்தது.

போட்டியில் பலமான அணி யாக காணப்பட்ட பெரியம்மான் கபடி அணியை எதிர் கொண்ட சொக்கன் அணி துணிச்சலாக போட்டியை எதிர் கொண்டது. முத லாவது போட்டியில் தோல்வி கண்ட சொக்கன் அணி வென்றே ஆக வேண்டிய கட்டாயம். தோல்வியை சந்தித்தால் இறுதிப் போட்டிக்கான வாய்ப்பை இழக்கும். பெரியம்மான் முதலாவது போட்டியில் வெற்றி பெற்று வாய்ப்பை தக்க வைத்தி ருந்தது.

ஆரம்பம் முதலே போட்டி விறு விறுப்பாக காணப்பட்டது. அனுபவ வீரர்களை கொண்ட சொக்கன் அணி ஆரம்பத்தில் தடுமாற்றம் அடைந்து புள்ளிகளை இழந்தது. பின்னர் வேகம் கொண்டு ஆட் டத்தை தொடர்ந்த சொக்கன் அணி இடைவேளையின் போது 26:23 என முன்னிலையில் காணப்ப ட்டது.

மீண்டும் இடைவேளையின் பின்னர் ஆரம்பமான போட்டியில் ஆதிக்கம் செலுத்திய பெரியம்மான் அணி 32:30 என்ற நிலையில் காணப்பட்டது. அதன் பின் தடுமா றிய பெரியம்மான் அணி வேகமாக விளையாடிய சொக்கன் அணி டம் புள்ளிகளை மெல்ல மெல்ல இழந்தது.

இறுதிக் கட்டம் வரை இரு அணி களுமே வெல்லும் வாய்ப்பு மாறி மாறி வந்து போனது. இறுதியாக வெற்றி பெறும் வாய்ப்பை பெரி யம்மான் தவற விட போட்டி 52:43 என இறுதியில் சொக்கன் அணி வெற்றி பெற்று தொடரில் மூன்று அணிகளும் புள்ளிகளில் சமநிலை பெற்றது. 2 ஆம் கட்டப் போட் டிகளில் வெற்றி பெறும் அணிகள் இறுதிப் போட்டியில் வெற்றிபெறும்.

இப் போட்டியின் சிறப்பாட்டக் காரன் ஆக சீலு தெரிவு செய்யப்பட அவருக்கானவிருதினைகழகதலைவர் அரவிந்தன் அண்ணா வெற்றி பெற்ற அணிக்கான பணப் பரி சையும் வெற்றிக் கிண்ணத்தையும் வழங்கி கௌரவித்தார். (க)



நவாலி விளையாட்டுக் கழகம்நடத்திய துடுப்பாட்டத்தொட ரின் இறுதிப் போட்டியில் A2K விளையாட்டுக கழகத்தை47 ஓட்டங்களால் வீழ்த்தி வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது இணுவில் கலை ஒளி அணி.

# அடுத்த சுற்றுக்கு முன்னேறியது மணற்காடு சென். அன்ரனிஸ்

திக்கம் விளையாட்டு கழகம் நடத்தும் உதை பந்தாட்டப் போட் டியில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் முதல் சுற்றில் மணற் காடு சென். அன்ரனிஸ் விளை யாட்டு கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டு கழகம் விளையாடியது.

இப் போட்டியில் 6.0 என்ற கோல் கணக்கில் மணற்காடு சென். அன்ரனிஸ் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கர்ப்பிணி...

இருந்து பெறப்பட்ட பொருட்களில் சிலவற்றை அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

யாழ்.ஊர்காவற்றுறையில் கடந்த ஜனவரி மாதம் 24ஆம் திகதி கர்ப்பிணியான ஹம்சிகா, வீட்டில் தனிமையில் இருந்தபோது படுகொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## மகிந்தானந்த...

ருக்கும், குற்றப் புலனாய்வு திணைக்கள பணிப்பாளருக்கும் அனுப்பி வைக்குமாறும் நீதிபதி பணித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர தொழிலாளர் காங்கிரஸ் என்ற தொழிற்சங்கத்திற்காக ரூபாய் 29 லட்சம் பணத்தை தவறாக பயன்படுத்தியதாக தொடரப்பட்டுள்ள வழக்கு காரணமாக நீதிமன்றம் மகிந்தானந்த அளுத்கமகேவின் கடவுச்சீட்டை முன்பு முடக்கியிருந்தது.

இந்த வழக்கு எதிர்வரும் செப்டம்பர் மாதம் 15ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட உள்ளது. (செ-11)

## அரச வங்கிகளிடம்...

வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபை 3 ஆயிரத்து 174 கோடி ரூபாயையும் இலங்கை பெற்றோலியக கூட்டுத்தாபனம் 38 ஆயிரத்து 255 கோடி ரூபாயையும் இலங்கை துறைமுக அதிகார சபை 23 ஆயிரத்து 765 கோடி ரூபாயையும் கடனாக பெற்றுள்ளன.

இவற்றை தவிர தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை 4 ஆயிரத்து 226 கோடி ரூபாயையும் வரையறுக்கப்பட்ட விமான நிலையங்கள் மற்றும் விமான சேவை நிறுவனம் 9 ஆயிரத்து 158 கோடி ரூபாயையும் அரச வங்கிகளிடம் இருந்து கடனாக பெற்றுள்ளதுடன், அவற்றை இந்த நிறுவனங்கள் செலுத்த வேண்டியுள்ளதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## முதலமைச்சர்...

மாகாண ரீதியில் ஏற்பட்டுள்ள மணல் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கான முக்கிய தீர்மானங்கள் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் நேற்றைய தினம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதனடிப்படையில் வடமாகாணத்தில் மணல் விநியோகம் மிக விரைவில் சீராக்கப்படவுள்ளதாகவும் அறியமுடிகிறது.

வடக்கில் மணல் அகழ்தல் மற்றும் விற்பனை தொடர்பாக ஏற்பட்டு வரும் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வது தொடர்பாக வடக்கு மாகாண முதலமைச்சர் தலைமையில் உரிய அதிகாரிகளுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அந்த கலந்துரையாடலின் போதே முக்கியமான மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மாகாண ரீதியில் மணல் அகழ்வது தொடர்பில் பாரிய பிரச்சினை ஏற்பட்டுள்ளது. மணல், கிரவல் என்பவற்றின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து செல்வதுடன், சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கைகளும் அதிகளவில் இடம்பெற்று வருகிறது.

கடந்த வருடங்களை விட தற்போது இரண்டு மடங்கு அதிகமான விலை நிர்ணயிக்கப்பட்டு மணல் விநியோகம் நடைபெற்று வருகிறது. இதனால் கட்டுமான பணிகளை மேற்கொள்வதில் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

மேலும் சட்ட விரோத மணல் அகழ்வினால் உயிர் சேதம் உட்பட பாரிய சமூக விரோத செயற்பாடுகளும் இடம்பெற்று வருகிறது. அத்துடன் மணல் அகழ்வதற்கான அனுமதி பாரபட்சம் காட்டப்பட்டு வழங்கப்படுவதால் பாரிய பிரச்சினைகள் இன ரீதியாகவும் ஏற்பட்டு வருகிறது.

இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் பொது மக்களால் பல தடவைகள் முறையிடப்பட்டு வந்துள்ளது.

இவற்றை உடனடியாக கட்டுப்படுத்துவது தொடர்பிலும் எடுக்கப்படும் தீர்மானங்களை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவருடனும் மேற்குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

மேற்படி கலந்துரையாடலில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கருத்துக்களுக்கு அமைவாக மூன்று முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்த வகையில் முதலில், மாகாண ரீதியில் மணல் மற்றும் கிரவலுக்கு பொருத்தமான விலை நிர்ணயிக்கப்பட வேண்டும், மணல் அகழ்வதற்கான அனுமதியை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை இணைத்து மாகாண ரீதியில் ஒரு குழு அமைக்க வேண்டும், மற்றும் சட்டவிரோத மணல் அகழ்வை உடனடியாக நிறுத்துவதற்கு விசேட அதிரடிப்படை மற்றும் முப்படையின் உதவியுடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்த தீர்மானங்களை விரைவில் நடைமுறைப்படுத்துவதற்கு இரு வாரங்களுக்குள் முதலமைச்சர் தலைமையில் வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்ட அரச அதிபர்கள், திணைக்கள அதிகாரிகள், முப்படையினர் மற்றும் பொலிஸாருடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு இத் தீர்மானங்கள் இறுதி முடிவாக அறிவிக்கப்படும் எனவும் நேற்றைய கலந்துரையாடலில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் விசேட விதமாக பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவும் சிறிது நேரம் கலந்து கொண்டிருந்தார். மேலும் இக்கலந்துரையாடலில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடமாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன், யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன்,யாழ் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர்கள், முப்படையினர், கனியவள திணைக்கள் அதிகாரிகள், சுற்றுச் சுழல் அதிகாரசபை அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (செ-9)

## இங்கு இடம்பெற்றது...

மீளவும் உறுதியாக எடுத்துக்கூறியுள்ளதாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை, மற்றும் ம.தியாராஜா ஆகியோரிடம் நேற்றையதினம் யாழ்ப்பாணத்தில் வைத்து கொழும்பிலிருந்து சென்ற குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

நேற்றுக் காலை 09 மணிக்கு யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு வருகை தருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததாக வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்திருந்தார்.

இனப்படுகொலை என்ற வார்த்தைப் பிரயோகம், மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முல்லைத்தீவிற்கு விஜயம் மேற்கொள்ளப்படவிருந்தமை மற்றும் கறுப்புக் கொடி எதிர்ப்பு தொடர்பில் சிவாஜிலிங்கம் வெளியிட்ட கருத்துக்களுக்காக அவரும் அவர் பேசும போது உடன் இருந்த உறுப்பினர்கள் இருவருமாக விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

பௌத்த பிக்கு ஒருவர் எம்.கே.சிவாஜிலிங்கத்திடம், விசாரணை முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவித்து ஏற்கெனவே குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கொழும்பிற்கு வருமாறு அவருக்கு அழைப்பு விடுத்திருந்தனர்.

எனினும் தன்னால் கொழும்புக்கு வர முடியாது என்று குறிப்பிட்ட மாகாணசபை உறுப்பினர், விசாரணை நடத்த வேண்டுமாயின் யாழ்ப்பாணத்திற்கு வந்து விசாரணை நடத்துங்கள் என்று பதிலளித்திருந்தார்.

இதற்கமைய நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் வைத்து எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட மூன்று வடமாகாண சபை உறுப்பினர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதன்போதே தான் தெரிவித்திருந்த இனப்படுகொலை சார்ந்த விடயங்கள் ஆதாரபூர்வமானவை எனவும் அதையே நாம் வடமாகாண சபை மற்றும் ஐ.நாவிலும் பேசி வருகின்றோம் என குறிப்பிட்ட சிவாஜிலிங்கம் இறுதிப் போரில் மட்டுமல்ல பல தசாப்தகாலமாக தமிழர்கள் கொல்லப்பட்டு வருகின்றனர் எனவும் குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் தனது கருத்தை பதிவு செய்துள்ளார். (செ-11)

## விசேட அதிரடிப்...

இதன்படி சட்டவிரோத சம்பவங்கள், குற்றச் செயல்கள் அனைத்தும் அடியோடு அழித்தொழிக்கும வரை இந்த விசேட நடவடிக்கை தொடரும் என்றும் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர தகவல் வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நிலவும் அசாதாரண சூழலை அடுத்து திடீர் விஜயம் ஒன்றினை மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணத்திற்கு வந்த பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர யாழ்.தலைமைப் பொலிஸ் நிலையத்தில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றினை நடத்தியிருந்தார்.

இச் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்.

நேற்று முன்தினம் கொக்குவில் நந்தாவில் பகுதியில் ஒரு சிங்கள பொலிஸ் உத்தியோகத்தர் மற்றொருவர் தமிழ் உத்தியோகத்தர் இருவரும் பணி நிமிர்த்தமாக மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தனர். அதன்போது சிலர் அவர்களின் பின்னால் வந்துள்ளனர்.

சக்தி வலு வாய்ந்த இரண்டு மோட்டார் சைக்கிளில் அவர்கள் வந்தனர். ஒரு மோட்டார் சைக்களின் ஓட்டுநருடன் சேர்த்து மூன்று பேர் வீதம் இருந்தனர். திடீரென்று எந்தவொரு பேச்சுக்கும் இடமின்றி அவர்கள் பொலிஸாரை வெட்டினர்.

இந்தத தாக்குதலில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தரை தாக்கியபோது அவர் மோட்டார் சைக்கிளுடன் கீழே விழுந்தார். அவரின இடது கையின மேல் பகுதியில் கடுமையான காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். அவருடன் சென்றவர் தப்ப முயன்றபோதும் அவருக்கும் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

வாள்வெட்டுக்கு இலக்கான இரு பொலிஸ் உத்தியோகஸ்தர்களும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய மேலதிக சிகிச்சைகள் தொடர்பில் சத்திரசிகிச்சை நிபுணர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

இதேவேளை, பொலிஸாரைத் தாக்கியவர்கள் இரு மோட்டார் சைக்கிள்களில் மட்டும் வரவில்லை. 6 தொடக்கம் 7 வரை யான மோட்டார் சைக்கிளில் வந்துள்ளனர். ஒவ்வொரு மோட்டார் சைக்கிளிலும் 2 முதல் 3 பேர் வந்துள்ளனர். இவ்வாறு வந்தோர் 14 முதல் 15 வரையானவர்களாக இருக்கலாம்.

இதனால் பொலிஸாரால் அவர்களைச் சமாளிக்க முடியவில்லை. அவர்களிடம் இருந்து தப்பிக்கவே முயன்றுள்ளார்கள்.

இந்த வாள்வெட்டுத் தாக்குதலுக்கு தலைமை தாங்கிய நபரை நாங்கள் தற்போது அடையாளம் கண்டுளளோம். அவர் முன்னாள் புலிகள் இயக்க உறுப்பினர். அத்துடன் ஆவா என்ற சமூகவிரோதக் கும்பலிலும் உள்ளார். சம்பந்தப்பட்ட ஏனையவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நடவடிக்கைகளில் விசேட அதிரடிப் படையினரின் உதவியும் பெறப்பட்டுள்ளது. இலங்கை இராணுவம், கடற்படையினர் உதவிகளையும் பெற்றுக்கொள்ளவுள்ளோம்.

வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்ற பகுதி பாதுகாப்புப் பரிவினரின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பாதுகாப்பு பிரிவினரின் செயற்பாடுகள் அங்குத் முன்னெடுக்கப்படும்.

இவ்வாறான சம்பவங்கள் ஒன்றின் பின் ஒன்றாக தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. தேசிய பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியது எமது கடமையாகும். அத்துடன் ஒவ்வொரு பகுதிகளிலும் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியது கடமையாகும்.

ஆகவே விசேட நடவடிக்கைகள், விசேட தேடுதல் நடவடிக்கைகளை நாங்கள் யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகளில் மேற்கொள்ளவுள்ளோம்.

இதன்மூலமே குற்றவாளிகளை கண்டறிந்து மக்களின் பாதுகாப்பையும் குறிப்பிட்ட பகுதிகளின் பாதுகாப்பையும் உறுதி செய்ய முடியும்.

குற்றவாளிகள் குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் தேடிக் கண்டறியப்பட்டு, கைது செய்யப்படும் வரை எமது தேடுதல் நடவடிக்கைகள், விசேட பொலிஸ் நடவடிக்கைககளாக தொடர்ந்து இடம்பெறும்.

இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்க நேர்ந்துள்ளமை குறித்து நாங்கள் மன்னிப்புக் கோருகிறோம்.

இந்த நடவடிக்கைளுக்கு ஊடகங்களின் ஒத்துழைப்பும் எங்களுக்குத் தேவை. ஏறகெனவே ஊடகங்கள் எங்களுக்கு உதவியாக இருக்கின்றன. இவ்வாறான இறுக்கமாக நடவடிக்கைகளை எடுக்கும்போதுதான் பொது மக்களின் பாதுகாப்பை நாங்கள் உறுதிசெய்ய முடியும்.

எனவே, மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு பொதுமக்களும் ஊடகங்களும் தங்கள் பகுதிகளில் நடக்கும் சட்டவிரோத சம்பவங்கள் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல்களைத் தெரிவிக்குமாறு கோருகின்றோம். யாராவது உங்கள் பகுதிகளில் ஆயுதங்களுடன். அல்லது சட்டத்துக்குப் புறம்பான கருவிகளுடன் இருந்தால் அது குறித்து அறிவியுங்கள்.

அது மட்டுமல்ல மது போதை அட்டகாசங்கள், போதைப் பொருட்கள் பாவனை, விற்பனை இவை போன்ற அனைத்து சட்டவிரோத செயற்பாடுகள் குறித்தும் தகவல்களை பொலிஸாருடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

சில பகுதிகளில் இளைஞர்கள் குழுவாகச் சேர்ந்து பொதுமக்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தி வருகிறார்கள். இத்தகையவர்கள் நிச்சயமாக எமது விசேட நடவடிக்கைகள் மூலம் அடக்கப்படுவார்கள். அவர்கள் குறித்த தகவல்களையும் தருமாறு பொதுமக்களைக் கோருகிறோம்.

எனது மற்றும் வட மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருடைய இலக்கங்களை வழங்கியுள்ளேன். இந்த இலக்கங்களுக்கு நீங்கள் எந்த அச்சமும் இன்றி குற்றங்கள் தொடர்பில் தகவல்களை வழங்க முடியும்.

தகவல் தருபவர்கள் தொடர்பில் நிச்சயமாக இரகசியம் பேணப்படும் என்பதை மீண்டும் மீண்டும் உறுதியளிக்கிறேன். 0717582222 என்ற என்னுடைய இலக்கத்திற்கோ அல்லது 0718592020 என்ற எனது பிரத்தியேகச் செயலாளரின் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு தகவல்களை வழங்க முடியும்.

வட மாகாணத்தில் விசேடமாக யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் வன்முறைகள் சட்டவிரோத சம்பவங்களைப் கட்டுப்படுத்த எங்களுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்புத் தர வேண்டும். விசேடமாக ஊடகங்கள் இந்த நடவடிக்கையில் எங்களுடன் ஒத்துழைக்க வேண்டும்.

தொடர்ந்தும் இவ்வாறான தவறுகள் இந்தப் பகுதிகளில் இடம்பெறுவதை நாம் அனுமதிக்க முடியாது. ஒவ்வொரு மக்களதும் அவர்களின் சொத்துக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது பொலிஸாரின் கடமையாகும்.

இதனை உறுதி செய்ய நாங்கள் முன்னெடுக்க உத்தேசித்துள்ள இந்த விசேட நடவடிக்கைகளுக்கு விசேட அதிரடிப் படையினர், படையினர், கடற்படையினர் உட்பட அனைத்து பாதுகாப்புத் தரப்பினரும் தேவைகளுக்கு ஏற்ப பயன்படுத்தப்படுவார்கள்.

நாங்கள் முன்னெடுக்கவுள்ள விசேட பாதுகாப்பு நடவடிக்கைள் மற்றும் விசேட தேடுதல் நடவடிக்கைகள் பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு மட்டுமே.

இது தேசிய பாதுகாப்பையும் பொதுமக்களின் பாதுகாப்பையும் நோக்கமாகக் கொண்ட நடவடிக்கையாக மட்டுமே இருக்கும். இந்த நடவடிக்கைகளில் எந்த அரசியல் பின்புலமோ அல்லது இனத்துவ ரீதியான அழுத்தங்களோ, மொழி அல்லது சமய ரீதியான நடவடிக்கையாகவோ இருக்காது என்பதை உறுதிப்படுத்துகிறேன் என்றார் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர. (செ-4)

## அமெரிக்க துணைத்...

விக்னேஸ்வரனை நேற்றையதினம் அவரது வாசஸ்தலத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

வடக்கின் தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாகவும், அபிவிருத்திகள் தொடர்பாகவும், மற்றும் இலங்கை அரசாங்கத்தில் அமைக்கப்பட்ட காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் தொடர்பாகவும் கலந்துரையாடியிருந்தனர். குறித்த சந்திப்பின் பின்னர், வலிவடக்கில் அண்மையில் விடுவிக்கப்பட்ட மயிலிட்டி துறைமுகத்தையும் அமெரிக்கத் துணைத்தூதுவர் சென்று பார்வையிட்டிருந்தார். (செ-9)

## இரவில் பலர்...

திபதி இவ்வாறு கூறியுள்ளார்.

அதேபோல் அரசில் உள்ள அமைச்சர்கள், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இரகசியமாக சந்திப்பதும் எனக்குத் தெரியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (செ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிந்தானந்தவுக்கு...

பில் இருக்கும் அளுத்கமகேவின் கடவுச்சீட்டை தலா 10 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப்பிணையின் கீழ் விடுவிக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்த உத்தரவை மின்னஞ்சல் மூலம் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டா 23☛


## ஆங்கில வகுப்பு

தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 0767070069
M.Suren (9911)

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

(C-9206)

UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240
♦ யாழ்ப்பாணம் ♦ கிளிநொச்சி ♦ நெல்லியடி
♦ பருத்தித்துறை ♦ வல்வெட்டித்துறை ♦ சாவகச்சேரி



8ம் அணி மாணவர்களும் வேலைவாய்ப்பில் இணைந்தனர்
O/L உடன்
மாதம் 25,000/-க்கு மேல் சம்பாதிக்க

நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு பயிற்சியுடன் வேலைவாய்ப்பை வழங்கி
வெற்றிநடை போடும்

Diploma in Tourism & Hotel Management — 9ம் அணி

3 மாத இலவச ஆங்கில வகுப்புடன்

புதிய பிரிவு ஆரம்பம்: ஒகஸ்ட் 2 புதன் 9மணி

பயிற்சிக் காலத்திலேயே பணம் சம்பாதிக்கலாம்
யாழ் - கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு

SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY

அனுமதிகளுக்கு 077 3616 798 / 021 222 0011

175, 1ஆம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி), யாழ்ப்பாணம். (C-9222)

## வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

11kg மேற்பட்ட பொதிகளுக்கு 1kg க்கான கட்டணம்
UK – 550/-, FRANCE – 700/-, GERMANY – 650/-, SWISS – 750/-, CANADA – 950/-
மற்ற நாடுகளுக்கும் விசேட கட்டணம் உண்டு.
சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களூடாக செய்து கொடுக்கப்படும்

### திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்

- 216, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
- 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி,
- 18, பிரதான வீதி, நெல்லியடி.

0777554528 (9994)

DHL aramex SKYNET WORLDWIDE EXPRESS


## கர்ப்பிணி...

யில் நேற்று விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதுகுறித்த இரு சந்தேக நபர்களையும் எதிர்வரும 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் நடைபெற்ற வழக்கு விசாரணைகளில் குறித்த சந்தேக நபர்களிடம் 23☛



## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

### நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

### 1816 - 2017

அகத்தில் இருத்தியே - எம்மை
அகிலம் காணவைத்து அழகுபார்த்த - எம்
மத்திய தாய்க்கு இன்று - அகவை
இருநூறு கடந்து ஒன்றாகிறது...!!!
நேற்றுப்போல் இருக்கிறது - எம் தாயின்
தோற்றமும் வளர்ச்சியும் - இன்றும்
புத்தாடை உடுத்தி புதுப்பொலிவு பெற்று
சீவிச் சிங்காரித்து புதுக் கோலத்துடன் புன்னகைக்கிறாள்
சுமந்து சுமந்து சுகப்பிரவசமாய்
எத்தனை ஆயிரம் சான்றோரை
தந்து சாதனை படைத்தவள்
இருநூற்றி ஒன்று அல்ல ஈராயிரம் ஆண்டுகள்
கடந்தும் இப்படியே!! இன்னும் இன்னும்
வாழ்க வளர்க என்று எம் தாயை
வணங்கியே வாழ்த்துகின்றோம்.

- மத்தியின் மைந்தர்கள்

பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி. (9996)

## ஆண்டுகள் பத்து உன் நினைவுகளுடன்...

### சகாதேவன் நிலக்ஷன்

1985.11.08 - 2007.08.01




ஐயிரண்டு திங்கள் அன்னையவள் சுமந்து
அவனியிலே அழகாய் வாழ வழிசமைத்தாள்
கொஞ்சும் குழந்தையாய் குழைந்து கதை சொல்ல
நெஞ்சில் சுமந்தோம் பஞ்சாய் நீ பறந்தாய்.
இழந்த காலமது இமைப்பொழுதில் உருண்டோடி
ஒரு தசாப்தமானதுவே ஆனாலும் ;
எல்லோர் விழிகளிலும் வற்றாத நதிகளன்றோ
வடிந்தோட வைக்கின்றாய்.
தானத்தில் சிறந்தவனே ஏதிலார் தோழனே
ஒழுக்க நெறி நின்ற உத்தமனே
வீறு கொண்ட உன் பேச்சு
எந்நாளும் எம் காதில் ஒலிக்கின்றதே
வானம் விரைந்து செல்லவா நிலா எனப் பெயரிட்டோம்
காற்று வந்து உன்னருகே எம் சோகங்கள் தருகின்றதா
நிலாவே!
பூவுடல் தந்து புத்தொளி வீசி
வானிடம் சென்று வாழிடம் கொண்டவனே
நிலா இருக்கும் எண்ணில் காலம் வரை
நிலைத்தே நீயிருப்பாய் பூவுலகில் நிலவாக.
நின் நினைவுகளோடு.....

அம்மா, டடா, அண்ணா, அண்ணி, குட்டிநிலா.

உ50,(47) புகையிரத நிலைய வீதி கொக்குவில் 2017.08.01 (9984)

## கண்ணீர் அஞ்சலி



### திரு.பொன்னுத்துரை பாலகிருஸ்ணன்

(UNHCR நிறுவன முன்னாள் திட்ட அலுவலர்)

### பாலா சேர்!



எம் அணியில் நீங்கள் அனைத்திலும் சிறந்தவர்
ஜெசாக்கின் ஆடுகளத்தில் நீங்கள் அதிரடி ஆட்டக்காரன்
நலிவுற்ற மக்களின் நல்வாழ்வுப் பணியாளர்
சமூக அக்கறைகொண்ட சமூக சேவையாளன்
நீங்கள் ஏற்றி வைத்த **ஜெசாக்** எனும் ஒளி விளக்கு
அணைந்துவிடக் கூடாது என
பல மேடைகளில் எம்மை நல்வழிப்படுத்தினீர்கள்
வெற்றிகள் குவிந்த போதும் எம்மோடு சேர்ந்திருந்து எம்மை
பலம்மிக்கவர் ஆக்கினீர்கள்
ஊருக்காய் உழைத்து ஊர் போற்ற வாழ்ந்துவிட்டு
இன்று உறங்கச் சென்றுவிட்டீர்கள்
விதியெனும் விளையாட்டில் விடையேதும் சொல்லாமல்
விடைபெற்று போனதேனோ?
விடை தெரியாமல் கலங்குகிறோம்
நீங்கள் வளர்த்த குழந்தைகள் நாம்...
உங்கள் பூதவுடலுக்கு மானசீகமாய் மலர் தூவி
கண்ணீரை காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் உறவுகளுக்கு எம் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணியாளர்கள் (JSAC)
யாழ். சமூக செயற்பாட்டு மையம்
JSAC (C-9221)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org